கல்கி



KALKI 15-2-1976 75 காசு



சத்துமிகுந்த, சுவையான
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்
B
R
I
T
A
N
N
I
A
Glaxo
BISCUITS
BRITANNIA
Glaxo
BISCUITS
வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள் அருமையான தனிச் சுவையோடு மேம்பட்டு விளங்குவது ஏன்? சத்துச் செறிந்த ஆரோக்கியமான குணச்சிறப்பே காரணம். ஆசையோடு குழந்தைகள் அவற்றை விரும்பிச் சுவைத்து வளருகின்றனர்! பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்— வளரும் குழந்தைகளுக்குச் சுவையான துணை.
லின்டாஸ்-BBC.GLX 6-140 TM

விலையை ஒப்பிடுக.
தரத்தை சோதித்திடுக.

பாய்ண்ட்


தரமான டிட்டர்ஜண்ட்
சலவைப் பவுடர்



MCA/PD/4

மைசூர்
சந்தன சோப்
தயாரிப்பாளர்
அளிப்பது

பெங்களூர் அரசினர் சோப்பு
தொழிற்சாலையின் ஒரு தரமான தயாரிப்பு


வாழ்க்கையில் அதிர்ஷ்டமுள்ள ஆடவர் ஒருவரை மீண்டும் சந்திக்கும்போது...
...அவர் அணிந்துள்ள ஆடைகளின் அழகையும் பாருங்கள்!



கல்கி

ராக்ஷஸ
மாசி 3

○

பிப்ரவரி 15
1976

○

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

முடியாப் பிரச்னை

''ஹிப்பியின் தலையில்
அப்பிய முடிக்கு
எப்படிச் சிணுக்கெடுப்பது?''
என்று கேட்டது சீப்பு.


''ஆழாக்கு படியாக
அளந்தாலும் கூட
கட்டு படியாகாதே!'' எனக்
கசிந்தது எண்ணெய்.

''வெட்ட முயன்றால்என்
மேனி உடையுமே
கஷ்டம்! கஷ்டம்!''
என்றது கத்தரிக்கோல்.

திருப்பதியிலிருந்து
திரும்பி வந்த
'கத்தி' சொல்லிற்று —
''கவலையை விடுங்கள்!
நான் கவனித்துக் கொள்கிறேன்!''

— சக்திக்கனல்





சமையலுக்குப் பெருந்துணை
ஓய்வில்லாத தாய்மார்கள் சுவையான சமையல் செய்ய சுலபமான வழி! இந்த 3 பெருந்துணைகளைப் பின்பற்றி, பல்வேறு இன்பமூட்டும் தின்பண்டங்களைத் தயாரித்து மகிழுங்கள்!
பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்
சமோசா, பட்டீஸ் ஆகியவற்றை அதிமெல்லியதாகவும் மொரமொரப்பாகவும் ஆக்குகின்றது. குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்க உதவுகிறது.
Brown & Polson Cornflour
பிரவுன் & போல்ஸன்
வெரய்டி கஸ்டர்டு பவுடர்
6 இனிமையான சுவை வகைகள்! குடும்பத்தினரை மகிழ்விக்க வீட்டிலேயே புட்டிங், பாயசம், ட்ரைஃபிள் ஆகிய பல்வேறு இன்சுவையுள்ள பண்டங்கள் தயாரிக்க சாலச் சிறந்தது.
Brown & Polson
ரெக்ஸ்
பேகிங் பவுடர்
கேக், பிஸ்கோத்து, பக்கோடா, பூரி, குலாப் ஜாமூன் ஆகியவற்றை சுவைபட அதி மென்மையாகத் தயாரிக்க உதவுகிறது. சிறிதளவே சிறப்பாகச் செய்து முடிக்கிறது!
REX BAKING POWDER
OBM 5457 TAM
பிரவுன் & போல்ஸன் மற்றும் ரெக்ஸ்
தரமுயர்ந்த தயாரிப்புகள். அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப்பட்டவை—கிடைப்பனவற்றிலேயே சிறந்தவை.
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீனிவாஸ் ஹவுஸ்.
எச். சோமானி மார்க,
பம்பாய் 400 001.

நகர்ப்புறத் தூய்மை

"சுத்தம் சோறு போடும்" என்பார்கள். சோறு போடுகிறதோ இல்லையோ, உண்ணும் சோறும் சுவாசிக்கும் காற்றும் நோய் நொடி உண்டாக்கும் விஷமாக மாறாமலிருக்கச் சுத்தம் மிக மிக அவசியமானதாகும். இந்த அவசியமான பணியை நமது முன்னாள் ராஷ்டிரபதி வி. வி. கிரி மக்களுக்கு உணர்த்தவும், அதிகாரிகளுக்கு உணர்த்தவும் ஒரு பெரும் இயக்கமே தொடங்கியிருக்கிறார். பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய விஷயம்.

வீட்டுக் குப்பையை வீட்டு வாசலில் தெருவில் கொட்டுவது நம்மவர் வழக்கம். பல தெருக்களில் குப்பைத் தொட்டிகளே கிடையாது. பத்தடி தள்ளிக் குப்பைத் தொட்டி இருந்தாலும் அதில் கொண்டு போய்க் கொட்ட மாட்டார்கள். நாம் வசிக்கும் தெரு நம்முடையது என்ற உணர்ச்சியில்லாததால் இப்படிச் செய்கிறார்கள். 'நாம் மட்டும் ஒழுங்காக இருந்து பயன்? அடுத்த வீட்டுக்காரனும் தெருவில்தான் போடுகிறான்! பக்கத்து வீட்டுக்காரனும் தெருவில் தான் போடுகிறான்' என்று பதில் சொல்வார்கள். ஒழுங்காக நடந்து கொள்பவர் நான்கு பேர் சேர்ந்து ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்பவர்களிடம் சென்று கேட்டுக் கொண்டால் அவர்கள் மனம் திருந்துவார்கள். இப்படிப் பொது சுகாதார விதிகளை உணர்ந்து நடந்து கொள்ளும் நபர்கள் கொண்ட கமிட்டி அமைக்கவும், அவர்கள் விழிப்புடன் பணியாற்றுமாறு கோரவும் முன்னாள் ஜனாதிபதி முன்வந்திருப்பது அவர் தமது வாழ்க்கையில் செய்த பல நற்பணிகளுள் சிறப்பான ஒன்று.

சென்னை நகரில் பல பகுதிகளில் சிமெண்ட் நடை பாதை அமைத்திருக்கிறார்கள். அந்த நடை பாதைகள் நடக்க முடியாத அளவுக்கு அசிங்கப்படுத்தப்படுகின்றன. இதற்குக் காரணம் போதிய மலஜல கழிவிடங்களைச் சென்னை நகரசபை கட்டிக் கொடுக்காததே. அமைந்துள்ள சில பொது இடங்களும், உள்ளே கால் எடுத்து வைக்க முடியாதபடியும், கண் திறந்து போக முடியாதவாறும் இருக்கின்றன. தற்போது நகரசபையின் விசேஷ அதிகாரி திரு அந்தோனி பொறுப்பேற்ற பிறகு சில ஆரோக்கிய மாறுதல்களைச் செய்து வருகிறார். ஆயினும் பெருகி வரும் ஜனத்தொகைக்கும் பரப்பளவில் வளர்ந்து வரும் நகருக்கும் பராமரிப்பில் காண்பிக்கப்படும் இந்த முன்னேற்றம் மட்டும் போதாது. கழிவிடங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டும்.

இன்னொரு விஷயமும் கவனத்துக்குரியது. எல்லா சாதியினரும் பரம்பரைத் தொழில்களை விட்டு வேறு வேறு தொழில்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் தெரு சுத்தம் செய்யவும் கழிவிடங்களைச் சுத்தம் செய்யவும் மட்டும் ஒரு சாதியார் நிலைத்து இருந்து வருவார் என்று எண்ணுவதைப் போன்ற பேதைமை இருக்க முடியாது. ஆகவே, மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கழிவிடத்தைச் சுத்தமாக வைக்க வேண்டியதைத் தன் கடமையாக ஏற்க வேண்டும். இதற்குத் தயங்கக் கூடாது என்று காந்திஜி கற்றுத் தந்தார். தொழிலில் உயர்வு தாழ்வு எண்ணுதல் பாவம் என்றார். டாகுரின் விருந்தினராக சாந்தி நிகேதனத்தில் தங்கிய போது, கக்கூஸைத் தாமே சுத்தப்படுத்தினார்!

நம் மக்களிடம் பல கெட்ட வழக்கங்கள். கண்ட இடத்தில் துப்புவது; புகையிலை வெற்றிலை காவி ஏறிய எச்சிலை நடுத் தெருவில் அல்லது சிமிட்டி போட்ட நடைபாதையில் துப்புவது; மூக்குச் சளியைச் சிந்தி எறிவது; இருமல் கோழையைத் துப்புவது, புகைத்து முடிந்த பீடி சிகரெட்டை நடுத் தெருவில் எறிவது முதலியவை. மனமாற்றத்தின் மூலம் இவற்றுக்கு முடிவு கட்ட முயலுவதோடு சாலைகளை அசுத்தப்படுத்துவதைத் தண்டனைக்குரிய குற்றமாக்கவும் வேண்டும்.

சுகாதார ஒழுக்கத்தைப் பரப்பும் படையின் அங்கத்தினராக நாட்டில் ஒவ்வொரு குடிமகனுமே தன்னைக் கருதிக் கொள்ளட்டும்.

கல்கி

மலர் 35

இதழ் 29

தமிழ்த்திரு நாட்டைத் தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

அலங்கோலச் சட்டம்!

நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு மசோதாவை அரை வேக்காடாக நாடாளு மன்றத்தில் கொணர்ந்து அவசரம் அவசரமாக நிறைவேற்றி விட்டார்கள். பரிசீலனைக் கமிட்டிக்கு விடக்கூட ஒப்பவில்லை. நடைமுறைச் சிக்கல்கள் ஏதும் ஏற்பட்டால் அப்போது தேவையான திருத்தங்களைச் செய்து கொள்ளலாம் என்று ஒரே போடாகப் போட்டு விட்டார் அமைச்சர் திரு ரகுராமையா.

நடைமுறைச் சிக்கல்கள் நிச்சயம் இருக்கவே செய்யும். சாலையிலிருந்து தமது வீட்டுக்குப் போக ஹெலிகாப்டரில் ஏறித்தான் அந்தப் பக்கம் சென்று இறங்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால்கூட வியப்பதற்கில்லை.

தர உத்தேசித்துள்ள நஷ்டஈடோ பிச்சைக் காசு. அது ஒருபுறம் இருக்க நகர்ப்புற நில உச்சவரம்புக் கொள்கையே நகரின் வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் தடை. இதனால் நிலம் வாங்கி விற்பதும், வீடு கட்டுமான வேலைகளும் ஸ்தம்பித்துப் போகும். சர்க்காருக்கு ஸ்டாம்புப் பத்திர வருமானம், சொத்து வரி, வருமான வரி முதலியவற்றில் வருவாய் இழப்பு. அதோடு நகரில் பெருகி வரும் ஜனத் தொகைக்கு ஏற்ப மக்களுக்கு வீடுகள் கட்டித் தருகிற முழுப் பொறுப்பையும் அரசே மேற்கொள்ள வேண்டிய நிலை தோன்றும். அரசாங்கச் செலவினங்கள் அதிகமாகும். இது மீண்டும் சங்கிலித் தொடராக வேண்டாத பல விளைவுகளை உருவாக்கும்.

ஏற்கனவே எஃகு சிமெண்ட் தொழில்களில் தேக்க நிலை. இத்தேக்க நிலை வீடுகள் கட்டத் தேவைப்படும் வேறு பல உபகரணங்கள் தயாரிக்கும் தொழில்களுக்கும் பரவும்.

கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்கள் பரவலாக அன்றி வானை நோக்கியே வளர்கின்றன. இங்கே உச்சவரம்புக்கு அர்த்தமேயில்லை. தில்லி, சென்னை போன்ற நகரங்கள் தாம் விஸ்தாரமாக வளர வாய்ப்பு. இங்கே உச்சவரம்பு விதிப்பதானாலும் பரந்த மனப்பான்மை வேண்டும். 'காந்தி நகர் போன்ற நகர்ப் பகுதிகளில் ஐந்தாறு கிரவுண்டு நிலத்தில் வீடு கட்டிக் கொண்டிருப்பவர்கள் நிலை என்ன ?' என்று வேதனையுடன் வினவுகிறார் திரு கே. கே. நம்பியார். சென்னையில் பல குடியிருப்பு வட்டாரங்களை எழிலுற அமைக்கத் திட்டம் தீட்டியவர் அவர்.

வீட்டைச் சுற்றி ஒரு தோட்டம் இருப்பது சமூகத் துரோகம் அல்ல, முதலாளித்துவமும் ஆகாது. காய்கறித் தோட்டம் உணவுத் தட்டுப்பாட்டைக் குறைக்கும். தோட்டத்தில் வேலை செய்து ஒரு குடும்பம் பிழைக்கும். பூந்தோட்டம் உரிமையாளரின் மன ஆரோக்கியத்துக்கு மட்டுமல்ல, சமூகத்தின் உடல் ஆரோக்கியத்துக்கும் அவசியம்.

மேனாடுகளில் குடியிருப்புக்களை அமைப்போர் சுற்றுப்புறத்தைச் சிங்காரச் சிலைகளாலும் வண்ணத் தோட்டங்களாலும் அழகு படுத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிறார்கள். இங்கே இருக்கிற அழகையும் கெடுக்க ஆயத்தமாகிறார்கள்.

கேக் சாப்பிடலாம்!

மத்திய அமைச்சர் திரு மாளவியா அதியற்புதமான யோசனை தெரிவித்திருக்கிறார். எல்லாரும் டெரிலீன் டெரிகாட் துணி அணிய வேண்டுமாம். இதனால் பருத்தி சாகுபடியாகும் நிலத்தின் பரப்பளவு குறைந்து அங்கே உணவு தானியம் பயிராகுமாம், உணவுப் பற்றாக்குறை தீர்ந்து போகுமாம்!

ரொட்டி இல்லை என்று கூக்குரலிட்ட மக்களைப் பார்த்து, ''கேக் சாப்பிடுவதுதானே?'' என்று கேட்ட பிரெஞ்சு அரசியின் நினைவு நமக்கு வருகிறது.

டெரிலீன் டெரிகாட் சட்டையின் விலை என்ன என்பது நமக்குத் தெரியும். எத்தனை பேருக்கு வாங்கும் சக்தி இருக்கிறது?

மாளவியாவிடம் கேட்டுக் கொள்கிறோம் : செயற்கை நூலிழைகள் மீதுள்ள அபரிமிதமான வரிகளைக் குறைக்க முதலில் ஏற்பாடு செய்யுங்கள். டெரிலீன், டெரிகாட் துணி வகைகள் மலிவு விலைக்குக் கிடைக்கப் பண்ணுங்கள். அதன் பிறகு தங்கள் மேலான யோசனையைத் தெரிவியுங்கள்.

ராஜாஜி சிந்தனை

சத்தியாக்கிரகம்

தவறான நோக்கங்களுக்காகச் சத்தியாக்கிரகம் செய்தால் அது சத்தியாக்கிரகமன்று. பலாத்காரமேயாகும். தவறான நோக்கங்களைச் சாதித்துக் கொள்ள ஏற்பட்டதல்ல சத்தியாக்கிரக முறைகள் என்பவை. பாஷாணத்தை மருந்தாக உபயோகிக்கலாமேயொழிய மக்களைக் கொல்வதற்காக உபயோகிக்கக் கூடாது.

சத்தியாக்கிரகம் என்னும் புதிய ஆயுதத்தை வரவேற்கும் இளைஞர்களே, அதைத் தவறாக உபயோகிக்காதீர்கள் என எச்சரிக்கிறேன். சத்தியாக்கிரகத்தைத் தவறாக உபயோகித்தால் அதுவே சுதந்திரத்தின் இறுதியாகிவிடும். சகல மக்களுக்கும் செயல் சுதந்திரம் அளிக்க வேண்டும். பிறர்க்குத் துன்பம் விளைவிக்காத அளவு பேச்சு சுதந்திரமும் செயல் சுதந்திரமும் வழங்க வேண்டும். ஒவ்வொருவரும் தவறு செய்வதிலிருந்து விஷயங்களைக் கற்றுக் கொள்ளவும் விட்டுவிட வேண்டும். இந்த மனோபாவத்தை மேற்கொண்டால் அப்பொழுது சகிப்புத் தன்மையும் சமாதானமும் உண்டாகிவிடும்.

— ராஜாஜி மணிவாசகம்

வேத மதத்தின் விசேஷ அம்சங்கள் 1



மற்ற மதங்களில் இல்லாத பல அம்சங்கள் நம் மதத்தில் இருக்கின்றன. அதில் கர்மக் கொள்கை ஒன்று. (Karma Theory) என்று இதைச் சொல்கிறார்கள். நம் மதத்திலிருந்தே வந்த பௌத்தம் போன்ற மதங்கள் இதை ஒப்புக் கொண்டாலும், ஏனைய மதங்களில் இந்தக் கொள்கை இல்லை.

'கர்மா தியரி' என்ன? எந்தச் செயலுக்கும் பிரதியாக ஒரு விளைவு உண்டு. **Cause and effect** (காரணம் – விளைவு) என்பதாகவும், **action and reaction** (செயல் – பிரதிச் செயல்) என்பதாகவும் இவை தவிர்க்க முடியாத விதிகளாக இருக்கின்றன என்று ஃபிஸிக்ஸில் சொல்கிறார்கள். பௌதிகத்தில் சொல்வதையே மநுஷ்ய வாழ்க்கைக்கும் பொருத்தி, 'கர்மக் கொள்கை'யை நம் ஆன்றோர்கள் கூறுகிறார்கள். பிரபஞ்சத்தில் ஜடமான பூதங்கள் போலவே, சைதன்யம் என்ற அறிவுள்ள ஜீவர்களும் அடக்கம். இவை ஒன்று சேர்ந்துதான் லோக வாழ்வு. எனவே ஒன்றுக்கு இருக்கிற நியதி, தர்மம் இன்னொன்றுக்கும் இருக்கத்தான் வேண்டும். மனிதனின் ஒவ்வொரு கர்மாவுக்கும் விளைவாக ஒரு பலன் உண்டாகித்தான் தீர வேண்டும் என்பதே கர்மா தியரி. 'பாப கர்மம் செய்தால் அதற்கான தண்டனையை மநுஷ்யன் அநுபவிக்க வேண்டும். புண்ணிய கர்மம் செய்தால் அதற்கான நற்பலன் இவனை வந்தடையும்' என்கிறது நம் மதம்.

இம்மாதிரி பாப புண்ணிய கர்மங்களை மனிதன் அநுபவிக்க வேண்டும் என்பதாலேயே அவனுக்குப் 'பல பிறவிகள் உண்டாகின்றன என்கிறது நம் மதம். 'பாபமும், புண்ணியமும் உடனுக்குடன் பலன் தருவதில்லை. ஒரு ஜன்மாவில் பண்ணின கர்மாவின் பலனை இன்னொரு ஜன்மாவிலும் அநுபவிக்க வேண்டியதாகிறது' என்கிறது.

நல்லது செய்ய வேண்டும், கெட்டது செய்யக் கூடாது என்பதைச் சகல மதங்களும் சொன்னாலும் அவை நம் மதம் மாதிரி இத்தனை அழுத்தம் கொடுத்துக் காரணம்–விளைவு (**cause and effect**) தொடர்பைச் சொல்லவில்லை. மறு பிறப்புக் கொள்கையை (**reincarnation theory**) மற்ற மதங்கள் – பாரத தேசத்தில் தோன்றாத மற்ற மதங்களில் ஏதுவுமே – சொல்லவில்லை. அது மட்டுமில்லை. இதற்கு மாறாகப் பல தினுசான கருத்துக்களைச் சொல்கின்றன. ஆனபடியால் அந்த மதஸ்தர்கள் மனிதனுக்குக் கர்மா தீருகிற வரை பல ஜன்மங்கள் உண்டு என்ற நம் கொள்கையைப் பலமாக ஆட்சேபிப்பார்கள். பொதுவாக அந்நிய மதஸ்தர் கருத்து என்ன என்றால், 'இந்த ஒரே ஜன்மாவோடு மநுஷ்யனுக்குப் பிறவி தீர்ந்துவிடுகிறது. இந்த ஜன்மா முடிந்தபின் அவன் உயிர் என்றைக்கோ ஒரு நாள் ஸ்வாமி கூறுகிற தீர்ப்பைக் கேட்பதற்காக ஓரிடத்தில் போய் இருக்கும். அந்த நாளில் (**Day of Judgment**) ஸ்வாமி, இவன் இந்தப் பிறவியில் செய்த பாப புண்ணியங்களைக் கணக்குப் பார்த்து இவனை நித்திய ஸ்வர்க்க வாசத்துக்கோ, அல்லது நிரந்தர நரகவாசத்துக்கோ (**eternal damnation**) அனுப்பிவிடுவார்' என்பதேயாகும்.

என்னிடம் வந்த ஒரு வெள்ளைக்காரர் – இப்போதெல்லாம் தான் என்னிடம் நிறைய வெள்ளைக்காரர்கள் வந்தபடி இருக்கிறார்களே அவர்களில் ஒருத்தர், இவர் புஸ்தகம் கிஸ்தகம் எழுதிப் பிரசித்தி பெற்றவர் – வேடிக்கையாகச் சொன்னார் : அவருக்கு, பைபிளில்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்



வட்ட மேஜை

என் மகன் சிரஞ்சீவி சத்தியமூர்த்தி 17–7–1951ல் பிறந்தான். முதல் வகுப்பிலிருந்து தொடர்ந்து பரிசு வாங்கி வருகிறான். ஒவ்வொரு வகுப்பும் ஒவ்வொரு ஊரில்தான் படித்தான். 1966 மார்ச்சில் வயது விலக்குப் பெற்று எஸ்.எஸ்.எல்.ஸி. எழுதி 488/600 மார்க் வாங்கிப் பண்ருட்டி உயர்நிலைப் பள்ளியில் முதலாவது மாணவனாக வந்தான். பி.யூ.ஸி.யில் சேர்க்கச் சென்னை லயோலா, விவேகானந்தா கல்லூரிகளில் முயற்சி செய்தேன். ''மனுப் போடத் தாமதம் செய்து விட்டீர்கள். இடமில்லை'' என்று சொல்லி என்னையும் என் மகனையும் முதுகில் கையைக் கொடுத்து வெளியே அனுப்பிக் கதவைச் சாத்தினார்கள். சென்னையிலுள்ள உறவினர் ஒருவர் தாமே படிக்க வைப்பதாகக் கூறிப் பின் மௌனமாகி விட்டார். பிறகு கடலூர் அரசினர் கலைக் கல்லூரியில் சேர்ந்து பி.யூ.ஸி. படித்து முதல் தகுதியும் பெற்றான். இதனிடையில் டெல்லி தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையப் பரீட்சை எழுதி பாஸ் செய்தான். ஸ்காலர்ஷிப் கிடைத்தது. ஆனால் பி. யூ. ஸி.யில் மூன்றாவது டர்ம் சம்பளம் கட்டப் பணமில்லாமல் சைக்கிளை விற்றுக் கட்டினேன்.

பின் அண்ணாமலை சர்வகலாசாலையில் பி.எஸ்ஸி. ரசாயனத்துக்கு முதலில் இடம் கிடைக்கவில்லை. நேரில் ரசாயனப் பேராசிரியரைப் பார்த்துக் கேட்டதன் பேரில் இடம் கிடைத்தது. பல்கலைக் கழகத்திலேயே முதல் தகுதி பெற்றுப் பரிசு வாங்கினான். பிறகு எம். எஸ்ஸி. ரசாயனத்தில் முதல் தகுதி பெற்றுப் பரிசு வாங்கினான். அண்ணாமலை சர்வ கலாசாலை ரசாயன 'ரீடர்' டாக்டர் ரங்கராஜன் அறிவுரைப்படி 1971 டிசம்பரில் அமெரிக்க கான்ஸல் ஜெனரல் அலுவலகத்தில் நடக்கும் டஃபெல் பரீட்சையில் தேறி டாக்டர் ரங்கராஜன் அவர்களின் உதவியால், 16–8–1972ல் அமெரிக்காவில் உள்ள ஸ்டில் வாட்டர் சென்று, அங்குள்ள ஒக்லஹோமா ஸ்டேட் யூனிவர்ஸிடியில் ஆராய்ச்சி செய்து 9–5–1975ல் டாக்டர் பட்டம் வாங்கியிருக்கிறான். அப்பல்கலைக் கழக ரசாயனப் பேராசிரியர் டாக்டர் ராஃப் அவர்களின் யோசனைப்படியும் உதவியுடனும் 9–9–75ல் கனடா சென்று டொரான்டோ பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் ஜான் போலானியிடம் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறான்.

தகுதி உள்ளவர்களுக்கு உதவவோ ஆதரிக்கவோ இந்த நாட்டில் ஆள் கிடைப்பதே அரிதாக உள்ளது. என் மகனுக்கு இப்பொழுதுதான் இருபத்தி நாலு வயது பூர்த்தியாகியிருக்கிறது.

சிதம்பரம் — க. நாராயணசாமி

நிறையப் புதுக் கவிதைகள் எழுதுகிறவன் என்கிற முறையில் உங்களை மிகவும் நயந்து கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து புதுக் கவிதையைக் கேவலப்படுத்துவதை நிறுத்துங்கள். புதுமைப்பித்தன், கு. ப. ரா., நா. பிச்சமூர்த்தி ஆகியோர் உருவாக்கி வளர்த்த புதுக் கவிதை, நகைச்சுவைத் துணுக்குகள் எழுதப் பயன்படுத்தப்படும் அபத்தத்தை என்னால் சகிக்க முடியவில்லை!

31–1–76
சென்னை–5 — ஆர். கண்ணன்

மனைவி:

வழவழவென்று இருக்காமல்
'வட்டத்தை'ப் போய்ப் பாருங்களேன்
மலைத்து நின்றே மயங்காமல்
'மாவட்டத்தை'த்தான் கேளுங்களேன்
என் பிள்ளைக்கு வேலை கொடுங்கன்னு
எம். எல். ஏ.வைத்தான் கேளுங்களேன்.
மளமளவென்று காரியம் முடிய
மந்திரியிடம்தான் செல்லுங்களேன்.

கணவன்:

சளசளவென்று துளைக்காதே
சலவரியோ டெல்லாம் போச்சு.
வளரும் தமிழ் நாட்டில் நேர்மை
வளரும் காலமும் வந்தாச்சு.

நீடாமங்கலம்
2–2–76 — ச. சேதுராமன்

எங்கு பார்த்தாலும் கடவுள் அன்பே உருவானவர் (God is love) என்று சொல்லி விட்டு, இப்படிப்பட்டவர் தப்புப் பண்ணினவனைத் துளிக்கூடக் கருணையில்லாமல், மீளவே வழியில்லாமல், நித்திய நரகத்துக்கு அனுப்புகிறார் என்று சொல்வது பொருத்தம் இல்லாமல் தோன்றியதாம். எனவே ஒரு பாதிரியாரிடம் சமாதானம் கேட்டாராம். அதற்குப் பாதிரியார், 'நிரந்தர நரகம் இருப்பது வாஸ்தவம். ஆனால் அது நிரந்தரமாகக் காலியாகவே இருக்கிறது' என்றாராம்!

ஆனால் யோசித்துப் பார்த்தால் இதை நாம் ஏற்றுக் கொள்வது சிரமமாயிருக்கும். ஸ்வாமி கருணை காரணமாகப் பாவியைக்கூட நரகத்துக்கு அனுப்பவில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் அவர்கள் சித்தாந்தப்படி அவர் பாவியின் உயிரை எங்கே அனுப்ப முடியும் அவர்கள் கொள்கைப்படி மறு ஜன்மா இல்லையாதலால் பூலோகத்துக்கு மறுபடியும் அனுப்ப முடியாது. ஆனதால் பாபியையும் ஸ்வர்க்கத்துக்குத்தான் அனுப்ப வேண்டியதாகும். அப்படியானால் நாம் லோகத்தில் எந்தப் பாபத்தை வேண்டுமானாலும், எத்தனை பாபங்களை வேண்டுமானாலும், கூசாமல் செய்து கொண்டே போகலாம்; முடிவில் எப்படியும் ஸ்வாமி நம்மை ஸ்வர்க்கத்துக்கு அனுப்பிவிடுவார் என்று ஆகும். அதற்கப்புறம் லோகத்தில் சகலரும் ஒழுங்கு தப்பித்தான் நடப்பார்கள்.

(தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

தி.மு.க. மந்திரி சபையின் வெளியேற்றம்

ஆர். வெங்கடராமன்

சென்ற ஜனவரி 31ம் தேதி, தயை தாட்சண்யமின்றி தி. மு. க. அரசு அகற்றப்பட்டதும், ஜனாதிபதி ஆட்சி தமிழ் நாடு மாநிலத்தில் புகுத்தப்பட்டதும், மக்களுக்கு எந்தவித அதிர்ச்சியையோ, ஆச்சரியத்தையோ உண்டாக்கவில்லை.

சென்ற சில நாட்களாகவே மாநில அரசுக்கும் மத்திய அரசுக்குமிடையே மோதல்கள் தீவிரமடைந்துதான் வந்தன. தாக்குதல் அறிக்கைகளும் பத்திரிகைகளில் இடைவிடாது வெளிவந்தவண்ணம் இருந்தன. இவை நாடறிந்த விஷயம்.

ஆனால், சட்டசபை அதற்குண்டான ஆயுட் காலம் வரை நீடிக்கப்பட்டு, அமைச்சர் அவையும், சட்டசபை முடியும் போது, அத்துடனே மறைந்து போகவிடப்படுமா ? அல்லது, அதன் காலாவதிக்கு முன்னதாகவே கலைக்கப்படுமா என்பது பற்றி மட்டும் மக்கள் மனத்தில் கொஞ்சம் சந்தேகம் இருந்தது. அது இப்போது தெளிவாகி விட்டது. அவ்வளவுதான்.

சட்டசபை கலைக்கப்பட்டு அமைச்சரவை 'கல்தா' கொடுக்கப்பட்ட செய்தியை மக்கள் வரவேற்ற அமோக உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் காணும்போது, தி.மு.க. அமைச்சரவை வெகு காலத்துக்கு முன்னமே மக்களது நம்பிக்கையையும் ஆதரவையும் சந்தேகமற இழந்துவிட்டது என்பது தெளிவாகவே தெரிகிறது.

அமைச்சரவைக்கு ஆதரவு தேடிக் கொள்ளும் வகையில் செய்யப்பட்ட ஆடம்பரமான அணிவகுப்புக்களும் நிமிஷத்துக்கு நிமிஷம் வெளிப்பட்ட பிரசாரங்களும், ஆதரவுப் பிரசாரங்களும் உண்மையை மறைக்க உதவவில்லை. மக்களை ஏமாற்ற முடியவில்லை. இவையனைத்தும் பிரசார மாயை, வெத்து வேட்டு என்றே மக்கள் உணர்ந்தனர்.

ஏதோ திறமையுள்ள சக்தி வாய்ந்த ஓர் அச்சகம், கணக்கின்றிச் செலவு செய்யக் கை நிறைய பணம், கூலிக்கு அமர்த்தப்பட்ட சுவரொட்டிப் பையன்கள் இவை ஒன்று சேர்ந்து, தி. மு. க. அரசின் சாதனைகளை வானளாவப் புகழ்ந்து, கண்ணைப் பறிக்கும் சுவரொட்டிகள் கண்ட இடங்களிலெல்லாம் ஒட்டி ஆதரவு தேடித்தான் பார்த்தார்கள். ஆனால், மக்களின் நிலையான உண்மை ஆதரவு மட்டும் தி.மு.க.வுக்குக் கிடைக்கவில்லை.

கைக் கூலிகளைக் கொண்டு நடத்தப்படும் வெளி ஆடம்பரங்களால் தன்னைத் தானே வேண்டுமானால் ஏமாற்றிக் கொள்ளலாம். இதைத்தான் தி.மு.க. தனக்குச் செய்து கொண்டது.

மாநில ஆட்சியாளரின் அறிக்கையில் கூறப்பட்ட விஷயங்களை ஆதாரமாகக் கொண்டே ஜனாதிபதி தமிழ்நாடு மாநில ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டுள்ளார். இந்த அறிக்கையும் லோக சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையில் தி.மு.க. அரசின் மீது, லஞ்ச ஊழல்கள், கட்சி ஆதரவாளர்களுக்கு அமோக சலுகை, அதிகார துஷ்பிரயோகம், அரசு அதிகாரத்தைக் கட்சி நலனுக்குப் பயன்படுத்துதல், துர் நிர்வாகம் முதலிய கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இவற்றில் குறிக்கப்பட்ட சில குற்றச்சாட்டுக்கள் மூன்று ஆண்டுகள் முன்னரே சாட்டப்பட்டவை. அப்போதே இவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணை நடத்தியிருந்தால், இத்தனை நீண்ட நாட்களாக நமது மக்கள் அநாவசியமாகக் கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லை.....

நீதிபதி ஸர்காரியா தலைமையில் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டுக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யவிருப்பதால், குற்றச்சாட்டுக்களைப் பற்றி இங்கே ஆராய்ச்சி செய்வதற்கில்லை. ஆனால் கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதாலேயே தி.மு.க. அமைச்சர்களுக்கும் தங்கள் கட்சியை எடுத்துச் சொல்லி நீதி பெற வாய்ப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது.

இதைக் கவனியாது, காங்கிரசுக்கு மாற்றுக் கட்சி அரசு தமிழ்நாட்டில் நடைபெறுவதினாலேயே, குற்றப் பத்திரிகை அதன் மீது சாட்டப்பட்டிருக்கிறது என்று சிலர் சொல்லுவதை மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். முன்னர் பஞ்சாப் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி கெய்ரான் மந்திரிசபை மீது குற்ற விசாரணையைக் காங்கிரசு அரசுதான் மேற்கொண்டு நடத்தியது என்பதை மறந்துவிடக் கூடாது. அதே போல, காங்கிரசுக்கு மாற்றுக் கட்சி என்பதனால் அதனிடம் வெளித் தோற்றத்துக்காவது நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் அதனுடைய குற்றங்களைக் கண்டு சும்மா இருந்துவிடவும் முடியாது. லஞ்ச ஊழல் பற்றி யாதாஸ்து சமர்ப்பித்த சந்தானம் கமிஷன், பத்து சட்டசபை அங்கத்தினர்கள் கையெழுத்திட்டுக் குற்றச்சாட்டு மகஜர் கொடுத்தால் விசாரணை செய்ய வேண்டும் என்றுகூட சிபாரிசு செய்திருக்கிறது.

தி. மு. க. அரசு அகற்றப்பட்டதினால் அமோகமான நிம்மதி அடைபவர்கள் கீழ்படிவங்களில் உள்ள சர்க்கார் ஊழியர்களும், அதிகாரிகளும். வட்ட, மாவட்டக் கட்சிப் பிரமுகர்களின் கொடுங்கோன்மையினால் அவர்கள்தாம் மிகுதியான நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டனர். கைது செய்யவும், விடுதலை செய்யவும், கடன்களையும் மானியங்களையும் கொடுக்கவும், நிறுத்தவும், தடுக்கவும் வேண்டாத அதிகாரிகளை மாற்றவும், அமைச்சர்களிடம் நல்லதும் பொல்லாததும் சொல்லி, நேர்மையான நிர்வாகம் நடைபெறவொட்டாது தடுக்கவும் கட்சிப் பிரமுகர்கள் தலையீடும் ஆடிய ஆட்டமும் பயங்கரமானது. தூண்டு போட்ட இந்த 'உள்ளூர்ப் புள்ளி'களின் தலையீடுகளால் நியாயம் கிடைக்காத நிலைமை எத்தனையோ! தனது குறைபாடுகளை இனியேனும் உணர்ந்து திருத்திக் கொள்ளுமேயானால் தி. மு. க. கட்சிக்குக்கூட இந்த ஜனாதிபதி ஆட்சி நடவடிக்கை ஒரு கண்விழிப்பாகக்கூட ஆகும்!

(சுயராஜ்யாவில் எழுதியதன் தமிழாக்கம்)

நீண்ட காலம் ஓர் அரசியல் கட்சியில் இருந்துவிட்டு, பிறகு ஏதோ ஒரு காரணத்துக்காக — அல்லது சில காரணங்களுக்காக — அக்கட்சியைவிட்டு வெளியேறும் பிரமுகர்கள், தாம் அதுவரையில் இருந்த கட்சியையும் அதன் முக்கிய தலைவர்களையும் 'பொதுக் கூட்டங்களில் சந்தி சிரிக்க வைப்பதை நாம்' கண்கூடாக பார்த்து வருகிறோம் அல்லவா ?

அரசியலில் மட்டும்தான் இப்படி நடக்க வேண்டும் என்பது தலையெழுத்தா என்ன ? வாழ்க்கையின் இதர துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களும் இதே மாதிரி பாணியைப் பின்பற்றிப் பொதுமேடைகளில் பேசினால் எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்த்தேன்........



சரக்கு மாஸ்டர் சுப்பாமணி : இத்தனை நாட்களாக 'நியோ கிருஷ்ண பவான்' அடுப்படியில் வியர்வை சிந்தி, முதுகு வலிக்க — இடுப்பொடிய — வேலை செய்து, கைகளில் எண்ணெய்க் கொப்பளமும், உடம்பில் கரிப் புகையும் வீரத் தழும்புகளாகப் பெற்றவன் நான்.... சென்ற மகாமகத்தின் போது— 1968ம் ஆண்டு என்று நினைக்கிறேன் — இந்தக் கும்பகோணப் பெருநகரிலே கூடிய மக்கள் வெள்ளத்தின் பசி தீர்க்கச் சுடச்சுட மசால் வடைகளை ஆயிரக்கணக்கில் தயார் செய்தபோது, வடைக்கான மாவு சரியான பதத்தில் அமையாத . காரணத்தால் நானே மாவரைக்க முயன்று, என் வலது கைக் கட்டை விரல் நகத்தைத் தியாகம் செய்தவன்... இன்றைக்கு ஏன் 'நியோ கிருஷ்ண பவானை' விட்டு வெளியேறினேன் ? சொல்கிறேன். அதன் முதலாளிக்குப் பணத்தாசை பிடித்துவிட்டது. அவர் செய்த ஊழல்களைப் பட்டியல் போட்டுக் காட்டட்டுமா?... தேங்காய்ச் சட்டினியில் தேங்காய் நாரைத் தாராளமாகப் பயன்படுத்தச் சொன்னார் — மசாலாவில் உருளைக்கிழங்குக்குப் பதிலாக மரவள்ளிக் கிழங்கை வெட்டிப் போடச் சொல்லி வற்புறுத்தினார் — பாதாம்கீருக்குப் பருத்திக் கொட்டையை அரைத்து விடச் சொன்னார்.... இதையெல்லாம் கண்டு மனம் பொறுக்காமல்தான் — கடந்த முப்பத்தாறு ஆண்டுகளாக அவர் சொன்னபடியெல்லாம் செய்துவிட்டு — இன்று சுதந்திர புருஷனாக வெளியேறி 'ராம பவானில்' சேர்ந்திருக்கிறேன்......

கம்பவுண்டர் கார்மேகம் : 'கைராசியுள்ள டாக்டர்' என்கிற பெயர் எனது மாஜி எஜமானராகிய டாக்டர் புருஷோத்தமனுக்கு எப்படி வந்தது — நான் கேட்கிறேன். அவரது உயர்ந்த அறிவினாலா, படிப்பினாலா, தொழில் திறமையினாலா? இவை அத்தனையிலுமே அவர் பூஜ்யம். நான் கலந்து கொடுத்த மிக்ஸர், பொடித்துக் கொடுத்த பௌடர், மடித்துக் கொடுத்த மாத்திரை — இவற்றினால்தான் அவருக்கு அந்தப் பெயர் வந்தது...ஆனால் கொஞ்சமாவது என்னை மதித்திருக்கிறாரா அவர் ?... பதினைந்து வருடங்களுக்கு முன்பு, பத்துக்கு எட்டடி கொண்ட சிறிய அறையிலே தொழில் தொடங்கிய டாக்டர் புருஷோத்தமனுக்கு இன்று எப்படிப் பளபளக்கும் இரண்டு மாடி நர்ஸிங்ஹோமும், பங்களாவும், காரும் வந்தன....? யாருடைய உழைப்பின் மீது இவர் உல்லாச மாளிகை அமைத்துக் கொண்டிருக்கிறார்?.... இவருடைய ஊழல் மொத்தமும் எனக்கு அல்லவா தெரியும் ?..... ஒன்றை மட்டும் சொல்கிறேன். எல்லா டாக்டர்களுமே ஆப்பரேஷன் போது ஞாபகமறதியாக நோயாளியின் வயிற்றுக்குள் கத்திரிக் கோலையோ, பாண்டேஜையோ வைத்துத்

நிறம் மாறுகிறது



தைப்பார்கள் என்றால், இவர் தமது ஹேண்ட் பேக்கையே வைத்துத் தைத்து விட்ட மகா மேதை அல்லவா? . . . . . .

வக்கீல் குமாஸ்தா வராகசாமி : இடுப்பிலே வேஷ்டி கட்ட ஆரம்பித்த நாள் முதலாக அட்வகேட் அகோரசாமியிடம் பணியாற்றி வந்த நான் இன்று அவரைவிட்டுப் பிரிந்து வந்திருக்கிறேன் . . . . ஏன் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் நீங்கள். நான் பார்க்காத கோர்ட்டா . . . . . . ? புரட்டாத சட்டப் புத்தகமா? . . . . பேசாத லா—பாயிண்டா ? நீதிபதிகள்கூட அகோரசாமியைவிட என்னைக் கண்டுதான் பயப்படுவார்கள். கட்சிக்காரர்களுக்கும் அட்வகேட்டைவிட என்னிடம்தான் அபாரமான மதிப்பு... இவருக்கு என்ன தெரியும் சட்டம்! ஏதாவது முக்கியமான பாயிண்ட் வேண்டும் என்றால் நான்தானே லா—ஜர்னல்களைப் புரட்டி எடுத்துத் தர வேண்டும்...? உங்களுக்கெல்லாம் நினைவு இருக்கும் என்று நம்புகிறேன்: பதினைந்து வருடங்களுக்கு முன்பு கள்ளநோட்டு வழக்கு ஒன்றில் குற்றவாளி ஒருவர் சார்பில் அகோரசாமி ஆஜரானார். அவர் வாதாடியவிதத்தைப் பார்த்து நீதிபதி, ''நீரே உம்ம கட்சிக்காரருக்குப் பதினைந்து வருடங்கள் ஆர்.ஐ. வாங்கிக் கொடுத்துவிடுவீர் போல் இருக்கிறதே !'' என்றார் குத்தலாக. அந்த வழக்கில் போலீஸ் தரப்புச் சாட்சியங்களைக் குறுக்கு விசாரணை செய்ய நான்தான் அயலுனை கேள்விகளைத் தயாரித்துக் கொடுத்தேன் . . . . இல்லையென்று அகோரசாமி மறுக்கட்டுமே, பார்க்கலாம், மறுக்க முடியுமா அவரால் ? . . . .

கார் டிரைவர் கன்னியப்பன் : இன்னாடா, நேத்து வரையிலே இவன் மூல்சந்த் ஹீராசந்துக்கு வண்டி ஓட்டிக்கினு இருந்தானே, இப்போ கிஷன்லால் பேஜாரிமால்கிட்டே ஓட்டுறானேன்னு நீங்க யோசிக்கிறது எனக்கு நல்லாப் புரியுது... அதிலே இன்னா தப்பு?... அந்த மூல்சந்த் மூஞ்சைப் பார்க்க எனக்குப் புடிக்கல்லே — அப்படீன்னு நான் சொல்லப் போறதில்லே.... அந்த ஆள் நடவடிக்கை புடிக்கல்லே — அப்படீன்னுதான் சொல்றேன். மூல்சந்துக்கு நகைக் கடையிலே கொள்ளை லாபம் வருது.... அதுக்காக? . . . . இப்படியா அநாவஷ்யமா செலவுபண்ணிக்கிட்டுத் திரியறது . . . . ? நம்ம மாஜி முதலாளி காலையிலே ஏழு மணிக்கு வண்டியிலே ஏறி உட்கார்ந்தார்னு வண்டி ஓட்டிக்கிட்டே இருக்கணும்... இல்லாட்டி கன்னுபின்னுன்னு கத்துவாரு.. நான்பூரா கத்தணும்... அப்பாலே டெய்லி சாயந்திரம் பீச்சுக்குப் போகணும் . . . . அதுக்கப்புறம் நைட் ஷோ — தினசரி . . . . இன்னு அது. உடம்பா இல்லாகாட்டி இரும்பா? . . . . சுத்த ஊழல் பெருச்சாளி அந்த ஆள்... நல்லா துண்ணுவாரு . . . . கோவிந்தப்ப நாய்க்கன் தெருவிலே லாலா கடை இருக்குது பாரு அதிலே நுனைஞ்சா அம்பது, அறுபது ரூபாய்க்குத் தின்னுவாரு. 'நீயும் சாப்டுக்க கன்னி'ம் பாரு . . . . அதையும் சொல்லணுமில்லே? . . . . ஆறு ஒரு நாள்கூட லீவு எடுக்கக்கூடாதும் பாரு... யாராலே முடியும்? . . . . 'போய்யா' என்று வந்துட்டேன் . . . . பார்த்துடறேன், நான் இல்லாமே அவர் வண்டி எத்தினி நாள் தான் ஓடுதுன்னு . . . .

தம்புராக்காரர் பட்டப்பா : சக்குமாங்குடிப் பரம்பரைன்னு சாஸ்திரீயமான சங்கீதத்துக்கு ஜகத் பிரசித்தம்... அப்படிப்பட்ட உன்னதமான பரம்பரையிலே வந்தவன் நான். ஏதோ இந்தப் பதினெட்டு வருஷமா பஞ்சு பாகவதர்கிட்டே இருந்துட்டேன். என் ஜன்மாவிலேயே அதுதான் பெரிய தப்புன்னு இப்போ உறைக்கிறது. 'என்ன தெரியும் இந்தப் பஞ்சுவுக்கு? 'பாகவதர்'னு என் வாயாலே சொல்றதுகூட அவ்வளவு உசிதமாப்படல்லே... நாலு தியாகராஜ கிருதி, ரெண்டு தீட்சிதர் சாகித்யம், மூணு சியாமா

முகுந்தன்



மேடை அதிர்கிறது!



எலி ஒழிப்பு இயக்கம்!

சென்ற மாத இறுதியில் ஒரு நாள் நூற்று அறுபது விவசாய பல்கலைக் கழக மாணவர்கள் கோவையிலிருந்து 25 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள செம்மேடு கிராமத்துக்குச் சென்றார்கள். ஆலாந்துறை, தொண்டாமுத்தூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் இவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். மிகுந்த உற்சாகத்துடன் எலி ஒழிப்புப் பணியில் ஈடுபட்டார்கள்! முதல் நாள் அறுவடை செய்யப்பட்ட வயல்களில், வரப்புகளில் உள்ள எலி வளைகளைத் தோண்டி 290 எலிகளைப் பிடித்தனர். முதல் நாள் வைத்த எலி மருந்துகளால் கொல்லப்பட்ட 35 எலிகளையும் எடுத்தனர். வளைகளிலிருந்து சுமார் 100 கிலோ நெல் சேகரிக்கப்பட்டது. இவ்வியக்கத்தைத் தொடங்கி வைத்த வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் கோ. அரங்கசாமி அவர்கள் அங்கு கூடியிருந்த விவசாயப் பெருமக்களுக்கு ஒரு ஜோடி எலி ஒரு வருடத்தில் 500 எலிகளாகப் பெருகுகிறது என்று எடுத்துக் கூறினார். எலிகள் ஒரு முறைக்கு 10 குட்டிகள் இட்டு இனப்பெருக்கம் செய்கின்றன. தன் குட்டிகளுக்குத் தேவையான ஆகாரத்தை வயல்களிலிருந்து ஒன்று சேர்த்து எலி வளைகளுக்குள் பாதுகாத்து வைக்கின்றன. நம் நாட்டின் ஜனத்தொகை சுமார் 60 கோடியாக இருக்கும்போது எலிகளின் தொகை 400 கோடி அளவு இருப்பதால் நம் உற்பத்திப் பொருட்களில் 15 முதல் 20 சதம் வரை அவற்றால் சேதப்படுத்தப்படுகிறது. நாட்டில் எலிகளால் சேதப்படுத்தப்படும் உணவின் மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 500 கோடி வரை இருப்பதால் எலி ஒழிப்பு மூலமாகவே கூட ஓரளவு நம் நாட்டின் உணவுப் பற்றாக் குறையைப் போக்கிவிட முடியும்.



சாஸ்திரிகள் இருந்தி, ஒரே ஒரு நவராகமாலிகை இதை வெச்சுண்டு இப்படியொரு ஆர்ப்பாட்டமா? .... அப்படி என்ன பிரமாத சாரீரம் பஞ்சுவுக்கு இருக்குன்னு கேட்கிறேன்.... கோனேரி ராஜபுரம் வைத்தா பரம்பரையோ? உங்களுக்கெல்லாம் தெரியாது — காராமணிப் பட்டி பெருமாள் கோவில்லே பஜனை பண்ணிண்டு இருந்த பஞ்சுவை நான்தான் பட்டணத்துக்கு வரவழைச்சு 'பாகவதர்'னு பேர் சூட்டி, சான்ஸ் வாங்கிக் கொடுத்தேன்.... 'அண்ணா! என்னைவிட்டுப் போயிடாதீங்கோ. என் பின்னாலேயே எனக்குப் பக்கபலமா இருங்கோ'ன்னு கேட்டுண்டான் பஞ்சு.... அதனாலே இருந்தேன்... அப்பனுக்குப் பவிஷு வந்தாப் போல இவனுக்கு டி.வி.யிலே அரை மணி நேரம் அழறதுக்கு சான்ஸ் கிடைச்சுடுத்தாம்.... என்னை விட்டுட்டு, தன் மச்சினனைத் தம்பூரா போடக் கூட்டிண்டு போயிட்டான். அதனாலே எனக்கு வருத்தமில்லே... இந்தப் பஞ்சு இல்லேன்னா என்னாலே பிழைக்க முடியாதா என்ன? .... இப்போது பட்டு பாகவதர்கிட்டே சேர்ந்திருக்கேன் நான்... பஞ்சைவிடப் பட்டு எல்லாத்துக்குமே உசத்திதானே ? .... இது அந்த மரமண்டைக்கு உறைக்குமோ என்னவோ?

காஜா எடுக்கும் 'பையன்' காதர் மொஹிதீன் : என் பெயர்தான் 'பையனே' தவிர, எனக்கு வயசு ஆவுது நாப்பத்தெட்டு.. அல்லா புண்ணியத்துலே அல்லாமே நல்லாத்தான் நடந்து வந்துச்சி.... ஆனா இப்படி நம்ம டெய்லர் அபூபக்கர் சாஹிப் நம்பளை மோசம் செய்வார்னு கனவுலேகூட நெனைக்கலே.... நான் யாரு ? எப்பேர்க்கொத்தவன் ? அபூபக்கர் யாரு? எப்பேர்க்கொத்தவன் ? 'பேஷன் டெய்லர்'னு போர்டு மாட்டிக்கின்னா போதுமா ? பேஷனா தைக்க தெரியா வேணுமா....? இந்த அபூபக்கருக்கும் பேஷனுக்கும் இருக்கிற தூரம், மெக்காவுக்கும் மெதினாவுக்கும் இருக்கிற தூரம்.... நான் கேட்கிறேன்: உனக்கு இன்னா தெரியும்....? காஜா எடுக்கக்கூட நீ என்னைத் தானே நம்பியிருந்தே? .... ஏதோ கட்டிங் கொஞ்சம் சுமாரா செய்வே. அதுக்காக?... அல்லாம் தெரிஞ்ச மாதிரி அலட்டிக்கலாமா? உனக்கு இந்த ராயப்பேட்டையிலே கடை போட எடம் புடிச்சு கொடுத்தது யாரு ? நானு....போர்டு எளுதி மாட்டினது யாரு? நானு....டேப் வாங்கிக் கொடுத்தது யாரு? நானு ! போவட்டும், இதெல்லாம் பளைய கதை....தேத்து வரையிலே டெய்லி ஆறு தரம் மலாய் போட்டு டீ குடிச்சிக்கினு இருந்தியே — அதை வாங்கியாந்து கொடுக்கிறது யாரு ? நானு.... கத்திரிக்கோலை அப்பப்ப சாணை பிடிச்சுக் கொண்டார்றது யாரு....? நானு ! — இப்படி உன்னை ஆளாக்கி, உருவாக்கி, ஒடா உளைச்ச என்னை வெளியிலே அனுப்பிட்டே இல்லே? .... இந்த அபூபக்கர் இல்லாட்டி அல்லா எனக்கு இன்னொரு இப்ராஹிமைக் கை காட்டுவாரு ! .... பார்த்துக்கிட்டே இரு : உன் கடையை இளுத்து மூட்ற நாள் வெகுதூரத்திலே இல்லே ! ....

உங்கள் குழந்தைக்கு 3 மாதங்களாகிவிட்டதா ?

டாக்டர்கள் கூறுகிறார்கள்,
3 மாதங்கள் ஆனவுடன், உங்கள்
குழந்தைக்குப் பால் மட்டும் போதாது.
உங்கள் குழந்தைக்கு, ஆரோக்கியமான
இரத்தத்திற்குத் தேவையான போதிய
இரும்புச்சத்து நிறைந்த
திட உணவு தேவை.





போதிய இரும்புச்சத்து
நிறைந்த ஒரே திட
உணவு—பாரெக்ஸ்,
கொடுங்கள்
அவனுக்கு.

அதோடு, அவனுடைய
தேவைக்கேற்ப, உங்கள்
குழந்தையின் உணவில்
தானிய உணவின் அளவை
அதிகரிக்க உதவுவது
பாரெக்ஸ் ஒன்றுதான்.

இதோ வளரும் உங்கள் குழந்தைக்கு பாரெக்ஸ் வழங்கும் நன்மைகள்:

- [illegible]
- [illegible]
- [illegible]
- [illegible]

வளர்ந்து வரும் உங்கள் குழந்தைக்குத் தேவையான பாரெக்ஸ் அளவு:


உங்கள் குழந்தையின் வயது	பாரெக்ஸ் அளவு
3-6 மாதங்கள்	1-2 தேக்கரண்டி, தினசரி இரு முறை
6-9 மாதங்கள்	3-4 தேக்கரண்டி, தினசரி மும்முறை
9 மாதங்கள்-1 வயது	4-6 தேக்கரண்டி, தினசரி நான்கு முறை



பாரெக்ஸ்

க்ளாக்ஸோ

46-172 TM



THOMAS/DCM 675/Tam

சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 14

மக்களை அறிந்தவன்

இரும்பொறையின் வீட்டு வாசலில் பெரும் கூட்டம் கூடிவிட்டது.

போரிலே வீரம் காட்டிப் புகழ் பெற்ற ஒருவனின் அகால மரணம் — அநியாய மரணம் குறித்துச் சம்பந்தமில்லாத சிலர்கூட அழுது கொண்டிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தின் நடுவிலே அளவு கடந்த சோகத்துடன் நின்று கொண்டிருந்தவன், ரவிவர்மன்.

இரும்பொறையின் மனைவி மக்களுக்கு அவன் ஆறுதல் கூறினான்: ''உங்கள் குடும்பத்துக்கு வேண்டிய உதவிகளை நான் செய்வேன்'' என்று வாக்குறுதி கொடுத்தான். கொஞ்ச நேரம் இரும்பொறையின் கைக் குழந்தையைத் தன் கைகளில் தூக்கி வைத்துக் கொண்டான்.

நேரம் ஆக ஆகக் கூட்டம் அதிகமாயிற்று.

கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்ததும் ரவிவர்மனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. கூட்டத்தினரின் முன்னிலையில் அவன் பேசத் தொடங்கினான்.

''வஞ்சனையற்ற, வஞ்சியின் மக்களே! நெஞ்சில் ஈரம் மிகுந்த சேரநாட்டுக் குடி மக்களே, தூய நம் தலைவர் சேரமான் பெருமான் துறவியான அன்றே தியவர் எவரோ திட்டம் திட்டிவிட்டனர். வஞ்சியான் பிறரை வஞ்சியான், ஆனால் வாள் வலியும், தோள் வலியும் மிக்க இரும்பொறையை எவரோ வஞ்சித்துக் கொன்றுவிட்டார்.

கொங்கு நாட்டுப் போரிலே குத்துண்டு நன் குதிரை





இறந்தும் கூட பகைவர் குழாத்தின் நடுவிலே புகுந்து படபடவெனப் பகைவரின் தலையைச் சீவிய படைவீரன் இரும்பொறை. அவன் உயிரோடு இருந்தால் தங்கள் ஆதிக்கத்துக்கு ஆபத்து என்று எவரோ கருதியிருக்கிறார்கள்.

நான் யார் மீதும் குற்றம் சாட்டவில்லை.

பாண்டியரோடு நடந்த போரில் பல்லாயிரம் பிணங்களைத் தாண்டித் தாண்டிச் சென்று நீண்ட தன் உடைவாளால் பாண்டியர் படையை முறியடித்தவன் இரும்பொறை.

அவனைக் கொன்றது ஆண்டியின் கோலமோ, அரசனின் கோலமோ நான் அறியேன்.

நான் யார் மீதும் குற்றம் சாட்டவில்லை.

மன்னவர், 'இரும்பொறை' என்று அழைப்பார்; 'என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்பானேயன்றி, 'ஏன்?' என்று கேட்டதில்லை.

'தான்' என்ற ஆணவக்காரன் எவனோ ஒருவன் அவனைக் கொன்றுவிட்டான்.

நான் யார் மீதும் குற்றம் சாட்டவில்லை.

அதிகாரம் மக்களுக்கா, இல்லை மமதையாளருக்கா என்பதில், 'மக்க

னுக்கே' என்று இருந்தவன் இரும்பொறை.

தக்கவர் கூடும் இடத்தில் தலை குனிந்து நிற்பான். கோழைத்தனத்தால் அல்ல; அடக்கத்தினால்!

எந்தக் கிராமத்தையும் வளைத்துப் போட்டுக் கொள்ள அவன் எப்போதுமே எண்ணியதில்லை.

அந்த நல்லவனை, பந்தபாசம் மிக்கவனை எந்தக் கொடியவனோ கொலை செய்து விட்டான்.

நான் யார் மீதும் குற்றம் சாட்டவில்லை.

பாலுக்கு அழுகின்ற பச்சைக் குழந்தையைக் கூடக் கவனிக்க முடியாமல், கணவனின் சாவுக்கு அழுகின்ற தாய்மையைப் பாருங்கள்!

ஈவு இரக்கம் இம்மியளவு இருந்தாலும் அவனைக் காவு கொள்ள நினைக்குமா ஒருவனின் கை வாள்?

மாவீரர் பரம்பரையில் மணியாகத் திகழ்ந்தவன், மன்னவர் குலத்துக்கே கண்ணாக வளர்ந்தவன். என்ன நினைத்தானோ, எவன் நினைத்தானோ, இவனைக் கொல்ல நினைத்த பாவியும் வஞ்சியின் கூட்டத்திலேதான் உலாவிக் கொண்டிருக்கிறான்.

நான் யார் மீதும் குற்றம் சாட்டவில்லை.

இரும்பொறையின் குடும்பத்தைத் தவிக்கவிடும் இரும்பு நெஞ்சம் எனக்கு இல்லை.

பத்துக் காணி நிலமும், பத்தாயிரம் வராகனும் என்னுடைய சொத்தில் இருந்து இரும்பொறையின் குடும்பத்துக்கு நான் அளிக்கிறேன்.''

— ரவிவர்மன் பேசி முடித்தான்.

இரும்பொறைக்காக அனுதாபப் பட்டவர்களெல்லாம், ரவிவர்மனிடம் அபிமானம் கொள்ளத் தொடங்கினார்கள்.

பிணத்தை வைத்துக் கொண்டு அரசியல் நடத்துவது ஒரு கலை; அதுவும் ஒரு வகை ராஜதந்திரம்.

இயற்கையாக அழுது அறியாதவன், செயற்கையாக அழுது பழகுவதற்குப் பெயரே அரசியல்.

அரசியலில், செய்கின்ற காரியத்தை விட, அது செய்யப்படும் காலமே முக்கியமானது.

பெரும் கூட்டத்தை இழுத்துக் கொண்டு தீமை செய்தாலும், அது நன்மையாகத் தோன்றுகிறது. அதே கூட்டத்தைப் பகைத்துக் கொண்டு நன்மை செய்தாலும், அது தீமையாகத் தோன்றுகிறது.

காலம் கருதி இடத்தாற் செய்து ஞாலத்தைக் கவர்வதில் ரவிவர்மன் வல்லவன்.

அரசியல் சாகஸமே தெரியாத மார்த்தாண்டவர்மனும், நேரடி அரசியலையே நம்பிய நாராயண நம்பூதிரியும் இரும்பொறையின் பிணத்தைக் கொண்டு எத்தனை பேரைக் கவரலாம் என்று திட்டம் போடவில்லை; அது ரவிவர்மனுக்கு மட்டுமே தெரிந்திருந்தது.

கூட்டத்திலிருந்த ஒருவர், ''எப்பொழு





நுமே ரவிவர்மர் இரக்கமுள்ளவர்'' என்று தம் கருத்தை வெளியிட்டார்.

''அன்றைக்கு நான்கூடப் பார்த்தேன், ஒரு துறவிக்கு ஆயிரம் பொன் கொடுத்தார்'' என்றார் இன்னொருவர்.

''இவ்வளவு நல்ல சுபாவம் நம்பிரான் சுவாமிக்குக் கூடக் கிடையாது!'' என்றான் இன்னொருவன். அவன் ரவிவர்மனால் அங்கே நிறுத்தப்பட்டவன்.

கூட்டம் பிணத்தை விட்டுவிட்டு ரவிவர்மனின் குணத்தைப் புகழ ஆரம்பித்தது.

நெல்லைத் தூற்றும்போது பதர்கள் எல்லாம் ஒரு பக்கம் குவியும்; மணிகளெல்லாம் ஒரு பக்கம் குவியும்; மணியைவிட அதிக விலைக்குப் பதர்களை விற்கத் தெரிந்தவன் ரவிவர்மன்.

அவன் இரும்பொறையின் உறவினர்கள் ஒவ்வொருவரையும் நெருங்கிக் கட்டிப் பிடித்து ஆறுதல் கூறினன்.

சடலம் தூக்கப்பட்டபோது நால்வரில் ஒருவனுக அவனும் தோள் கொடுத்தான்.

சடலத்தைத் தூக்கித் தோளில் வைக்கின்ற நேரத்தில் மார்த்தாண்டவர்மனும், நாராயண நம்பூதிரியும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

கூட்டத்தில் பெரும் பகுதியினர் அவர்களைத் திரும்பியே பார்க்கவில்லை; அது ரவிவர்மனின் வெற்றியே !

இடுகாட்டில் சடலத்தைக் கொண்டு போய் எரிக்கும் வரை ரவிவர்மன் கூடவே இருந்தான். ஆனல் மார்த்தாண்டவர்மனும், நாராயண நம்பூதிரியும் சேவகர்களோடு அரண்மனைக்குத் திரும்பி விட்டார்கள்.

சடலத்துக்குத் தீ மூட்டப்பட்டதும் கூட்டம் கலைந்தது. அப்போதும் ரவிவர்மன் இரும்பொறையின் குடும்பத்தினருடனே இருந்தான்.

இரும்பொறையின் மனைவியையும், மக்களையும் அழைத்துக் கொண்டு கொடுங்கோளூர் பகவதி அம்மன் கோயிலுக்குச் சென்றான்.

''பொட்டிழந்து, பூவிழந்து நிற்கும் இந்தத் தாயை, தாயே ! பகவதி, நீதான் காப்பாற்ற வேண்டும்'' என்று பிரார்த்தித்தான்.

இரும்பொறையின் மனைவி அங்கே தன் வளையல்களை உடைத்தாள்; குங்குமத்தை அழித்தாள்; அங்கும் ஒரு பெரும் கூட்டம் கூடிவிட்டது.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு வீரன் ஒருவன் வேகமாக ஓடி வந்தான். ஒரு குத்துவாளை ரவிவர்மனிடம் கொடுத்தான்.

''இரும்பொறை கொல்லப்பட்டுக் கிடந்த இடத்துக்குச் சிறிது தூரத்தில் ஒரு புதருக்கு நடுவில் இந்தக் கத்தி கிடந்தது'' என்றான்.

எல்லோருக்கும் தெரியும்படி அந்தக் கத்தியை ரவிவர்மன் திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

நம்பூதிரிகள் மட்டுமே இடையில் செருகிக் கொள்ளும் குத்துவாள் அது.

''நான் நம்பூதிரிகளைச் சந்தேகிக்கவில்லை'' என்று சொல்லிவிட்டு, அந்தக் குத்துவாளைக் கையில் ஏந்தியபடி இரும்பொறையின் மனைவி மக்களை ரதத்தில் அனுப்பிவிட்டு, தனியாக ஒரு குதிரையில் சென்றான் ரவிவர்மன்.

அத்தியாயம் 15

இது பாண்டி நாடு

இரண்டாம் சேரமான் பெருமாளால் தோற்கடிக்கப்பட்ட ராஜசிம்ம பாண்டியனுக்குப் பிறகு கி. பி. 792ல் பாண்டிய நாட்டில் அரியணை ஏறியவன் வரகுண பாண்டியன் என்னும் **சடையவர்ம** பாண்டியனுவான்.

இவன் ஆட்சிக்கு வந்த போதும் பாண்டிய நாடு, சேர நாட்டுக்கு உட்பட்டே இருந்தது. இவனது இரண்டு பேர்களில் ஒன்றான **சடையவர்மன்** என்ற பெயரிலேயே இவனை அழைப்போம்.

சடையவர்மன் தெய்வ பக்தியுள்ளவன். 'கானப் பேரெயில்' எனும் காளையார் கோயிலைப் புதுப்பித்த பல பாண்டியர்களில் இவனும் ஒருவன்.

மூன்றும் சேரமான் பெருமாள் பெரியாழ்வாரைப் பார்க்கத் திருவில்லிப்புத்தூருக்குச் சென்றபோது வரவேற்றதும் இவனது ஆட்சியே.

பாண்டிய மன்னர்கள், சோழ மன்னர்கள் இருவரது பேரும் மெய்க்கீர்த்திகளில் எழுதப்படும் போது, 'தேவர்' என்ற பட்டப் பெயரோடு எழுதப்படுவது வழக்கம்.

பாண்டிய, சோழ நாடுகளை நீண்ட நாட்கள் ஆண்டவர்கள், மறவர்கள். மறவருக்கால பட்டங்களில் உயர்ந்த பட்டம், 'தேவர்' என்ற பட்டமாகும்.

பாண்டிய நாட்டுப் படைப் பிரிவுகள் மூன்று. ஒன்று கள்ளர் படை; மற்றொன்று மறவர் படை; மூன்றாவது, அகப் படை. மூன்றும் மூன்று குலமாக 'முக்குலம்' என்று அழைக்கப்படும்.

கள்ளர் படை, எதிரியின் நாட்டுக்குள்ளும் கோட்டைக்குள்ளும் சென்று வேவு பார்ப்பது; மறவர் படை, நேரடியாகப் போர்க்களத்துக்குச் சென்று போர் புரியும் படை; எதிரி கோட்

அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!





பியர்ஸ்— அசல் கிளிசரின் சோப்

கனிவான பியர்ஸ் சோப்பினால் காத்திடுவீர் உங்கள் மேனி மெருகை. மாணிக்கப் படிகம்போல் மிளிரும் ஒவ்வொரு வில்லையிலும் ஒரு நூறாண்டு கால சோப்-உற்பத்தி அனுபவம் உள்ளிறங்கியுள்ளது. மிக்க மென்மை சொரூபம் பியர்ஸ்—தூய்மைக் கொழுந்து—கண்கூடாக நீங்கள் ஊடுருவிப் பார்க்கக்கூடிய உன்னதத் தூய்மை.

பியர்ஸ் சருமக் களை...
கன்னிப் பருவக் களை

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு. லிண்டாஸ்-PS. 56-140 TM


தென்னம்பாளை பிளந்து
சிந்திடும் சிரிப்பழகி!!
KTR
•கோபுர மார்க் பன்னீர்
•சந்தனாதித் தைலம்
•பொன்னாங்கண்ணித் தைலம்
•லவ் பேர்ட்ஸ் பத்தி ...
K.T.R வாசனாதி திரவியசாலை
திருவாரூர்-610 108 (தமிழ்நாடு)
FILMNEWS ANANDAN

டைக்கு வரும்போது கோட்டையைக் காப்பது அகப்படை.

இந்த மூன்று குலங்களில் மறவர் குலத்தைச் சேர்ந்தவர்களே மன்னர்களாக இருந்திருக்கிறார்கள். பாண்டிய நாட்டுக் கோயில்கள் அனைத்தையும் கட்டியவர்கள் இவர்களே.

இவர்களில் மறவர் குலத்தைச் சேர்ந்தவன் சடையவர்ம பாண்டியன்.

வலிமை மிக்க பாண்டிய வம்சம் வளமான நிலங்கள் அதிகம் இல்லாத காரணத்தால், பல நேரங்களில் நீண்ட நாள் போரைத் தாக்குப் பிடிக்க முடியாமல் — உணவுப் பொருட்கள் இல்லாமலேயே தோல்வி அடைந்திருக்கிறது.

ராஜசிம்ம பாண்டியன் காலத்தில் மழை இல்லாமல் அவதிப்பட்ட பாண்டிய நாடு, அந்த வறுமையினாலேயே வலிமை குன்றிச் சேரனிடம் தோற்றது. சடையவர்ம பாண்டியன் பட்டத்துக்கு வந்த பின்னும் அதை மீட்க முடியவில்லை. முடியவில்லை என்பதைவிட, அவன் முயற்சி செய்யவில்லை என்பது பொருந்தும்.

சடையவர்மனின் மனைவி கதலி நாச்சியார் கணவனைப் போலவே தெய்வ பக்தி மிக்கவர். பாண்டிய நாட்டுக் கோயில்களுக்குப் பல நிபந்தங்களை அவர் அளித்துள்ளார்.

சடையவர்மன் பட்டத்துக்கு வந்த சில ஆண்டுகளிலேதான் சேரமான் பெருமாள் முடி துறந்தார். அதன் பிறகு சேர நாட்டில் நடந்த நிகழ்ச்சிகளை நாம் கண்டோம்.

இவ்வளவு குழப்பங்கள் சேரநாட்டில் இருப்பதை ஒற்றர்கள் மூலம் அறிந்தும்கூட, சடையவர்மன் படையெடுப்புக்கு ஆயத்தம் செய்யவில்லை.

அன்று....

அமைதி நிரம்பிய பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையில் திருவிழா கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது. கிராமத்து மக்கள் வண்டிகளிலும், குதிரைகளிலும் ஆயிரக்கணக்கில் வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். கூடல் நகரின் ஒவ்வொரு வீதியிலும் நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்துவது பாண்டிய நாட்டு வழக்கம். மூன்று சாலைகள் சந்திக்கும் இடம் அதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும். அந்த நிகழ்ச்சிகளை அரசர்களோ, கோயிலைச் சேர்ந்தவர்களோ நடத்துவதில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பொறுப்பேற்றுக் கொள்வது பெருந்தனக்காரர்களின் குடும்பங்களே. பெரும்பாலும் ஒவ்வோர் ஆண்டும் தேவ தாசிகளே நாட்டியம் ஆட வருவது வழக்கம்.

அன்று மதுரை நகரம் திமிலோகப் பட்டது. காரணம் ஆவணி வீதியில் யாரோ ஒரு யூதப் பெண் நடனமாட வருகிறாள் என்ற செய்தியே.

மதுரையில் இருந்த மக்கள் அனைவரும் ஆவணி வீதியிலேயே கூடிவிட்டார்கள். மாலையிலிருந்தே விளக்குகள் ஒளிவிடத் தொடங்கின.

நாட்டியக்காரி வருகின்ற அரவம் கேட்டது. சலங்கை ஒலிக்கத் தொடங்கிற்று. மேடையில் திரையைப் பிடித்துக் கொண்டிருந்த கட்டியக்காரர்கள் திரையைக் கீழே விட்டார்கள். அங்கே சிங்காரப் பதுமையாக நின்றாள் யூஜியானா! (தொடரும்)

சைதை ராஜகோபுரத் திருப்பணி

சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள பழம்பெரும் கோவிலான காரணீசுவரர் ஆலயத்தின் ராஜகோபுரத் திருப்பணியை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகள் தொடங்கி வைத்துள்ளார்கள். இப்பெருந் திருப்பணிக்கு ஏறக் குறைய ஏழு லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிக்கப்படுகிறது. இதன் திருக்குளப் பணி ஏறக்குறைய இரண்டரை லட்சம் செலவில் நிறைவேறும் கட்டத்தில் உள்ளது. பக்தர்கள் தாராளமாகப் பொருளுதவி செய்து திருக்காரணீசுவரர் அருளுக்குப் பாத்திரர்களாகக் கோருகிறோம்.
நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி:
அறங்காவலர்கள், ஸ்ரீ காரணீசுவரர் தேவஸ்தானம், சைதாப்பேட்டை, சென்னை—600015.





சந்திரசேகர்



கே. கணேஷ்



ஆர். கணேஷ்



ரங்கநாதன்; கீழே: விசு



உறவுக்குக் கை கொடுப்போம்

கணவன் மனைவி உறவு பற்றிய மிக்க நுண்ணிய மனத்தத்துவ அடிப்படைக் கருவைத் தேர்ந்தெடுத்து, எந்த இடத்திலும் விரசம் தட்டாமல் ஒரு நாடகத்தைப் பார்க்க உதவிசெய்துள்ளனர் விசுவசாந்தி குழுவினர். நாடகத்தின் பெயர் ''அவர்களுக்கு வயது வந்து விட்டது''.

நாடக ஆசிரியர் விசுவை நான் சந்திக்க ஏற்பாடு செய்தபோது அவர் என் மனத்தைப் புரிந்து கொண்டது போல், அவருடைய நடிக நண்பர்களுடனேயே இருந்தார். அந்தக் குழு நடிகர்களில் அதிகபட்ச வயதுக்காரர் முப்பத்தி மூன்றே வயதான மூத்த சகோதரர் திரு எம். ஆர். ராஜாமணி. ஐம்பது வயது, முக்கால் கிழடு, வரும்படியில்லாத வக்கீலாக வந்து அமர்க்களம் பண்ணி அப்ளாஸ் வாங்குகிறார் மனிதர்!

ஏன்! இருபத்திஐந்து வயது இன்ஜினீயர் ரங்கநாதனும் இருபத்தியொரு வயதையே எட்டிப் பிடித்த சந்திரசேகரும் முறையே அப்பாவி சம்பந்தி 'அனந்தநாராயணனா'கவும் அடாவடி சம்பந்தி 'கிருஷ்ணசாமி'யாகவும் வந்து மேடையைக் கலக்குகிறார்களே! அடேயப்பா!

''நான் 'வயது வந்துவிட்டது' என்ற சொற்றொடரை அறிவு முதிர்ச்சி என்பதற்காகத்தான் குறிப்பிட்டிருக்கிறேன். நாயகனும், நாயகியும், திருமணமாகியும் காலம் கடந்துதான் பரஸ்பரம் புரிந்து கொள்கிறார்கள். அதுவரையில்தான் சிக்கல்!'' என்றார் விசு. அந்தச் சிக்கல் இதுதான்:

ஐந்து வயதுச் சிறுமியாக இருக்கும்போது ஒரு பெண் தன் தாயார் பிரசவ காலத்தில் பரிதாபமாக உயிர் இழந்ததை உணர்கிறாள். எனவே தனக்குக் கல்யாணமான பிறகும் பிரசவ பயத்துடனேயே கணவனுடன் பழகுகிறாள். ஏமாற்றம் அடைந்த கணவன், மனைவி மீது மற்ற வகைகளில், அன்பு, பாசம், இருந்தாலும், உப்புச் சப்பற்ற காரணங்களைக் காட்டி விவாகரத்துக் கேட்கலாமா என்று நினைக்கிறான். இவர்களின் பயத்தையும் தவிப்பையும் புரிந்து கொள்ளாமல் இவர்களைச் சுற்றி வருகிறார்கள் குடும்பத்தினர்.

''நான் நாடக ஆசிரியராக ஆனதே ஓர் 'ஆக்ஸிடெண்ட்' '' என்றார் திரு விசு. பிரபலமான ஒரு நாடகாசிரியர் இதர வேலைகள் காரணமாகத் தாம் ஒப்புக் கொண்டபடி நாடகம் எழுதித் தரவில்லை. அந்தப் பொறுப்பை விசு ஏற்றுக்கொண்டார். 'தேவியர் இருவர்' என்ற அந்த நாடகம் ஒரு வெற்றி நாடகமாயிற்று. அப்புறம் எட்டு நாடகங்கள் எழுதி விட்டார் ஒன்றும் சோடை போகவில்லை. 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' அறுபத்தி ஏழாவது தடவையாகப் பார்த்தசாரதி சபாவில் மேடையேற்றப்பட்டது! இதற்கு அப்புறம் எழுதப்பட்ட நாடகங்கள் பஞ்ச பூதங்கள்', 'பட்டினப் பிரவேசம்'.

விசுவுக்குத் தெரிந்த வழக்கறிஞர் ஒருவர் தம்மிடம் வந்து சேர்ந்திருந்த ஓர் அப்பாவிக் கட்சிக்காரனுக்கு விவாகரத்துக்கான சில குயுக்தியான யோசனைகளைச் சொன்னார். அதை அருகிலிருந்து கேட்டதன் விளைவுதான் 'அவர்களுக்கும் வயது வந்துவிட்டது'. விசுவிடமிருந்து விடை பெற்றபோது, ஒரு திறமை மிக்க யதார்த்தவாதியைச் சந்தித்த திருப்தி. அவர் எழுதியுள்ள 'தேவியர் இருவர்', 'உறவுக்குக் கை கொடுப்போம்', 'சுஜாதா', 'ஈசுவர அல்லா தேரே நாம்' 'டௌரி கல்யாணமே வைபோகமே', 'கனவு கண்டேன் கண்ணா' எல்லாமே நடுத்தர, மேல்மட்டக் குடும்பச் சித்திரங்கள் நகைச்சுவை ததும்பியவை என்றாலும் கதை அம்சமும் உண்டு என்பது முக்கியம். அந்தக் கதை இயற்கையாகவும் இருப்பது விசேஷம்!

—பட்டினத்தார்



பொன்னியின் புதல்வர்

சுந்தா

20. விதவிதப் பயணங்கள்

பயணங்கள் விதவிதம் — அவற்றின் பயன்களும் பலன்களும் அப்படியே

“அவர் எழுத்தாளர்களுள் ஒரு சினிமா ஸ்டார் மாதிரி!'' என்பதாகக் கல்கியைப் பற்றிக் குறிப்பிட்டு அவர் காலத்துச் செய்திப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் சொன்னாராம். ''எழுத்தாள நட்சத்திரம்'' என்ற தலைப்புக்கொண்ட ஒரு கட்டுரையில் இதைத் துமிலன் எடுத்துச் சொல்லியிருக்கிறார். (கல்கி சிறப்பிதழாய் வெளியான 8—9—63 தேதிய ஆனந்த விகடனில் இக்கட்டுரை உள்ளது.)

சிறந்த இலக்கியக் கலைஞர் என்ற முறையில் நிலா வட்டம் போன்ற அடக்கமான புகழொளியைக் கல்கி கொண்டிருந்ததுடன் வண்ணக் கவர்ச்சிகள் நிறைந்த அவருடைய ஆளுமையினால், ஒரு வெள்ளித் திரைக் கலைஞருக்கு ஒப்பாக நட்சத்திர ஜொலிப்பையும் கொண்டிருந்தார். அதனால்தான் ''திரை உலகம்'' என்ற பத்திரிகை, ஒரு சினிமா நட்சத்திரத்தைப் போலவே கல்கியைப் பேட்டி கண்டு, அவருடைய விருப்புக்களையும் வெறுப்புக்களையும் கேட்டறிந்து வெளியிட்டது. அந்தப் பேட்டியில் அவர், தமக்குப் பிடிக்காதவற்றில் ஒன்றாகச் செவ்வாய்க்கிழமை இரவைக் குறிப்பிட்டிருந்தார். ''ஏன் என்று கேட்கிறீர்களா? அன்றுதான் 'கல்கி'யின் தலையங்கம் எழுதப்பட்டு, இரவு முழுவதும் நான் கண் விழிக்க வேண்டியிருக்கிறது.''

அவருக்குப் பிடித்தவைகளில் ஒன்று என்னவென்றால்: ''தாம்பரத்துக்குப் பக்கத்தில் உள்ள முடிச்சூர் என்னும் கிராமத்துக்கு 'விர்' என்று காரில் பறந்து போய், சற்று நேரம் நிம்மதியாய் இருந்துவிட்டு வருவது.''

சற்று நேர நிம்மதியையாவது அவ்வப்போது தேடிக் கொண்டாரே! இல்லாவிட்டால் அவருடைய உடலும் உள்ளமும் இன்னும் அதிகமாய் அல்லவா குலைந்துபோயிருக்கும்!

செவ்வாய்க்கிழமை இரவு தலையங்கம் எழுதும் வேலையென்றால், மற்றக் கிழமைகளில் வேறு அங்கங்களை எழுதும் வேலை. பகல் வேளைகளிலோ பத்திரிகையின் நடைமுறை வேலைகள். அவற்றுடன் அவர் இழுத்துப் போட்டுக் கொண்ட, அல்லது அவரை இழுத்துப் போட்டுக் கொண்ட பொது வேலைகள்; அந்த வேலைகளுக்காக மன உளைச்சல்கள் வெளி அலைச்சல்கள்.

இவைகளிலிருந்தெல்லாம் தப்பி அமைதியை நாடுவதற்குச் சென்னையின் அருகே எத்தனையோ புகலிடங்கள் இருக்க, முடிச்சூர் கிராமத்தைக் கல்கி தேடிச் சென்றதற்கு ஒரு தனிக் காரணம் உண்டு. அங்கேதான் அமைதியைத் தனி உரிமையுடன் அனுபவிப்பதற்கு அவருக்குத் தனி உடைமையாக ஒரு தோப்பு இருந்தது. முப்பது ஏக்கரா பரப்புள்ள அந்தத் தோப்பைத் தமது போக் ரோடு வீட்டை விற்று, நாற்பதாயிரம் ரூபாய்க்கு அவர் வாங்கியிருந்தார். அதன் மத்தியில் இருந்த பண்ணை வீட்டில் தமது மாமனாரையும் மாமியாரையும் குடியமர்த்திப் பண்ணையாட்களின் வேலைகளை மேல் பார்வையிடச் செய்திருந்தார்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் அரசினரும் தனியார்களும் முனையத் தொடங்கிய காலம் அது. டாக்டர் ராஜன் போன்றோர் அங்கங்கே விவசாயப் பண்ணைகளை நடத்தலானார்கள். அவற்றைக் கல்கி சுற்றிப் பார்த்துப் பாராட்டுக் கட்டுரைகள் எழுதினார். எழுதியதுடன் நிற்காமல் தாமும் அம் முயற்சியில் ஈடுபட ஆசைப்பட்டார். அந்த ஆசையின் விளைவே முடிச்சூர் பண்ணை. ஏற்கனவே அதிலிருந்த கனி மரங்களுடன் இன்னும் பலவற்றை அவர் நடச் செய்தார். முன்பே இருந்த மூன்று கிணறுகளுடன் நாலாவது ஒன்றையும் வெட்டச் செய்தார். அவற்

றின் தண்ணீருடன் இதற்கும் அதற்குமாகப் பணத்தை இறைத்து விட்டார்.

அவ்வளவெல்லாம் செய்தால் விளைச்சல் இல்லாமல் போகுமா? ஏதோ விளையத்தான் செய்தது. ஆனால் இட்டதுடன் எடுத்ததைக் கணக்குப் பார்க்கையில் நஷ்டமும் விளைந்திருந்தது. விளைச்சல் கூடக் கூட நஷ்டமும் கூடிக்கொண்டேயிருந்தது. கல்கியின் தனி ரக ஜோக் பாணியில் சொல்லப் போனால் அந்தப் பண்ணையில் விளைச்சல் குறைந்திருந்தால் நஷ்டமும் குறைந்திருக்கும்; ஏதுமே விளையாதிருந்தால் நஷ்டமும் விளைந்திராது.

வீட்டைக் கட்டிப் பார்ப்பதிலும் பத்திரிகையைப் போட்டுப் பார்ப்பதிலும் அடைந்த வெற்றியைப் பண்ணையை நடத்திப் பார்ப்பதில் கல்கி அடைய முடியவில்லை. ஆயினும் அந்தப் பண்ணையில் அவர் போட்ட மூலதனம் வீண் போகாமல் நல்ல காரியம் ஒன்றுக்குப் பயன்பட்டது. அவருடைய மகளின் கல்யாணத்தைப் பண்ணிப் பார்ப்பதற்கு அந்தப் பண்ணையை விற்றுப் பணம் திரட்ட முடிந்தது.

அந்த முடிச்சூர் பண்ணையை நடத்துகையில் பணத்தளவில் கல்கி அடைந்த நஷ்டத்துக்குப் பல மடங்கு ஈடாக மனத்தளவில் லாபம் அடைந்தார். அந்தப் பண்ணைக்குப் போய் வந்த வேளைகளிலும், அதில் தங்கி உலவிய நேரங்களிலும் அவருடைய மனத்திலே எழுந்த எண்ணங்களும் கற்பனைகளும் தான் அந்த லாபம்.

அவ்வித லாபத்தைக் கல்கி மீண்டும் அடைய விரும்பி, சிறிது காலத்துக்குப் பிறகு, இன்னொரு திசையில் — மாமல்லபுரம் சாலையை யொட்டி உள்ள கழிப்பட்டூர் என்ற கிராமத்தில் நாலு ஏக்கர் நன்செய் நிலம் வாங்கினார். அதை வாங்கும்போதே அதிக விலை கொடுத்து ஏமாந்தார். வாங்கிய பின்னரும் அதைப் பராமரிப்பதில் ஏமாந்து கொண்டிருந்தார். எப்படி என்பதை









- ஆலயப் பிரவேசம்: அன்றைய சபாநாயகர் திரு ஜே. சிவசண்முகம் பிள்ளை, திரு மேகநாதன் ஆகியோருடன் சுவாமி சன்னிதியில்.
- தாமே நடத்திய பண்ணைகளில் பண நஷ்டத்தையும் மனத்துக்கு லாபத்தையும் சம்பாதித்த கல்கி, பிறர் வெற்றிகரமாக நடத்திய பண்ணைகளைப் பார்த்தும் அவை பற்றி எழுதியும் மகிழ்ந்தார். இங்கே கொத்தம்பாக்கம் பண்ணையில் ஸ்ரீ எஸ். வி. ராகவன் அவர்களுடன்.
- வசன வர்ணனைகளுக்குத் துணையாக வடிவச் சித்திரங்களை வரைந்தளித்த ஓவியர்கள் சந்திரா. மணியம்.

ராஜேந்திரன் வேடிக்கையாகச் சொல்கிறார்.

ஒவ்வொரு ஞாயிறு பிற்பகலிலும் தமது எஸ்டேட்டைப் பார்வையிடுவதற்காகத் தமது வாரிசுகளுடன் காரில் புறப்பட்டுச் செல்வார் கல்கி. போகும் வழியில் கடைத்தெரு ஒன்றில் காரை நிறுத்தச் சொல்வார். மகனைக் கீழே இறங்கச் செய்து ''எல்லாம் நிறைய வாங்கிக்கொண்டு வா'' என்பார். எல்லாம் என்றால், மிட்டாய், பிஸ்கட், வேர்க்கடலை, பட்டாணி வகையறாக்கள். கழிப்பட்டூர்க் கிராமத்துச் சிறுவர் சிறுமியர் எல்லாம் கல்கியின் காருக்காக ஆவலுடன் காத்திருந்து அது வந்து நின்றதும் ஆனந்த ஆரவாரம் செய்வார்கள். வாங்கி வந்த தின்பண்டங்களை அவர்களுக்கு ராஜேந்திரன் விநியோகம் செய்வதையும் அவைகளை அவர்கள் உண்பதையும் கல்கி ரசித்துப் பார்த்துவிட்டு, வயல்களைச் சுற்றிப் பார்ப்பார். பயிரிடும் பண்ணையாள் கூடவே வந்து ஈன சுரத்தில் இல்லைப் பாட்டுப் பாடிக் குறைஞ்சான் கொட்டுக் கொட்டுவான்; இதைப் போட வேண்டும், அதை எடுக்க வேண்டும், இதையும் அதையும் அடிக்க வேண்டும் என்று சொல்லிப் பணம் கேட்பான். அவன் சொல்வதெல்லாம் உண்மையாகவே, கேட்டதெல்லாம் நியாயமாகவே பண்ணையாருக்குத் தோன்றும். மகன் பக்கம் திரும்பி அவனுக்குப் பத்தோ, இருபதோ பணம் கொடுக்கச் சொல்லுவார். சொல்லிவிட்டு, ஞாபகமாகக் கணக்கு எழுதிக் கொள்ளும்படி கூறுவார். மகனும் ஒழுங்காக எல்லாச் செலவு விவரங்களையும் உடனுக்குடன் பதிந்து வைப்பான். ஆனால் அந்தக் கணக்கைத் தந்தையார் சரிபார்க்கவும் மாட்டார். மொத்தச் செலவு எவ்வளவு என்று கூட்டிப் பார்க்கவும் மாட்டார். செலவைப் போலத்தான் வரவு விஷயத்திலும். அறுவடையின்போது பண்ணையாள் கையால் அளப்பதையும் வாயால் அளப்பதையும் அப்படியே ஒப்புக் கொள்வார்.

பண்ணையாராகக் கல்கி செய்த குட்டிப் பயணங்கள் பற்றி' அவருடைய மனைவி மக்களுக்கு ஒரே மகிழ்ச்சி. ஏனெனில் அவற்றிலிருந்து அமைதியுடன் ஆரோக்கியத்துடனும் திரும்புவார். மற்றப்படி அவர் மேற்கொண்ட நெடிய பயணங்களிலிருந்தோ, உடல்நலத்தைக் கெடுத்துக் கொண்டு திரும்புவார். ஆஸ்துமாவை முற்ற வைத்துக் கொள்வார். தாமும் வருந்தி அவர்களையும் வருந்த வைப்பார்.

அவ்வித வருத்தும் பயணம் ஒன்றை 1947ல் வறுத்தெடுக்கும் கோடையிலே தென் பாண்டி நாட்டில் கல்கி மேற்கொண்டார். அப்போது அந்தப் பகுதியில் இரண்டாம் தவணையாக ஹரிஜன ஆலயப் பிரவேசம் நடந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் அதற்கு ஏற்பாடு செய்த சோமயாஜுலு, மேகநாதன், மீனாட்சிசுந்தரம் முதலிய தேச பக்தர்கள், சென்னை சட்டசபை நாயகரும் ஹரிஜனப் பிரமுகருமான சிவசண்முகம் பிள்ளை வெவ்வேறு ஊர்களிலும் ஆலயப் பிரவேசத்துக்குத் தலைமை வகிக்கும்படி திட்டமிட்டிருந்தார்கள். அவருடன் கல்கியும் சின்ன அண்ணாமலையும் வரவேண்டுமென்று வற்புறுத்தி அழைத்திருந்தார்கள். அதற்கிணங்க, சென்னையிலிருந்து சங்கரன்கோயில் வரை ரயிலிலும், அங்கிருந்து பல சிறிய பெரிய ஊர்களுக்குக் காரிலும், நெடும் பயணம் தொடர்ந்தது. தகிக்கும் வெய்யிலையும், தண்ணீர்க் கஷ்டத்தையும், வேளா வேளைக்கு உணவில்லாச் சிரமத்தையும், எல்லாவற்றுக்கும் மேலாக நோயின் கொடுமையையும் பொருட்படுத்தாமல் அந்தப் பயணத்தை நடத்தினார் கல்கி. அவருக்குத் துணையாக அவருடைய மருமானும் செயலாளருமான நாராயணசாமி சென்றிருந்தார். நேரம் தவறாமல் கல்கியை மருந்து சாப்பிடச் சொல்வது அவருடைய முக்கியமான கடமைகளில் ஒன்றாய் இருந்தது. மருந்துப் பெட்டி ஒன்று கூடவே சென்றது.

பயணத்தின் இடைவேளை ஒன்றில், குற்றாலத்தில் சிறிது கல்கி இளைப்பாறியபோது, ''படாத உடம்பிலே ஏன் இப்படி அலையறீக?'' என்று பரிவுடன் டி. கே. சி. கடிந்துகொண்டார். ''இப்படி ஒரு புரட்சியான காரியம் ஒன்று நடக்கறதைக் கண்ணாறப் பார்க்க வேண்டாமா? வியாதி படுத்தறதென்னு படுத்துக் கிடந்தால் எப்படி?'' என்று பதில் சொன்னார் கல்கி. அதுவும் அந்தப் புரட்சி கல்கி பெரிதும் கொண்டாடிய இரண்டு தலைவர்களின் மூலம் நிகழ்ந்ததாகும். முதலில் ராஜாஜி ஆலயப்பிரவேச சட்டத்தை இயற்றினார். பின்னர் டாக்டர் ராஜன் அதே சட்டத்தை விரிவுபடுத்தினார்.

சங்கரன்கோவிலைத் தொடர்ந்து கோவில்பட்டியையும் எட்டயபுரத்தை



மெக்ஸிகோ நகரில் மில்லியன் ரேனால்ட்ஸ் இறந்து விட்டார். யார் இந்த மில்லியன் ரேனால்ட்ஸ்? இவர்தான் பால்பாயிண்ட் பேனாவைக் கண்டு பிடித்தவர்.

— டைம்ஸ் ஆப் இந்தியா - பாலி

யும் ஆலயப் பிரவேசக் கோஷ்டியார் முடித்துக் கொண்டு தூத்துக்குடியை அடைந்தபோது, விட்டலபுரம் வேங்கடாச்சாரியாரும், பெரிய திருவடி துரைசாமி நாடாரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். (இருவரும் கல்கிக்குத் துணையாயும் ராஜாஜியின் கொள்கைகளுக்கு ஆதரவாயும் நெடுகிலும் செயலாற்றி வந்தவர்கள்.) பின்னர் ஸ்ரீவைகுண்டம் வழியே திருச்செந்தூருக்குக் கோஷ்டியார் செல்லுகையில் ஆழ்வார்திருநகரியை நெருங்கியபோது, அங்கே சிறிது தங்கிவிட்டுத் தான் போக வேண்டும் என்று வேங்கடாச்சாரி வற்புறுத்தினார். ஆலயப் பிரவேசம் சம்பந்தமாய் அந்த ஊரில் உண்டான சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பேராசிரியர் சீநிவாசராகவன் உதவியாய் இருந்தார் என்றும் அவர் அங்கே ஆவலுடன் காத்திருக்கிறார் என்றும் தெரிவித்தார். கோஷ்டியாரும் அதற்கு இணங்கினார்கள்.

நம்மாழ்வார் அவதரித்த திருத்தலம் ஆழ்வார் திருநகரி. ஐதிகப்படி, இப்போதும் அங்கே நிற்கும் புனிதப் புளிய மரத்தின் நிழலில் அமர்ந்துதான் பின்னர் நம்மாழ்வார் எனப் பெயர் பெற்ற சடகோபர் ஆயிரக் கணக்கான பாசுரங்களைப் பொழிந்திட்டார். வைணவத்தோடும் தமிழோடும் நிலையாய் இணைந்துள்ள அந்த ஊரில், கல்கியை அன்று சந்தித்ததை, பேராசிரியர் சீநிவாசராகவன் பின்னொரு சமயம் வானொலியில் வர்ணித்துச் சொன்னார்:

கோயிலுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்து வெளியில் வந்ததும், கோயில் வாசலில் பொதுக் கூட்டம் ஏற்பாடாகி இருப்பதைக் கண்டு, கல்கி புன்முறுவலோடு, ''ஏது, பிரமாதமாய் இருக்கிறதே'' என்றார். உடன் வந்தவர்கள், ''நேரமாகி விட்டது'' என்று மொணமொணத்தார்கள். ''அப்படியானால் இங்கேயே தங்கிவிடுவோம்'' என்று சிரித்தார் கல்கி. என்னைப் பார்த்து, ''நாங்கள் ஒன்றும் பேசப் போவதில்லை; நம்மாழ்வார் பாடல் ஒன்றைச் சொல்லுங்கள்'' என்று சொல்லிவிட்டு, காலம் முழுவதையும் தம்முடைய ஆட்சிக்குக் கட்டுப்படுத்தி விட்டவர் போல், அமைதியாக உட்கார்ந்துவிட்டார்.

''பொலிக பொலிக பொலிக
போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை''

என்ற நம்மாழ்வார் பாடலைச் சொல்லிச் சில வார்த்தைகள் பேசினேன். பேச்சு முடிந்ததும், ஒருவர், ''புறப்பட வேண்டாமா? திருச்செந்தூர் முருகன் தரிசனத்துக்கு நாழிகை ஆகிவிட்டதே!'' என்று, எல்லோருக்கும் கேட்கும் இரகசியக் குரலில் கல்கியைத் துரிதப்படுத்தினார். முறுவலோடு திரும்பினார் கல்கி. ''இந்தப் பாட்டில் நீங்கள் முருகனைக் காணவில்லையா?'' என்று கேட்டார். சாதாரணப் பேச்சில் தெறித்து விழுந்த கருத்துத்தான். ஆனால் காந்தியத்தின் அம்சமான சமய ஒருமைப்பாட்டை எவ்வளவு அருமையாகக் காட்டுகிறது.

''தீண்டாமைப் பிசாசு ஒழிந்தது; வல்லுயிர்ச் சாபம் போயிற்று; பொலிக, பொலிக என்று நம்மாழ்வாரோடு சேர்ந்து கொண்டு தமிழ்க் குலத்தை வாழ்த்துவோம்'' என்று நான் சொன்ன கருத்தை அவர் உற்சாகமாக ஆதரித்துப் பேசினார். எவ்வளவு விநயம்! தீண்டாமை ஒழிந்ததில் எவ்வளவு மகிழ்ச்சி! நம்மாழ்வாரோடு புளிய மரத்தைக் கந்தனுடைய கடம்ப மரமாகக் காணும் சமரச பாவந்தான் எவ்வளவு! — இவை அனைத்தையும் அன்று கல்கியிடம் ஒருங்கே கண்டேன்.

[திருச்சி வானொலி 11—10—55]



அமெரிக்காவில் ஃப்ளாரிடா மாகாணத்தில் உள்ள ஓர் அதிசயக் குன்றின் உச்சியிலிருந்து மோட்டாரில் சவாரி செய்தவண்ணம் குன்றின் அடிவாரத்துக்கு வந்து சேருங்கள். உடனே காரை நியூட்ரலுக்குக் கொண்டு வந்து எஞ்சினையும் நிறுத்தி விடுங்கள். அடுத்த கணமே உங்கள் கார் ஏதோ ஒரு மகத்தான காந்த சக்தியால் கவரப்பெற்றதுபோல் குன்றின் உச்சியை நோக்கித் தானே ஓடும்! இன்றளவும் இது யாருக்கும் விளங்காத புதிராகவே உள்ளது.

—ஆதாரம்: ஸ்பான் - தகவல்: ஆர்பி

அடுத்தாற்போல் பொசுக்கும் வெய்யிலில், குண்டும் குழியுமான சாலை வழியாகப் பயணம் — திருச்செந்தூரில் கடலோரக் கந்தனின் தரிசனம் — கடற்கரை மண்டபத்தில் பொதுக்கூட்டம் — அதுபற்றிச் சின்ன அண்ணாமலையின் ''ரிப்போர்ட்'' —

ஸ்ரீ சோமயாஜுலுவின் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. சபாநாயகர், ஜாதி ஹிந்துக்களுக்கு மனமாற்றம் உண்டாகி, ஹரிஜனங்களை இந்தப் பிரசித்திபெற்ற முருகன் ஆலயத்துக்குள் விட்டது பற்றித் தம் பெருமகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

கல்கி ஒரே உணர்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கி இருந்தாலும் ஹாஸ்யமாகவே பேசினார். ஒருவன் ஒரு வெள்ளிக் கிழமையன்று நன்றாகச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிப் போனானாம். சனிக்கிழமையும் தூங்கிவிட்டு ஞாயிற்றுக்கிழமைதான் ,எழுந்தானாம். எழுந்தவன், ''இன்றைக்கு என்ன கிழமை?'' என்று கேட்டானாம். ''இன்று ஞாயிற்றுக்கிழமை'' என்று பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்களாம். உடனே அவன், ''அப்படியானால் சனிக்கிழமை எங்கே போச்சு?'' என்று கேட்டானாம். அதைப் போல், நான்கு வருஷங்களுக்கு முன்னால் திருநெல்வேலி ஜில்லாவை விட்டுப் போனவர்கள் இன்று மறுபடியும் திரும்பி வந்தால் ''தீண்டாமை என்பதாக ஒரு முட்டாள்தனம் இருந்ததே, அது எங்கே போச்சு?'' என்பதாகக் கேட்க வேண்டியிருக்கும் என்று கல்கி கூறினார்...

ஸ்ரீ மேகநாதன் வந்தனோபசாரம் கூறுகையில் பழைய சம்பவம் ஒன்றை ஞாபகப் படுத்தினார். முன்னொரு சமயம் ராஜாஜி திருச்செந்தூருக்கு வந்திருந்தபோது ஆலயத்துக்கு வரும்படி அழைக்கப்பட்டாராம். ''ஹரிஜனங்களை விடாத கோயிலுக்கு நான் வருவதில்லை'' என்று ராஜாஜி சொல்லிவிட்டாராம். ' இப்போது திருச்செந்தூர்க் கோயிலைத் திறந்து விட்ட செய்தி ராஜாஜிக்கு அளவில்லா மகிழ்ச்சி அளித்திருக்கும். அவர் இன்று இங்கு வர முடியாவிட்டாலும், அவருடைய அந்தரங்க அன்புக்குரிய சீடர்கள் வந்திருக்கிறார்கள்'' என்று ஸ்ரீ மேகநாதன் உணர்ச்சி ததும்பக் கூறினார்.

இந்த ''ரிப்போர்ட்'' 18—5—47 தேதிய கல்கி இதழில் தொடங்கி நாலு வாரங்கள் ஓடிய தொடர் கட்டுரை ஒன்றில் உள்ளது. அந்தக் கட்டுரையின் தலைப்பு ''கண்டறியாதன கண்டேன்''. அதில் சின்ன அண்ணாமலை அந்த ஆலயப் பிரவேசப் பயணத்தில் தாம் கண்டதையும் கேட்டதையும் ''பாஸ்வெல்'' பாணியில் எழுதி, கல்கி சம்பந்தமான சுவையான பல தகவல்களை உதவியுள்ளார்.

அடுத்த பெரிய ஆலயப் பிரவேசம், திருநெல்வேலியில் நடந்தது. பல்வேறு சேரிகளிலிருந்தும் அந்நகரில் வந்து குழுமிய பத்தாயிரம் ஹரிஜனங்கள், சிவஷண்முகம் பிள்ளையையும் கல்கியையும் பின்தொடர்ந்து, நெல்லையப்பரையும் காந்திமதியையும் தொழுதார்கள்.

மற்றொரு சிறப்பான ஆலயப் பிரவேசம் அண்டை மாவட்டத்து இராமேசுவரத்தில். அந்தத் தீவுத் தலத்தில் அன்னாள் சென்னைப் பிரதம மந்திரி ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரும் முன்னாள் மந்திரியும் ஹரிஜனப் பிரமுகருமான முனிசாமிப் பிள்ளையும் சேர்ந்து கொண்டார்கள். பிரவேசத்தையடுத்து நடந்த கூட்டத்தில் ஒரு புராணக் கதையைச் சொல்லிக் கல்கி உரை நிகழ்த்தினார். அதையும் சின்ன அண்ணாமலையின் ''ரிப்போர்ட்'' மூலமே கேட்போம்:

சோமாசி என்னும் சிவபக்தர் ஒரு யாகம் செய்தார். அந்த யாகத்துக்குச் சிவபெருமானே நேரில் வந்து அவிர்ப்பாகம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்தார். சிவபெருமானும், ''அப்பனே! அப்படியே வருகிறேன். ஆனால் நான் வரும்போது நீ தூங்கிவிடாதே!'' என்று சொன்னார். பரமசிவனே வரப்போகிறார் என்று அறிந்த சாஸ்திரிகளும் தீக்ஷிதர்களும் வேத மந்திரங்களைப் பலமாகக் கோஷித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு வெட்டியான் பறை கொட்டிக் கொண்டும் நாலு வேட்டை நாய்களைக் கூட்டிக் கொண்டும் அங்கே வந்தான். அவனைப் பார்த்ததும், ''பாவி! பறையா! சண்டாளா! போ! போ! தூரப் போ!'' என்று எல்லோரும் கத்தினார்கள். ''ஏன் ஐயா கூச்சல் போடுகிறீர்கள்? போகச்




லிப்கோ அறிமுகப்படுத்தும்

ஸ்ரீமத் ராமாயண ஸெட்

புதிய அதிர்ஷ்ட - தவணைத் திட்டம்!

மாதத் தவணை ரூ. 19 வீதம் 10 மாதத் திட்டம். ஒவ்வொரு குருப்பிற்கும் 30 அங்கத்தினர் மட்டுமே. பிரதி மாதமும் குலுக்கலில் வெற்றி பெறும் அதிர்ஷ்ட சாலிகள் மேற்கொண்டு தவணைகளைச் செலுத்த வேண்டியதில்லை. அவர்களுக்கு உடனடியாக ரூ. 190 பெறுமான கீழ்க்கண்ட லிப்கோவின் ராமாயண ஸெட் முழுவதும் முற்றிலும் எங்கள் செலவிலேயே அனுப்பப்படும்.



கீர்த்தனாசார்ய ஸ்ரீ C. R. ஸ்ரீநிவாஸய்யங்கார் *அவர்கள்*

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

சுமார் 5000 பக்கங்கள் ஜ தமிழ் வசனம்

1—7. காண்டங்கள் 8 நோட்டுகள் 9. ஸ்ரீரங்க மாஹாத்மியம் 10. ஸ்ரீராம ஸ்தோத்ரமாலா 11. பாராயண முறை 12. ஸ்ரீ வேங்கடேச ஸுப்ரபாதம் 13. திருப்புகழில் ராமாயணம் 14. A Book on Sri Rama.

மேற்கண்ட 14 *புஸ்தகங்களை வாங்குபவர்களுக்கு மட்டும் இலவசம் (கையிருப்புள்ளவரை):*

15. ஸம்ஸ்க்ருத ராமாயணம் 16. ஸ்ரீராமர் அலுமினியப் படம் 17. ஸரஸ்வதி பீடம் 18. அக்ஷதை பரணி 19. இலகப் பை 20. மரப் பெட்டி. *மேற்படி அனைத்தும் சேர்ந்து விலை ரூ.* 190


முழு விவரங்கட்கு:

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, 8. ரங்கநாதன் தெரு, சென்னை-600 017.

(ஸ்தாபிதம்: 1929) *(போன்: 441538)*

குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியத்துடன் திகழ 2 ஃபாஸ்ஃபோமின் டானிக்







ஃபாஸ்ஃபோமின் அயன்

பெண்களுக்கான அயன் டானிக்

ஃபாஸ்ஃபோமின் அயன் சத்துமிக்கச் சிவப்பு இரத்தம் உருவாகக் காரணமாயிருந்து உதவுவதுடன் உடலில் அயன் சத்தைச் சமநிலையில் பெற்றிருக்கவும் உதவுகிறது. இதில் பி காம்ப்ளெக்ஸ் விடமின்களும் பல்வேறு கிளிஸரோபாஸ்பேட்டுகளும் கூட அடங்கியுள்ளது. சக்தியும் ஆரோக்கியமும் பெற்றுத் திகழ உதவுவதுடன் களைப்பையும் விரட்டுகிறது. பெண்களுக்கென்று விசேஷ முறையில் உருவாக்கப்பட்டுள்ள முதல் டானிக்—ஃபாஸ்ஃபோமின் அயன்.

ஃபாஸ்ஃபோமின் விடமின்

குடும்பத்திற்கான விடமின் டானிக்

பழரச மணம் கமழும் சிறந்த டானிக். ஆரோக்கிய முழுமையோடு உணவு நிறைவைக் கூட்டுகிறது. உங்கள் குடும்பத்தினர் யாவரும் ஆரோக்கியத்துடன் சுறுசுறுப்பாய்த் திகழச் செய்ய, மிக அவசியமான பி காம்ப்ளெக்ஸ் விடமின்கள் மற்றும் பல்வேறு கிளிஸரோபாஸ்பேட்டுகள் அடங்கியது. குடும்பம் முழுவதும் அருந்தி ஆரோக்கியத்துடன் மகிழ—ஃபாஸ்ஃபோமின் விடமின்.



ஃபாஸ்ஃபோமின் டானிக்குகள்—பசியைத் தூண்டி, வலிவு, நோயெதிர்ப்புச் சக்தி கூட்டுவன!



உலகப் பெண்கள் ஆண்டு சம்பல் பள்ளத்தாக்கையும் விட்டு வைக்கவில்லை. இப்பொழுது அங்கு நிறைய பெண்கள் கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். சிலர் கொள்ளைக் கூட்டத்துக்கே தலைமை வகிக்கிறார்களாம்!

— டைம்ஸ் ஆப் இந்தியா - பாபு

சொன்னால் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு வெட்டியான் போய்விட்டான். பரமசிவன் வரவேயில்லை. பிராமணர்கள் கோபித்துக்கொண்டு சோமாசியையும் திட்டிவிட்டுப் போய்ச் சேர்ந்தார்கள். சோமாசி, கோயிலுக்குப் போய் பரமசிவன் பாதத்தில் முட்டிக்கொண்டு உயிரை விடப் போனார். பரமசிவன், ''அப்பனே! என்னை நொந்து என்ன பயன்? நான்தான் வந்தேனே? நாலு வேதங்களும் என்னுடன் நாலு நாய்களைப் போல் வந்தனவே! நான் வரும்போது நீ கண்ணை மூடிக்கொண்டு விட்டாய். எவ்வளவோ வேத சாஸ்திரங்களைப் படித்திருந்தும், எல்லா உயிர்களிலும் நான் இருக்கிறேன் என்ற உண்மையை நீ அறியாமல், என்னைப் பார்த்துப் 'போ!' என்றாய். நான் திரும்பி வந்துவிட்டேன்!'' என்று அருளினார்.

தஞ்சாவூர் ஜில்லாவில் எங்கள் கிராமத்துக்குச் சமீபத்திலுள்ள (திருமாளம்) கிராமத்தில் வருஷம்தோறும் சோமாசி நாயனார் உற்சவம் நடக்கிறது. பரமசிவன் வெட்டியான் வேஷத்தில் யாகசாலைக்கு வருவதும், அங்கிருந்து துரத்தப்படுவதும் அந்த உற்சவத்தில் நடைபெறுகின்றன. இப்படி எத்தனையோ சரித்திரங்கள் நமது நாட்டில் வழங்கி வருகின்றன. எவ்வளவோ பெரியவர்கள் சாதி வேற்றுமை, தீண்டாமை இவைகளைக் கண்டித்துப் போதனை செய்திருக்கிறார்கள். ஆனால் எல்லாம் இதுவரையில் ஏட்டுச் சுரைக்காயாக இருந்து வந்தது. நமது காலத்தில் காந்தி மகாத்மாவின் ஆத்ம சக்தியினால் தீண்டாமை உண்மையாக அழிந்து வருகிறது. ஸ்ரீ வைசண்முகம் பிள்ளை முருகன் என்றதும் உருகிப் போகிறவர். ஸ்ரீ முனிசாமிப் பிள்ளையை நெற்றியில் விபூதி இல்லாமல் நான் பார்த்ததே கிடையாது. இப்படிப்பட்ட பரம பக்தர்களைக் கோயிலுக்குள்ளே வரக்கூடாது என்று சொன்னால், அப்படிப்பட்ட கோயிலில் நிச்சயமாய் சுவாமி இருக்க மாட்டார்....

இராமேசுவரத்தின் சரித்திரத்தில் இரண்டு தினங்கள் மிகவும் முக்கியமானவை. ஒன்று ஸ்ரீ ராமபிரான் பாலம் கட்டுவதற்கு முன் இங்கே சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்த தினம். இன்னொன்று, சகல ஹிந்துக்களுக்கும் ஆலய தரிசன உரிமை அளிக்கப்பட்ட இன்றைய தினம்.

இதழில் ஒரு கட்டுரை எழுதினார். ''காணாத காட்சிகளும் கண்டேன்'' என்பது அதற்கு அவர் கொடுத்த தலைப்பு. அப்படிக் காணாத காட்சிகளைக் கண்டதற்காக, ''காய்ச்சிய இரும்புச் சட்டியைப் போல் சுட்ட'' மலைப் படிகளில் ஏறி இறங்குகையில், அவர் என்ன பாடுபட்டிருக்கமாட்டார்! நல்ல வேளையாய் நேராகச் சென்னைக்குத் திரும்பாமல், மறுபடியும் குற்றாலம் சென்று, அருவித் தண்ணீரிலும் தன் தமிழிலும் தம்மைக் குளிர வைத்துக் கொண்டார்.

உடன் காலச் சரித்திர நிகழ்ச்சி ஒன்றைக் காண்பதற்கான நெடும் பயணம் இது. இதைவிட நெடியதும் கடினமுமான பயணம் ஒன்றை, பழங்கால சரித்திரக் களங்களைப் ''பொன்னியின் செல்வன்'' நெடுங்கதையில் வர்ணிப்பதற்கெனக் காண்பதற்காக, நாலு ஆண்டுகளுக்குப் பின்னர் கல்கி மேற்கொண்டார். சோழ நாட்டிலும் ஈழ நாட்டிலும் விரிந்த அந்தப் பயணம் பற்றி, 1951 தீபாவளி மலரில், '' நம் தந்தையர் செய்த விந்தைகள்'' என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதினார்.

அந்தப் பயணத்தில் தாம் சென்ற வழியிலே பின்னர் கதாநாயகன் வந்தியத் தேவனைச் செல்லவிட்டார் கல்கி. அதைத்தான் அந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் வேடிக்கையாக, '' வந்தியத் தேவனுக்கும் எனக்கும் நெடுகிலும் ஒரு போட்டி'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதே கட்டுரையில் தஞ்சை சரஸ்வதி மகாலின் காரியதரிசி, அந்தப் பயணத்தில் துணை வந்து உதவியதாகவும் குறிப்பிட்டுள்ளார். அப்படி உதவிய எஸ். கோபாலன், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கல்கிக்கு அஞ்சலி செலுத்துகையில், அந்தப் பயணம் பற்றிச் சுவையான சில விவரங்களைத் தெரிவித்தார் :

சிறிது இடைவேளைக்குப் பிறகு, அதே விதப் பயணத்தின் தொடர்ச்சியாக, முருகன் ஏறிக் கோயில் கொண்டுள்ள மூன்று குன்றுகளில் கல்கி ஏறி இறங்கினார் — வரிசையாகக் கழுகுமலை, திருப்பரங் குன்றம், பழனி மலை. அந்த மலை' ஏற்றங்களில் சின்ன அண்ணாமலை உடனில்லாத காரணத்தால், அவை பற்றிக் கல்கியே, தமது 15—6—47

ஆங்கில உரைநடை வல்லவராகிய பெக்காலேயைப் பற்றி, ஒரு வரி வர்ணனை எழுதுவதற்குப் பல காதம் பிரயாணம் செய்வார் என்று சொல்வதுண்டு. கல்கி அவர்கள், பொன்னியின் செல்வனில் பல அத்தியாயங்களை இப்படிப் பிரயாணம் செய்து, நேரில் பல இடங்களைப் பார்த்து வரைந்துள்ளார் என்பது எனக்கு நன்கு தெரியும். முக்கியமாக அவர் கோடிக்கரைக்குப் பிரயாணம் சென்றபோது நானும் அவரும் பார்த்த காட்

சிகள் எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றன. அங்கு அவர் கண்ட கலங்கரை விளக்கம், சதுப்பு நிலங்கள், மான் கூட்டங்கள், சதுப்பு நிலங்களில் உண்டாகும் கொள்ளிவாய்த் தோற்றங்கள், பண்டைக் காலங்களில் கையாண்டு வந்த பழக்கங்கள், திருக்கை வால் போன்ற ஆயுதங்கள் — இவைகளைத் தம்முடைய கதையில் அழகு பெற அமைத்திருப்பது யாவரும் ரசமாக அனுபவிக்கக் கூடிய பகுதிகள்... அவருடன் நாங்கள் அனுபவித்த காட்சிகள் அனைத்தையும் என்றும் மறக்கா வண்ணம் அவரது உயரிய கதையில் சித்திரித்து விட்டார்.

[கல்கி இதழ் 2—1—55]


யாருமே என்றைக்கும் மறக்கா வண்ணந்தான், தாம் கண்ட காட்சிகளை—சோழநாட்டுக் காட்சிகளுடன் ஈழ நாட்டுக் காட்சிகளையும் சேர்த்து—தமது கதையில் பதித்து விட்டார் கல்கி. இரு நாட்டுப் பயணங்களிலும் சேர்ந்து கொண்ட ஓவியர் மணியம், கல்கியின் வசன வர்ணனைகளுக்குத் துணையாக வடிவச் சித்திரங்களை வரைந்தளித்தார்.

முதல் முதலாக ஒரு நாவலுக்கென கல்கி செய்த நெடும் பயணம், ''சிவகாமியின் சபதம்'' தொடர்கதை தொடங்கியபோது, அதில் வர்ணிப்பதற்கென அஜந்தா எல்லோராக் குகைகளுக்குச் சென்று வந்ததாகும். 1944ல் நிகழ்ந்த அந்தப் பயணத்தின் பலனும் அந்த நாவலில்நிலையாகப் பதிந்துள்ளது.

அந்த அதிசயக் கலைப் பயணத்திலும் ஓவியர் மணியம் கலந்து கொண்டு, தாம் கண்டு வரைந்த வண்ணங்களைக் கதைக்கு விளக்கக் காட்சிகளாய் உதவினார். அவர் வரைந்து வந்த அஜந்தா சித்திரங்கள் பல, தனியாகவும் கல்கி இதழ்களிலும் மலர்களிலும் வெளியாயின; ''சிவகாமியின் சபதம்'' புத்தகத்திலும் ஓவியர் சந்திராவின் படைப்புக்களுடன் அடுத்தடுத்து வெளியாகி உள்ளன. அவற்றில் சில, மூலத்தில் அழிந்து போயிருந்த பகுதிகளைக் கற்பனையால் மணியம் ஊகித்துப் பூர்த்தி செய்தவைகளாகும்.

''அலையோசை'' நாவலை எழுதுகையிலும் நெடும் பயணங்கள் செய்தார் கல்கி: எங்கெங்கெல்லாம் என்பதை அந்த நாவலில் உள்ள களங்களிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். அந்தப் பயணங்களில் சந்திரா உடன் சென்று, கல்கி கண்டவற்றைத் தாமும் கண்டு, அவற்றை அழியாச் சித்திரங்களாய் ஆக்கித் தந்தார்.

கல்கியுடன் பயணம் செய்த இவ்விரு கலைஞர்களும், அவருடைய நிலையான இலக்கியப் படைப்புக்களுடன், தமது ஓவியப் படைப்புக்களினால் நிலையாக இணைந்துள்ளார்கள். (தொடரும்)



ஓ! என்னருமைத் தோழர்களே!

விமலா ரமணி

கல்லூரி வாழ்க்கை! உற்சாகமும், ஆர்வமும் நிரம்பிய வாழ்க்கை! கிண்டலும், கேலியும் நிறைந்த இடம்!

எதைப் பற்றியும் கவலைப்படாமல், யாரைப் பற்றியும் இலட்சியம் செய்யாமல் தைரியமாக விமரிசிக்கும் வீரமிகு இளைஞர் கூட்டம்!

ஓ! இந்தக் கட்டடத்தை விட்டு நான் பிரிந்து செல்லப் போகிறேன்! என் அன்புத் தோழர்களை விட்டு நான் விலகிச் செல்லப் போகிறேன்! வகுப்புக்கு அதிகப்படி ஒரு வருஷம், இரண்டு வருஷங்கள் என்று தங்கினால் கூட என்றேனும் ஒருநாள் படிப்பு முடிந்து விடுகிறதே!

இனி......?

நான் வேலை தேடிப் போக வேண்டும்.! வீட்டில் அடைபட்டுக் கிடக்க வேண்டும்!

உற்சாகமான இந்த வாழ்வை நான் மறுபடியும் அனுபவிப்பேனா?

எனக்குப் பாசமே கிடையாது என்று நினைத்திருக்கிறேன்!

ஆனாலும் எனக்கு ஏன் அழுகை வருகிறது?

கல்லூரி நாட்களில் நாடகப் போட்டி நடந்தபோது பாசத்தைப் பிழிந்தெடுத்து நாடகம் போட்டார்கள்.

''அம்மா!''

''மகனே!''

— என்று தாயும் மகனும், தகப்பனும் மகனும் இணையும் கட்டங்களில் எல்லாம் முதலில் கைதட்டி அவர்களை உள்ளே அனுப்பிய பெருமை என்னைத்தான் சார்ந்தது! என் நண்பர்களும் உடன் கைகொடுத்தார்கள்.

பாசமாவது, பந்தமாவது — என்று கிண்டல் பேசிய நான் ஏன் இன்று அழுகிறேன்!

இது... சே! இது வேறு... இது நட்பு!

அன்பு...? அது பைத்தியக்காரத்தனமானது!

இன்றுகூடக் கல்லூரி தமிழ் மன்றத்தைத் திறந்து வைக்க ஓர் அம்மா வந்தார்கள்.

அன்பைப் பற்றி அழகாகப் பேசினார்கள்.

யார் கேட்டார்கள்?

நான் கைதட்டலை ஆரம்பித்தேன்.

என் அன்பு நண்பர்கள் எனக்குக் கைகொடுத்தார்கள்!

பாவம் அவர்கள்! பேச முடியாமல் தவித்த போது, வேட்டையாடி ஒரு சிங்கத்தை வீழ்த்திவிட்ட மமதையில் சிரித்திருக்கிறேன்!

என் நண்பன் ஒருவன்....

வகுப்பில் புரொபசர் சொல்லிக் கொடுக்கும் போது.....

''அறுப்பு.''

''மியாவ்'', ''லொள்லொள்'' என்றெல்லாம் நாங்கள் இடையிடையே கத்துவோம்!

அவன் பேசாமல் நோட்ஸ் எடுத்துக் கொண்டிருப்பான், மடையன்!

சீக்கிரம் 'பாஸ்' செய்துவிட்டான்!

பிறகு நான் படித்துக் கொண்டிருக்கும் போதே ''ஓல்ட் பாய்ஸ் அஸோஸியேஷனில்'' அவன் பேச்சு ஏற்பாடாகியிருந்தது.

விடுவேனா?

அவன் பேச ஆரம்பித்ததும்...

''பேசாதே!''

''உய்.... உய்!'' என்றெல்லாம் கூச்சல்!

நான்தான் ஆரம்பிப்பேன்!

என் நண்பர்களும் தொடருவார்கள். நல்ல நண்பர்கள்....

யார், எதைச் சொன்னாலும், என்ன சொன்னாலும் கிண்டல் பண்ணுவது எனக்குக் கை வந்த கலை!

''மெல்லிசை'' நிகழ்ச்சிகளுக்கு ஒரு கூட்டமாக 'டிக்கெட்' வாங்கிக் கொண்டு போவோம்!

யாரையும் எங்களுக்குப் பிடிக்காது!

அவன் நன்றாகப் பாடினால்கூடக் கேட்க விருப்பம் இராது!

''மணியே, மணியின் ஒளியே'' என்றால், நாங்களும், ''மணியே.... ஒளியே!'' என்று கத்துவோம்!

இதெல்லாம் ஒரு 'ஜாலி'!

இதையெல்லாம் நான் இழக்கப் போகிறேன்!

என் அருமைத் தோழர்களைவிட்டு விலகப் போகிறேன்.

நான் ஊருக்கு வந்து ஒரு மாதமாகி விட்டது!

என் இயல்புகளை மாற்றிக் கொண்டு என்னால் இவர்களுடன் இணைந்து வாழ முடியவில்லை! இருந்தாலும் முயற்சி பண்ணுகிறேன்.....

ஒரு வேலை கிடைக்காதா!

நானும் அலையாத இடமில்லை!

ஊஹூம்!

அன்று — ....

''இண்டர்வ்யூ!''

எத்தனையோ கஷ்டப்பட்டுச் சிபாரிசுகள் பிடித்து எனக்குக் கிடைத்த வாய்ப்பு!

போகிறேன்.

ஏனோ பயமாக இருக்கிறது.

சே! என்ன பயம்!

நான் எத்தனை பேரைக் கிண்டல் செய்திருக்கிறேன்!

எனக்கு எதற்காக வீணாகப் பயம்?

என் முறை வந்த போது கிட்டத்தட்ட பகல் பன்னிரண்டு மணியாகிவிட்டது!

காலை எட்டு மணியிலிருந்து காத்துக் காத்து அநேகமாகச் சோர்ந்துவிட்டேன்.

உள்ளே நுழைந்தேன்.

'ஏர்கண்டிஷன்' அறைதான். இருந்தாலும் வியர்த்தது.

ஐந்து பேர் வரிசையாக அமர்ந்திருந்தார்கள்.

அவர்கள் ஐவரும் அனுபவத்தாலும் அறிவாலும் உயர்ந்தவர்கள் என்பதை அவர்கள் கண்



ளில் தெரிந்த அலட்சிய பாவத்திலிருந்து உணர முடிந்தது !

ஓ! நான் இப்போது மனிதர்களைக் கூர்ந்து பார்க்கிறேனே ?

என்னை யாரும் உட்காரச் சொல்லவில்லை.

உட்காரலாமா வேண்டாமா என்ற தயக்கம் !

எனக்கு வியர்த்துவிட்டது !

'கர்ச்சீப்'பைத் தேடுகிறேன்....

கிடைக்கவில்லை !

அந்த அவசரத்தில் இறுகக் கட்டிக் கொண்டிருக்கும் 'டை' இறுகுகிறது.

தளர்த்திக் கொள்கிறேன்.

'கர்சீப்' எங்கிருந்தோ கீழே விழுகிறது !

ஏன்? ஏன் இப்படி ?

ஓ! 'டை' கோட்டுக்கு வெளியே வந்து தன் பிரதாபத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது !

நான் அவசரமாக 'டை'யை உள்ளே தள்ளுகிறேன்.

என் பெரிய மோதிரம் 'கோட் பட்டனில்' மாட்டிக் கொள்ளவே தடுமாறுகிறேன்....

வந்த கோபத்தில் கையை இழுக்கிறேன்.

'பட்டன்' தெறித்து அந்த ஐவரில் ஒருவர் மீது 'கவண்' எறிந்த மாதிரி 'பட்'டென்று பட்டுத் தெறித்தது.

நான் பரபரப்புடன் ''ஐயோ ஸாரி'' என்கிறேன்.

அவர் தலையைத் தடவிக் கொள்கிறார்.

மற்ற நால்வரும் வந்த சிரிப்பை அடக்க மாட்டாமல் மெல்லச் சிரிக்கின்றனர்.

கடவுளே! இவர்கள் வாய்விட்டுச் சிரித்துவிட மாட்டார்களா ?

இந்த நமட்டுச் சிரிப்பு என்னைக் கொல்கிறதே ! பல பேர்களைக் கோமாளியாக்கிவேடிக்கை பார்த்தவன் நான். இன்று நானே 'பஃபூன்' மாதிரி நின்று கொண்டிருக்கிறேன்.

எனக்கு ஆத்திரமும் அழுகையும் வருகிறது.

நான் இவர்களைக் கேலி செய்ய வேண்டும்.

கிண்டல் செய்ய வேண்டும்.

என்னால் முடியவில்லை !

நான்.... நான் 'தனிமை'ப்படுத்தப்பட்டு விட்டேன்.

எனக்கு உதவிக்குக் கை கொடுக்க, உறுதுணையாக இருக்க என் அருமை நண்பர்கள் யாரும் என் அருகில் இல்லை !

கல்லூரியில் வெற்றி இறுமாப்புடன் இருந்த நான் இப்போது வாழ்வில் ஏன் இப்படி இடறி விழுகிறேன்?

நான் சோர்வுடன் வீட்டுக்கு வருகிறேன்.

''என்னடா.... இன்னிக்கு 'இண்டர்வ்யூ' என்ன பண்ணினாய்?''

அப்பாவின் வழக்கமான கேள்வி !

என்னாலும் வழக்கமான மௌனம்தான் சாதிக்க முடிகிறது!

பொழுது போகவில்லை.

பல கதைகளைப் படிக்கிறேன் !

நாமே கதை எழுதினால் என்ன?

வீணான நேரத்தைப் பயன்படுத்தின மாதிரியும் இருக்கும் .....



கல்கி சந்தா விவரம்

	ஒரு வருடம் ரூ. பை.	ஆறு மாதம் ரூ. பை.
இந்தியா	38-00	19-00
இலங்கை (இலங்கைநாணயம்)	38-00	19-00
இதர வெளி நாடுகள்	90-00	45-00

ஏதோ கைச் செலவுக்கு ஆகும்.

உழைத்து, கஷ்டப்பட்டு, தெருத் தெருவாக நாயாக அலைந்து 'ரியலிசம்' தேடி ஓர் அதியற்புதமான கதையை உருவாக்கினேன்.

இரவு பகல் கண் விழித்துச் சிந்தித்தேன்.

பல காகிதப் பணிகளுக்குப் பிறகு ஒரு கதை உயிர் பெற்றது.

எனக்கே திருப்தி.

பத்திரிகைக்கு அனுப்பினேன்.

இன்று போய்ச் சேர்ந்திருக்கும், ஆசிரியர் இப்போது படித்துக் கொண்டிருப்பார்.

நாளை பதில் வரும் — இப்படிப் பல கற்பனைகள்!

கதையில் பிரமாதமான இடம் என்று நான் நினைத்த இடத்தை மீண்டும் நினைவு படுத்தி ரஸித்துப் பார்ப்பதில் ஒரு தனி இன்பம்!

ஒரு வாரமாகி விட்டது. அன்று—

'இண்டர்வ்யூ'வுக்குப் போய்விட்டு வழக்கம் போல் சாதாரணக் கேள்விகளுக்குக் கூடப் பதில் சொல்ல முடியாமல் தோற்று, அவர்களின் மௌனமான ஏளனச் சிரிப்புக்கு இரையாகி, குற்றுயிரும், குறை உயிருமாகத் திரும்பிக் கொண்டிருந்தேன்.

''அண்ணா!... உனக்கொரு தபால்....''

ஆர்வத்துடன் தங்கை தந்த கவரைப் பார்க்கிறேன்......

என் கதை!

பிரசுரிக்க இயலாமைக்கு வருத்தம் தெரிவித்த ஆசிரியர் கடிதத்துடன் என் காலடியில் சமர்ப்பணமாகி விட்டது.

தங்கையின் முகத்தில் ஒரு குறும்புச் சிரிப்பு!

ஓ! இவளை நான் சாடித்தீர்க்க வேண்டும்.

அவள் அழும்படி கிண்டல் செய்து தோற்கடிக்க வேண்டும்!

என்னுடைய தோல்வியை, இவளை அடித்துப் போட்டு வீழ்த்துவதின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

அன்று அந்தக் கல்லூரி மேடையில், பேச வந்த அந்த அம்மாளைக் கைதட்டி அனுப்பிய மாதிரி, மெல்லிசை நிகழ்ச்சியில் பாட வாயைத் திறந்தவளைக் கைதட்டி அடக்கிய மாதிரி....

ஆனால்.... இப்போது.... என்னால் முடியவில்லையே! ஏன்?

வாழ்வில் பல வெற்றிகளைச் சந்தித்தவர்களை, பல சாதனைகள் புரிந்தவர்களை நான் மிக அலட்சியமாகச் சாடியிருக்கிறேன்; சாதாரணமாக மதித்திருக்கிறேன்!

இப்போது என்னால் ஒரு சிறு வெற்றியைக் கூடக் காண முடியவில்லையே! இதையெல்லாம் இன்று தனிமையில் சிந்திக்கிறேன்...

தனிமையில் நான் முதுகெலும்பில்லாதவனாகி விட்டேனா?

கூட்டம் சேர்த்துக் கொண்டு, கோழைத்தனமான போர்வையில், இருட்டில் கூட்டத்தோடு கூட்டமாக அமர்ந்து கொண்டு, பொய்யான பக்க பலத்துடன், வெளிச்சத்தில் நின்றவர்களைப் பார்த்துக் கைதட்டிச் சிரித்திருக்கிறேன். இன்று ஒரு சிறு ஒளியைக் கூட என்னால் காண முடியவில்லையே! கண் கூசுகிறதே! ஏன் இப்படி?

கடற்கரைத் தனிமையில் சிந்தித்தபடி அமர்ந்திருக்கிறேன்...

இங்குதான் எனக்கு மீனுவின் அறிமுகம் கிட்டியது. தினம் தினம் தவறாமல் அவளைச் சந்திப்பதில் ஒரு தனி இன்பம் இருந்தது.

அவளோடு பேசுவதில் ஓர் இதம் இருந்தது. சோர்வுற்ற என் மனத்துக்கு அவள் பேச்சு ஒரு டானிக்காக இருந்தது.


என் மனத்தை அவளுக்கு விண்டு காட்ட நினைக்கிறேன். முடியவில்லை... பயமாக இருக்கிறது... அவள் என்னை விரும்புவாளோ? எனக்குப் புரியவில்லை...

இன்று எப்படியும் சொல்லிவிட வேண்டும்.

''ராஜன்!... இன்று ஒரு மீட்டிங் இருக்கிறது. போவோமா?''

அவளுக்கு இந்த இலக்கியத்தில் எல்லாம் ஆர்வம் உண்டு... அவளுக்காக நானும் சிலவற்றில் என்னை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. நானும் கிளம்பினேன்.

'மீட்டிங்' ஆரம்பமாகி விட்டது. ஏதோ பட்டி மன்ற விவாதம். ஹாலில் கூட்டம் நிரம்பி விட்டதால் நாங்கள் வெளியே ஓர்



''இன்று டிஸ்பென்ஸரி ஆரம்பிக்கப் போகிறேன். ஆசி புரியுங்க தாத்தா!''

''சிரிஞ்சும் கையுமாகச் சிரஞ்சீவியாக இரு.''


உடலுக்கழகு
உடைகள்—அவை.
நாளெல்லாம்,
நாளுக்குநாள்
புதுமையுடன்
மிளிர்வது
அவசியம்.
அழகு?
யாருக்கு
வேண்டும்?
நீடித்து நிற்கும் அழகான
துணிகளுக்கு-டெபிலைஸ்ட்
குறியைப் பார்த்து வாங்குங்கள்
'டெபிலைஸ்ட்' துணிகள், சுருக்கம் விழாதவை என நிரூபணம் பெற்றவை. கசங்காது, எனவே காலெல்லாம் நீடித்த புதுமைத் தோற்றம். உலகெங்கும் நம்பகம் பெற்ற 'டெபிலைஸ்ட்' சின்னம், நீங்கள் தேர்ந்தெடுக்கும் துணிகள் மீது இருக்கிறது.
இந்தியாவின் முன்னணியில் நிற்கும் மில்களான அரவிந்த், பாம்பே டையிங், பின்னி, டிஸிஎம், மஃபத்லால், ஸ்ரீ அம்பிகா, டாடா மற்றும் தாக்கர்ஸே ஆகிய மில்கள் 'டெபிலைஸ்ட்' குறியை உபயோகிக்கின்றன. நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மீட்டர் துணியிலும் 'TEBILIZED' சின்னம் இருக்கிறதா என்று பார்த்து வாங்குங்கள்.
TESTED CREASE RESISTANCE
TEBILIZED®
MINIMUM IRONING • DURABLE GOOD LOOKS
TEBILIZED®
துணிகள் சுருக்கம்
விழாதவை என
நிரூபணம் பெற்றவை—
நீடித்த நல்ல தோற்றத்திற்கு.
டிரேட் மார்க் உரிமையாளர்கள்—
மேட்டூர் பியர்ட்செல் லிட்.
த.பெ. எண் 7, சென்னை 600 001.
Sista's-MBT-336/75 K•Tam



தோற்றம்: 8-7-1910 மறைவு: 31-1-1976

விடுமுறையிலிருக்கும் சென்னை மாநகரப் போலீஸ் கமிஷனர் திரு கே. ராதா கிருஷ்ணன் அவர்களின் தாயார் **ராஜம்மாள்** 30-1-76 அன்று காலமானார். அவரது மறைவு குறித்து அநுதாபச் செய்திகள் அனுப்பியுள்ள எல்லோருக்கும் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் நன்றி தெரிவிக்கிறார்.

ஓரமாக நின்றபடி கேட்டுக் கொண்டிருந்தோம்.

எனக்கு ரசிக்கவில்லை....

இதுவே கல்லூரியாக இருந்தால்...? ஓ! இதுபோல் 'போர்' அடிப்பவர்களைக் கைதட்டி முதலில் உள்ளே அனுப்பி விருப்பேன்!

எவ்வளவு பொறுமையுடன் கேட்கிறாள் இவள்!

அவளைப் பார்க்கிறேன். உணர்ச்சியின் துடிப்பில் மெய்மறந்து ஆழ்ந்திருக்கிறாள்!

''மீனு!'' — நான் மெல்லக் கிசுகிசுத்தேன்.

அவள் என் பேச்சைக் கேட்டதாகவே தெரியவில்லை.

''மீனு!'' — நான் மறுபடியும் அழைத்தேன்.

மேடைப் பேச்சாளர் அன்பைப் பற்றி 'அளந்து' கொண்டிருந்தார்.

''மீனு... ஒரு பிரச்னைக்கு முடிவு சொல்ல முடியுமா?''

அவள் என்னை வியப்புடன் திரும்பிப் பார்த்தாள். ''மேடையில் வாழ்க்கைக்குத் தேவை பணமா? — பாசமா? என்கிற பிரச்னைக்கு முடிவுகட்ட முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.... உங்களுக்கென்ன பிரச்னை இப்போது?'' — அவள் மெல்ல என்னிடம் சிரித்தபடி கேட்டாள்.

''மீனு...! உன்னை நான் காதலிக்கிறேன்... நீ இல்லாமல் இருக்க முடியாது என்று உணருகிறேன்... நீ என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறாயா?'' — நான் அனாவசியமாகப் பேச்சை வளர்த்த விரும்பாமல் 'சட்'டென்று பிரச்னைக்கு வந்தேன்.

அவள் என்னை வியப்புடன் பார்த்தாள்.

'ப்ளீஸ் மீனு! என்னை விரும்புவதாகச் சொல். இல்லை என்று சொல்லிவிடாதே! வாழ்வின் பல கட்டங்களில் தோல்விகளைக் கண்டு சோர்ந்து போயிருக்கும் எனக்கு உன் பதில்தான் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தரவேண்டும்! 'நெகடிவ் ரிப்ளை' தந்துவிடாதே! ப்ளீஸ்....'

''ரொம்ப அவசியமான கேள்வியா?''— அவள் மெல்லக் கேட்டாள்.

''நிச்சயமாக...''

''மேடைப் பேச்சைக் கேளுங்கள்...''

எனக்குப் பிடிக்காத ஒன்றை மீனு செய்யச் சொல்கிறாள். ஆனாலும் அவளுக்காக நான் அதைச் செய்தேன்.

''வாழ்வுக்குத் தேவை பணம்! வாழ வசதிகள்! ஐம்பது பைசாவுக்குப் பூ'வாங்கித் தர முடியாதவன் காதலியின் அழகை வர்ணித்துப் போலி அன்பு காட்டுவதில் அர்த்தமில்லை! 'யதார்த்த' உலகில் பாசம் பைத்தியக்காரத்தனமானது.....''

நான் மேலே கேட்கவில்லை. அன்பைப் பற்றி என் பழைய கருத்துக்களைத்தான் இவனும் சொல்கிறான்; அன்பைப் போலி என்றுசொன்னவன்தான் நான். அன்றுகூட கல்லூரியில் அன்பின் பெருமைகளைப் பேச வந்தவர்களை நான் கிண்டல் செய்து அனுப்பி வைத்தேன். ஆனால்.... ஆனால்.... இன்று.... இன்று.... அதே அன்புக்கு ஏன்... ஏன்... இப்படி ஏங்குகிறேன்?

அப்பா அனுப்பித் தந்த பணத்தில் 'ஹாஸ்டலில்' நிம்மதியாக வாழ்ந்து கொண்டு அன்பைக் கிண்டல் செய்வது எனக்கு ரொம்ப வசதியாக இருந்தது. இன்று....? நான் மாறிவிட்டேனு?

மீனு என்னைப் பார்த்தாள்.

''முதலில் ஒரு வேலையைத் தேடிக்கொள்ளுங்கள்..... காதலும், அன்பும் சோறு போடாது! பாக்கி பிறகு....''

நான் திகைக்கிறேன்.

வேலை! இண்டர்வ்யூ! கிண்டல் சிரிப்புகள்! நமட்டுச் சிரிப்புக்கள்!

சமுதாயத்தின் பல்வேறு பிரதிநிதிகள் என் முன்னே நின்றபோது ஒவ்வொருவரையும் கிண்டல் செய்திருக்கிறேன்... சமூகத்தின் பல்வேறு கோணங்களைப் பிரதிபலித்தவர்களை ஒட்டுமொத்தமாகப் போட்டு அடித்து வீழ்த்தி வெற்றிச் சிரிப்புச் சிரித்திருக்கிறேன்!

அன்று என்னைச் சுற்றி ஒரு கூட்டம்!

இன்று....?

ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு கோணத்திலும், ஒவ்வொரு அசைவிலும் இந்தப் பாழும் சமுதாயம் பரவி நின்றது. பிரும்மாண்டமான விசுவரூபமெடுத்துத் தன்னுடைய பயங்கரமான கரங்களைத் தட்டிக் கொண்டு எனக்கு எதிரியாக நின்றுகொண்டு 'ஓஹோ'வென்று என்னைப் பார்த்து அரக்கத்தனமாகச் சிரிப்பது போன்ற உணர்வு!

இன்று நான் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டேன்! இல்லை... இந்தச் சமுதாயத்தைப் பார்த்துப் பதிலுக்கு நானும் சிரிக்க வேண்டும்! கைகொட்டிச் சிரிக்க வேண்டும்...

ஓ! என் அருமைத் தோழர்களே... நீங்கள் அனைவரும் எங்கே இருக்கிறீர்கள்?


நான் மனம் வெதும்பிப் போகிறேன்.

திடீரென்று கூட்டத்தில் ஒரு சலசலப்பு! கிண்டல் பேச்சுக்கள்! ஓ! மேடைப் பேச்சாளர் 'போர'டிக்கிறாரோ?

யாரோ ஒருவன் கைதட்ட, அதைத் தொடர்ந்து கைவொலிகள்! ஓ! என்னைப் போல் இங்கும் ஒருவன்! பாவம் அவன்!

நாளை அவனும் இண்டர்வியூ போவான், தோற்றுப்போவான், கதை எழுதுவான், திரும்பி வரும், காதலில் ஏமாந்துபோவான்! அதற்குப் பிறகு அவனும் மாறுவான்!

ஆனால் அதுவரையில் அவனைத் திருத்த முடியாது!



ஷூ, ஷூ ஷூ, ஷூ!

மழை காலத்தில் விறைத்துப்போன ஷூக்களுக்கு மண்ணெண்ணெய் நல்ல மருந்து.

நனைந்த செருப்புக்களைப் பழைய நியூஸ் பேப்பரில் சுருட்டி வைத்தால் சீக்கிரம் உலரும்.

உபயோகிக்காத ஷூக்களுக்கு உள்ளே நியூஸ் பேப்பரை அடைத்து வைத்தால் நசுங்காமலிருக்கும்.

ஷூ பாலிஷ் காய்ந்து போனால் டர்பன்டைன் கலக்கவும் —கல்கி வீக்லி - கே. ஆர்.

CIL-281-TAM




உங்கள் நெற்பயிர்ப் பகைகள் பல உண்டு—ஆனால் ஒரே நண்பன்...

ஸைதியான்* 50% ஈஸி மற்றும் 5% டஸ்ட்

இருவடிவிலும் ஸைதியான்* பாதுகாப்பானது சக்தி வாய்ந்தது, சிக்கனமானது.

நெல் உங்கள் முக்கிய உணவு—நெற் கருவண்டு.
இலை சுருட்டும் புழு. நாற்றுப் பூச்சி. இலைத் தத்துப்
பூச்சி போன்ற பூச்சிகளுக்கல்ல.
அவவாறிருக்க. உங்கள் விளைச்சலின் பயனை அவை
அனுபவிக்க விடுவானேன்? ஸைதியான்* வாங்குவீர்,
தொல்லை தரும் பூச்சி புழுக்களைப் பூண்டோடு
அழிக்க அதனை உபயோகியுங்கள். ...அமோக நெல
விளைச்சலால அபரிமித இலாபம் பெறுவீர்.
ஆம், ஸைதியான்* உங்கள் சிறந்த நண்பன்.



ஸைதியான்*—
அமோக நெல்
விளைச்சல்: அபரிமித
இலாபம்.

CYANAMID

ஒவ்வொரு உழவருக்கும் நம்பிக்கையூட்டும் உண்மையான பெயர்

ஸயனமைடு இந்தியா லிமிடெட்;
பி. ஓ. பாக்ஸ் 9109, பம்பாய் 400 025

* Registered trademark of American Cyanamid Company, Wayne, New Jersey U.S.A.

ரஷ்ய மொழியில் "கல்கி"

"நான் ரஷ்ய, தமிழ் இலக்கியங்களில் முறையே பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டு சிறுகதைகளில் உள்ள சமூக பழக்க வழக்கங்களை ஆராய்ந்து ஆராய்ச்சிக் கட்டுரை தயாரித்தேன். அமெரிக்காவில் உள்ள ப்ரௌன் சர்வகலாசாலை எனக்கு டாக்டர் (பி.எச்டி) பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கிறது. பேராசிரியர் கல்கியின் சாரதையின் தந்திரம் 'என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் எனது ஆராய்ச்சிகளில் முக்கியமானது" என்று டாக்டர் குமாரி காமாட்சி பாலசுப்பிரமணியம் விளக்குகிறார். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் டில்லியில் தொடங்கப்பட்ட ரஷ்ய கல்விக் கேந்திரத்தில் குமாரி காமாட்சி பாலசுப்பிரமணியம் ரஷ்ய மொழி இலக்கியத்தில் ஆரம்பப் பயிற்சி பெற்று, பிறகு மாஸ்கோ சர்வகலாசாலையில் நான்கு வருஷங்கள் ரஷ்ய மொழி படித்து எம். ஏ. பட்டம் பெற்றார். படிக்கும் காலத்திலேயே மாஸ்கோ சர்வகலாசாலையில் தமிழ் பயில்விக்கும் ஆசிரியையாகவும் இரண்டு ஆண்டுகள் பணி புரிந்திருக்கிறார்.

மாஸ்கோவில் அவருக்கு ஏற்பட்ட ஓர் அநுபவத்தைத் தமக்கே உரிய முறையில் விளக்கினார் !

"மாஸ்கோவில் தங்கியிருந்த காலத்தில் ஐம்பது கிலோ மீட்டர் தூரத்துக்கு அப்பால் உள்ள பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமானால் அநுமதி பெற வேண்டும். என் தோழி ஒருத்தியின் இல்லம் அவ்விதம் தொலைவில் இருந்தது. அங்கே செல்ல அநுமதி கேட்டபோது அநுமதி வழங்க மறுத்து விட்டார்கள். மற்றொரு ரஷ்ய தோழியின் வீட்டுக்கு அநுமதி பெற்றுச் சென்றேன். அங்கு மறு நாள் காலையில் தடதட வென்று வாசல் கதவு தட்டும் ஓசை கேட்டது. 'இந்த இல்லத்துக்கு அந்நிய தேசத்தவர் யாராவது வந்திருக்கிறாரா?' 'ஆமாம்! நான் தான் வந்திருக்கிறேன். அநுமதியோடு !' என்றேன். 'நான் இந்த ஊர் இரகசியப் போலீஸ்காரன். அயல்நாட்டவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் அல்லவா?' என்று சமயோசிதமாகச் சொல்லி விட்டு நடையைக் கட்டினார் அந்த இரகசியப் போலீஸ்காரர்! இரும்புத் திரை நாட்டில் ஏற்பட்ட இந்த அநுபவம் என் மனத்தை விட்டு அகலவில்லை!" என்கிறார் டாக்டர் குமாரி காமாட்சி.

"பேராசிரியர் கல்கியைப் பற்றி தங்கள் ஆராய்ச்சியில் குறிப்பிட்டுள்ளதைச் சொல்லுங்கள் !"

"கல்கியின் கவர்னர் விஜயம் என்ற நகைச்சுவைக் கதையை ரஷ்ய நகைச்சுவை ஆசிரியர் கோகோலின் 'ரிவிசர்' (இன்ஸ்பெக்டர் ஜெனரல்) கதையோடு ஒப்பு நோக்கியுள்ளேன். இருவரது நகைச்சுவை பாணியும் நுணுக்கமும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. இதோ சோவியத் மொழி வல்லுநர் வி.ஏ. மகரன்பா சொல்கிறார்: "தீண்டாமை ஒழிப்பு, விதவை மறுமணம், கலப்பு மணம், மூட மத நம்பிக்கைகள், காலனி ஆதிக்கம், மகாத்மாவும் அவரது சீடர்களும் நடத்திய



○ குமாரி காமாட்சி - மக்கள் திலகம்

○ குமாரி ராதா.



போராட்டங்கள் போன்றவை கல்கியிடம் கதை உருபெற்றன. கல்கியின் கதைக் கருக்கள் எண்ணில் அடங்காதவை. இந்தத் தமிழ் இலக்கியகர்த்தா வாழ்க்கையிலிருந்து நேரடியாக அனுபவ உண்மைகளைக் கதை வடிவில் வழங்கினார். அவர் கேட்ட கதைகள், பத்திரிகைச் செய்திகள் ஆகியவற்றை உண்மையில் நிலவும் கதாபாத்திரங்களாகச் சிருஷ்டித்தார். அவரது எழுத்துத் திறன் வளர்பிறை போல் வளர்ந்தது. டிக்கின்ஸ், மாப்பஸான், டால்ஸ்டாய், கார்க்கி போன்றவர்கள் எல்லாம் அவருக்கு இலக்கிய ஆசிரியர்களாகத் திகழ்ந்திருக்க வேண்டும்...'' டாக்டர் காமாட்சியின் ஆராய்ச்சி இப்படி விரிந்து பரந்து ரஷ்ய அறிஞர்கள் கல்கி பற்றி என்ன கூறியுள்ளார்கள் என்பதையும் அணைத்துச் செல்கிறது.

''ராதா என்றால் ரஷ்ய மொழியில் மகிழ்ச்சி என்று அர்த்தம். 'நான் ராதா' என்று அறிமுகம் செய்து கொண்டால் போதாது. அது பெயர் என்று ரஷ்யருக்கு மறுபடியும் விளக்க வேண்டிய தருணம் ஒவ்வொரு தடவையும் ஏற்பட்டது!'' என்று தம் மாஸ்கோ விஜயத்தைப் பற்றி இளைய சகோதரி ராதா கூறினார்.

குமாரி ராதா தற்சமயம் சென்னை சர்வகலாசாலையில் ரஷ்ய மொழி ஆசிரியையாகப் பணியாற்றுகிறார்.

இண்டி ஐ.ஐ.டி. கல்லூரியில் விரைவில் ரஷ்ய மொழிப் பாடம் தொடங்க விருக்கிறார்கள். அதனை நடத்தும் பொறுப்பும் குமாரி ராதாவுக்குக் கிட்டியுள்ளது.

பேட்டி : – பி. எஸ். எம்.

வீட்டில் கணவன் – மனைவி; வெளி உலகுக்கு, அவள் ஆலை முதலாளி, அவன் அதே ஆலையில் வேலை பார்க்கும் ஒரு தொழிலாளி– அத்துடன் தொழிலாளர் யூனியன் தலைவன். வழக்கமான பாதையிலிருந்து மாறுபட்ட கதைதான்.

ஜெயலலிதா அயல்நாட்டிலிருந்து விமானத்தில் வந்து இறங்கியதிலிருந்தே எல்லாரையும் மிரட்டி, உருட்டி அமர்க்களப்படுத்துகிறார்; ஆரம்பக் கெடுபிடியைக் கடைசி வரையில் நன்றாய்க் கையாள்கிறார். கணவனுக்குப் பணிவிடை செய்யும் போது மிகவும் பரிவோடும், பாசத்தோடும், பதவிசோடும் நடந்து கொண்டு தம் பாத்திரத்துக்குத் தனித்தன்மையை ஏற்றி விட்டார்.

முத்துராமன் கணவனாகவும், தொழிலாளர் யூனியன் தலைவனாகவும், ரொம்ப நன்றாக நடித்திருக்கிறார்; சில இடங்களில் பார்வையிலேயே நடித்திருக்கிறார். தாம் காதலித்த பெண்தான் ஆலை முதலாளி என்று அறிந்து கொண்டதும், வியப்பு, திகைப்பு, வெறுப்பு, வேதனை இத்தனையையும் கொட்டி, கும்மாளச் சொல்லப்படாது. மனிதன் நடிப்பில் அமர்க்களப்படுத்தி விட்டார் !

ஜெயலலிதா, காதல் வசப்பட்ட தன் உள்ளத்தைத் தன் மாமன் மகள் குமாரி சச்சவிடம் திறந்து காட்டிய போது, ''...ஸ்கூட்டரில் மோதி என்னை வம்புக்கு இழுத்து, அலைக்கழித்து அழ வைத்தும் எனக்கு ஏனடி அவரிடம் கோபம் வரவில்லை.....? அதற்குப் பெயர்தான் காதலோ....'' என்று கேட்டுத் தன்னை மீறிய மகிழ்ச்சியில் திளைத்தபோது அவர் நடிப்பு 'சபாஷ்' போட வைக்கிறது.

தங்கவேலு, கருணிராஜன், குமாரி சச்சு, உசிலை மணி ஆகியவர்கள் நகைச்சுவைக்கு ஆதரவாயிருக்கின்றனர். ஸ்ரீ காந்த் வில்லனாக வந்து படத்துக்கு விறுவிறுப்பூட்டியிருக்கிறார். கணவன் – மனைவி இருவருக்கும் இடையே ஒரு போலீஸ் அதிகாரி – அதுதான் முத்துராமனின் தந்தையாக வரும் வி. எஸ். ராகவன், தொழிலாளர்களின் கலகத்தை அடக்கிப் படத்தை நீட்ட உதவியிருக்கிறார்.

திரைக்கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை ஏற்றிருப்பவர் அநுபவம் மிகுந்த டைரக்டர் ஏ. பீம்சிங். அநுபவம் பேசுகிறது !

–கார்த்தன்




மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—

இன்க்ரிமின்*

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்... இப் பருவத்தில் அவனுக்குக் கட்டாயம் தேவை இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான்... உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, இவற்றோடு உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.





இன்க்ரிமின்* டானிக்

டிராப்ஸ்: 2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்: 14 வயது வரையில்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle சயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் சயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்

நமது நாட்டில் வேகமாகப் பிரபலமடைந்து வருகிறது வெண் பனிச் சறுக்கு விளையாட்டு ஸ்கீயிங். இந்த விளையாட்டில் சென்ற ஆண்டு பன்னிரண்டே வயதான தீபக் சர்மாவும், தங்கை சங்கீதாவும் அகில உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளனர்.

தீபக்கும், சங்கீதாவும் இமயத்தில் 13,500 அடி உயரமுள்ள ரோதாங் கணவாயை வெண் பனியில் சறுக்கிக்கொண்டே கடந்தனர். இது ஹிமாசலப் பிரதேசத்தில் லாஹுல், ஸ்பிட்டி ஜில்லாக்களில் இருக்கிறது. சங்கீதாவின் இச் செயல் அகில உலக சாதனையாகும். ஏழு வயதில் 'ஸ்கீயிங்'கில் இத்தகைய சாதனையை யாரும் புரிந்ததாகத் தெரியவில்லை.

ஹிமாசலப் பிரதேசத்தில் ரஹ்லா என்ற இடத்திலிருந்து புறப்பட்டு இரவு 'மாரி' என்ற இடத்தில் தங்கி அடுத்த நாள் ரோதாங் கணவாயைக் கடந்து காக்ஸர் போய்ச் சேர்ந்தனர். மறுநாள் காக்ஸரிலிருந்து ரஹ்லாவுக்குப் பிரயாணம். மொத்த தூரம் 75 கி.மீ. இருபத்தைந்து கிலோமீட்டர் பனியால் மூடப்பட்ட மலைகளில் ஏறினர். ஐம்பது கிலோ மீட்டர் பனிச் சரிவில் ஸ்கீயிங் செய்தனர். இருபது அடி முதல் முப்பது அடிவரை கட்டியாக உறைந்த வெண்பனி. காக்ஸர் நகர் அடையாளமே தெரியாத அளவுக்குப் பனியால் மூடப்பட்டிருந்தது. பனிக்கட்டிகளை அப்புறப்படுத்திவிட்டுத்தான் விருந்தினர் மாளிகைக்குள் செல்ல முடிந்தது.

வருடத்தில் பல மாதங்கள் குளிர், பனி, பனிக் காற்று ஆகிய காரணங்களால் ரோதாங் கணவாய் பிரயாணத்துக்கு ஆபத்தானது என்று அதிகாரிகள் அறிவித்துவிடுவார்கள். சிறுவர்கள் தீரச் செயலைச் செய்தது இம்மாதிரியான ஆபத்தான காலத்தில்தான். தவிரவும் ரோதாங் கணவாயைக் குளிர் காலத்தில் கடக்க முயன்றதில் பலர் உயிர் இழந்ததால் இதற்கு 'இறப்பின் சமவெளி' என்று பெயர். பகலில் சூரிய வெப்பத்தினால் பனிக் கட்டியின் மேற்பரப்பு சிறிதளவு உருகும். இரவில் இது மறுபடியும் உறையும். வேகமாக வீசும் காற்று இப்படி உறைந்த பனித் துகள்களை அவ்வழி வரும் பிரயாணிகளின் மேல் வாரி அடிக்கும். இதனால் ஏற்படும் சிரமம் அதை அனுபவிப்பவர்களுக்குத்தான் தெரியும். வழியில் பல இடங்களில் பனிக் கட்டிகள் உடைந்து அகன்ற பிளவுகள் இருக்கும். பாதையில் ஏறத்தாழச் செங்குத்தான ஏற்ற இறக்கங்கள் நிறைய உண்டு. 'அவலான்சி' எனப்படும் பனிப் பாறைச் சரிவு மிகவும் ஆபத்தானது. குளிரோ மிக மிக அதிகம். இத்தனை சிரமங்களையும் எதிர்த்து இவ்வளவு பயங்கரமான பாதையில் சென்று கணவாயைக் கடப்பதற்குத் திறமை, மனோதைரியம், உடல் வலிமை ஆகியவை வேண்டும். இவர்களின் அதிதீரச் செயலைப் பிரதமர் இந்திரா காந்தி பாராட்டிக் கடிதம் எழுதியிருக்கிறார். அரிய சாதனைகளைப் புரிய மூல காரணமாக ஏதேனும் ஒரு நிகழ்ச்சி அமைவது இயல்பு. ஒரு நாள் தீபக் 'ஸ்கீயிங்' சம்பந்தப்பட்ட ஒரு ஜப்பானியப் படத்தைப் பார்க்க நேர்ந்தது. அன்றிலிருந்து அவனுக்கு ஸ்கீயிங்கில் ஆர்வம் ஏற்பட்டது. தந்தையின் பக்க பலமும் சேர்ந்தது. இரண்டாண்டுகள் கடுமையான பயிற்சி பெற்றார்கள். சங்கீதா பெற்ற பயிற்சி சில மாதங்களே. ஆனால் இருவரும் இரவு பகலாய் இப்பயணத்துக்காக விசேஷப் பயிற்சி பெற்றனர்.

தீபக் சர்மா சிம்லாவில் செயிண்ட் எட்வர்ட் பள்ளியில் ஏழாம் வகுப்பும், சங்கீதா அதே சிம்லாவில் அக்லாண்ட் பள்ளியில் மூன்றாம் வகுப்பும் படிக்கின்றனர். இவர்களின் தந்தை திரு ஓம் பிரகாஷ் சர்மா இந்தியப் போலீஸ் சர்வீஸைச் சேர்ந்தவர். இவர் மிகவும் கண்டிப்பானவர். தூய பழக்க வழக்கங்களை உடையவர். மலைக் காடுகளை ஊடுருவி நடப்பதில் ஆர்வமுடையவர். ஒரு சிறந்த சித்திரக்காரரும் கூட. இவர் வரைந்த ஆயிரம் சித்திரங்களின் கண்காட்சி சிம்லாவில் நடைபெற்றிருக்கிறது.

இமயம் வியந்தது; எவரெஸ்ட் திகைத்தது!



குழந்தைகள் இருவருமே பனிச் சறுக்கலில் மட்டுமின்றிப் பள்ளியிலும் திறமையான மாணவர்கள். சங்கீதாவுக்குப் பாட்டு பிடிக்காமல் இருக்குமா? அதையும் ஒரு கை பார்க்கிறாள்!

ஆதாரம்:
பிரமீளா பிள்ளை
எழுதிய கட்டுரை



ஒரு புதிய அவல்!

வம்பன்

மோரீஷஸ் தீவிலிருந்து வந்திருந்த அந்நாட்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் திரு சன்னுசி அவர்களுக்கும் திரு ஏ. வி. செட்டியார் அவர்களுக்கும் ராயல் என்பீல்ட் திரு எஸ். விசுவநாதன் சென்னை சுதர்சன் ஹோட்டலில் விருந்துபசாரம் செய்தார். திரு சன்னுசி அவர்கள், தங்கள் தாய்நாட்டில் அதாவது மரீஷஸ்ஸில் ஏராளமான தமிழர்கள் வாழ்கிறார்கள் என்றும், அவர்கள் ஏதோ வகைத் தமிழ் — ஆங்கிலம் — பிரெஞ்சு கலந்த தமிழ்— பேசினாலும் தமிழ் மொழியிலும் தமிழ் வாழ்க்கை முறையிலும் மிகுந்த பற்றுக் கொண்டுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார். அங்கு புதிதாகத் திறக்கப்படவிருக்கும் மகாத்மா காந்தி இன்ஸ்டிடியூட்டுக்குத் தமிழில் டாக்டர் பட்டம் பெற்ற ஒருவரை ஆசிரியராகத் தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் போவதாகவும் அதே போல் தெலுங்கு மொழிக்கு ஆசிரியரைத் தேர்ந்தெடுப்பதும் தங்கள் நோக்கம் என்றும் தெரிவித்தார்கள். சமீபத்தில் நடக்கவிருக்கும் அந்நாட்டு சுதந்திர தின விழாவுக்கு, விசேஷ விருந்தினராகத் தமிழ்த் திரைப்பட நடிகர் திரு சிவாஜி கணேசனை அழைத்திருக்கிறார்கள்.

மரீஷஸ் தீவில் 107 கோயில்கள் இருக்கின்றன என்றும், தீபாவளி, பொங்கல், தமிழ் வருஷப் பிறப்பு, ராமநவமி — இப்படிப் பல நாட்களை அரசாங்கம் தேசிய விடுமுறை நாட்களாகக் கருதுகிறது என்றும் தெரிவித்தார்கள்.

நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் நம்மவர், தாய்நாட்டை விட்டுப் பிழைப்புத் தேடி உலகின் பல பகுதிகளுக்குச் சென்று அந்த அந்த நாட்டு மக்களின் வாழ்க்கையைச் செம்மைப் படுத்தி யிருக்கிறார்கள். இப்பொழுது அம்மக்களின் சந்ததியாரைச் சில நாடுகள் ஈவு இரக்கமின்றி விரட்டியடிக்கின்றன. மரீஷஸ் தீவில் அப்படி இந்திய நாட்டிலிருந்து சென்ற மக்களே பெரும்பான்மையாக வாழ்ந்து, சுதந்திர ஆட்சி நடத்துகிறார்கள் என்பது ஒவ்வோர் இந்தியனுக்கும் பெருமகிழ்ச்சி அளிக்கும்.

''தமிழ், சம்ஸ்கிருதம், மற்ற மொழி ஆராய்ச்சி நிறுவன''த்தின் ஆதரவில் ஓர் அரிய கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்குக்குத் தலைமை வகித்து உரையாற்றிய தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரை அன்று கேட்டவர்கள் கொடுத்து வைத்த பாக்கியசாலிகள்.

ஒரு குழந்தை நான்கு வயதுக்குள் மொழி அமைப்பை — இலக்கணத்தை — முற்றும் கற்று விடுகிறது. அது பேசும் ஒவ்வொரு வாக்கியமும் புதிய சிருஷ்டியே யொழிய, சொன்ன வாக்கியத்தையே திருப்பிச் சொல்வதில்லை. இப்படி ஒரு சிருஷ்டித் தத்துவம் மதலையிடம் இயல்பாகத் தொடங்கிவிடுகிறது என்று தெ. பொ. மீ. சொன்னபோது மெய்சிலிர்த்து விட்டது. இன்னும் எவ்வளவோ நுட்பமான விஷயங்களையும் கருத்துக்களையும் சொல்லி வந்தார். எல்லாத் தமிழறிஞர்களும் புலவர்களும் தெ. பொ. மீ. போலப் பரந்த நோக்கமும் நுண்ணிய அறிவும் பெற்றவர்களாக இருந்தால் தமிழ் மாணவ உலகம் புதிய விழிப்பைப் பெறும்.

குஜராத்தி இலக்கியத்தில் நகைச்சுவைத் துறையில் பெரிதும் பணியாற்றியவர்கள் பார்ஸி சமூகத்தினர் என்று ஸ்ரீ உமாசங்கர் ஜோஷி குறிப்பிட்டார்.

பார்ஸிக்காரர்கள் ஈரான் நாட்டிலிருந்து ஓடி வந்து இந்தியாவில் குடியேறியவர்கள். இவர்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியாகிய குஜராத் மாநிலத்துக்கு வந்தனர். அப்போது குஜராத்தை ஆண்ட மன்னரிடம் தாங்கள் அங்கு குடியேற விரும்புவதாகப் பார்ஸி மத குரு தூது அனுப்பினார். குஜராத் மன்னன், தங்கள் நாடு நிரம்பி விட்டது. இன்னும் யாரையும் ஏற்றுக் கொள்ளும் நிலைமையில் இல்லை என்று குறிக்கும் வகையில் ஒரு பாத்திரம் நிறையப் பால் ஊற்றி அனுப்பி வைத்தானாம். புத்திசாலியான பார்ஸி மதகுரு, மன்னரின் குறிப்பறிந்து, மீண்டும் அந்தப் பால் பாத்திரத்தைத் திருப்பி அனுப்பினான். மன்னன் பால் பாத்திரம் பழையபடி வந்திருப்பதை உணர்ந்து இதற்கு ஏதோ பொருள் இருக்க வேண்டும் என்று அந்தப் பாலைச் சற்று வாயில் போட்டுப் பார்த்தான். இனித்தது!

மன்னர் புரிந்து கொண்டார். பார்ஸியர் வந்து ஏற்கனவே வாழும் மக்களை அப்புறப்படுத்த மாட்டார்கள். உள்நாட்டு மக்களோடு இணைந்து கரைந்து அவர்கள் வாழ்க்கையை இனிக்கச் செய்வார்கள். இந்தப் பொருளில், தான் அனுப்பிய பாலில் சர்க்கரை கலந்து அனுப்பியிருக்கிறார் மத குரு.

அன்று பார்ஸி மதகுரு உணர்த்தியதை இன்றளவும் மெய்ப்பித்து வருகின்றனர்.

நண்பர் திரு சாவிக்கு ஒரு மறு பெயர் உண்டானால் அது 'துணிச்சல்' என்றுதான் இருக்க முடியும். அவர் எழுத்துத் துறையில் இறங்கின நாளிலிருந்து பலவகையான ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. எத்தனையோ பத்திரிகைகள் தொடங்கி யிருக்கிறார்; பல தொழில்கள் நடத்தி யிருக்கிறார். எதைச் செய்தாலும் அவர் மனம் மட்டும் நகைச்சுவை எழுத்திலேதான் நாட்டம் கொண்டிருந்தது. அவர் நகைச்சுவை எழுத்தில் நாட்டம் கொண்டாலும் இலக்கியத்தில் பல்வேறு துறைகளுண்டு என்பதை உணர்ந்து அவர் ஆசிரியப் பொறுப்பேற்ற பத்திரிகையில் அவற்றை முகிழ்க்கவும் மலரவும் விட்டார். எல்லாக் கட்சியாளருடனும், எல்லா இலக்கியப் படைப்பாளருடனும் உரிய மரியாதை வழங்கிப் பழகும் திரு சாவி அவர்களின் அறுபதாண்டு நிறைவு மணி விழா கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது. இறைவன் அருளால் அவர் பல்லாண்டு வாழ்ந்து தமிழன்னைக்கு அரும் இலக்கியத் தொண்டு ஆற்றுவாராக!



தலைமுறைத் தலைமுறையாக தாய்மார்கள் நம்பிக்கையுடன் தேர்ந்தெடுப்பது...





ஜம்மியின் லிவர்க்யூர்

நம்பகமான குடும்ப நிவாரணி

ஆம், ஜம்மியின் லிவர்க்யூர் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக குடும்பத்-தலைவிகளால் போற்றி பாதுகாக்கப்படும் ஓர் நம்பகமான குடும்ப நிவாரணி. பாட்டிமார்களின் காலங்களிலிருந்து பயன்படுத்தப்பட்டு வரும் கைகண்ட மருந்து.

பரிசோதனைக்குட்பட்ட ஜம்மியின் லிவர்க்யூர்-ஈரல் குலைக்கட்டி மற்றும் பலவித காரணங்களால் ஏற்படும் ஈரல் சம்பந்தப்பட்ட எல்லாவிதமான வியாதிகளுக்கும் உடனடி நிவாரணமளிக்கும்.

தயாரிப்பாளர்கள்:

ஜம்மி பார்மஸூட்டிகல்ஸ்
சென்னை-600026.

ஜம்மியின் லிவர்க்யூர்–ஓர் ஒப்பற்ற குடும்ப நிவாரணி.



Criterion JP 3191TM

ாடிக் கற!

கருத்து:
லிதா செல்லப்பா

''பாட்டுக் கேட்கும் மாடுகள் மற்ற மாடுகளைவிட அதிகம் பால் கொடுக்கிறது. திருப்பதியில் நடந்த ஆராய்ச்சி இதனை நிரூபிக்கிறது.'' – மத்திய மாநிரி பிரும்மானந்த ரெட்டி தகவல் —

செய்தி: தினத் தந்தி 23 1-76




''மாட்டுக் கொம்பில் ஏன் டிரான்சிஸ்டரைக் கட்டி விட்டிருக்கே?''

''நியூஸ் படிச்சதிலே இருந்து என் மாடு பாட்டுக் கேட்டாத்தான் பாலே கறக்கிறது.''



பாட்டி: 'ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்கணும், பாடிக் கறக்கற மாட்டைப் பாடிக் கறக்கணும்'னு அந்தக் காலத்திலே சொல்லிட்டாங்க. அதில் என்ன ஆராய்ச்சி வேண்டிக் கிடக்கிறது?





''சீமைப் பசு வாங்கினியே, அது பாட்டு கேட்டுப் பால் கொடுக்கிறதா?''

''அது இங்கிலீஷ் பாட்டு கேட்டால்தான் பால் கறக்கிறது.''



பாகவதர் மனைவி (தோழியிடம்): முன்பு கச்சேரிகளுக்கு நிறைய தேங்காய் மூடிகள் வரும். இப்போ பால் தான் சொம்பு சொம்பா வருகிறது.

''கோனாரே! உங்க வீட்டை ங்கே மாற்றுகிறீர்கள்?''

''பாகவதர் வீட்டுக்குப் பக்த்து வீட்டுக்கு.''



''பால் தண்ணியா இருக்கே

''என்னம்மா செய்யறது? நேற்று அது சோகப் பாட்டுக்களாகவே கேட்டது. அதான்.''





கதை:
கௌசிகன்
சித்திரம்: ம.செல்வன்
அறிவின் உருவில் கோடி!
6
கழுகுக் கண்கள் தங்களைக் கவனித்துக் கொண்டிருப்பதை அறியாமலேயே மாதவனும் சாருவும் பஸ்ஸுக்காகக் காத்திருந்தனர்.
தலைத்துணியை இழுத்து மூடிக் கொள் சாரு. பஸ்ஸில் போகும் போது அதிகம் பேசாதே. இந்திய மனைவி மௌனமாக வருவதை யாரும் தவறாகக் கருதமாட்டார்கள்.
பஸ் நிரம்பி இருந்தது. ஆனாலும் கண்டக்டர் நல்லவன்.
கொஞ்சம் கொஞ்சம் நகர்ந்து இன்னும் இரண்டுபேருக்கு இடம் கொடுங்க...
அந்த நெரிசலில் எப்படியோ சமாளித்து உட்கார்ந்தார்கள்.
மூச்சு விடவே முடியாத நெருக்கடிதான். ஆனால் இந்த முரட்டுத் துணிகளுடன் மூச்சு இரைக்க மலை ஏறி நடப்பதை விட இது எவ்வளவோ தேவலாம்.
பஸ்ஸில் ஏறிவிட்டார்கள். நாம் அடுத்த நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அந்தப் பஸ்ஸைப் பின் தொடருவோம், வா.
மலைப் பாதை, வளைந்து வளைந்து சென்றது. குளிர்ந்தகாற்று. மலைகள் பின்னுக்கு ஓடுவதைப் பார்த்துப் பார்த்து மயக்கம் வரும் போலிருந்தது சாருவுக்கு. புதிய அனுபவம்.


மாதவன், எனக்குத் தலை சுற்றுகிறது. மூச்சு விடுவதே சிரமமாக இருக்கிறது. குளிர் வேறு.
பயப்படாதே சாது. இது 'காட்'ரோடு. கடல் மட்டத்துக்கு மேலே மேலே போகும் போது இப்படித் தானிருக்கும்.
கண்டக்டர் பிரயாணிகளின் அவஸ்தையைத் தன் சாதுரியமான பேச்சினால் சமாளித்தான்.
ஐயாவுக்கு இப்படி மூச்சு வாங்குதே அம்மாடி! ஓடியாடி உழைக்காத இருக்கும் போலிருக்கு.
சாது விரைவிலேயே தன்னைச் சமாளித்துக் கொண்டாள். பஸ் மலையிலிருந்து இறங்க ஆரம்பித்து விட்டது. இறக்கம் இனிமையாக இருந்தது. கணவாய்கள், திட்டுத்திட்டான விளை நிலங்கள், பசுமையான காடுகள், அழகான கிராமங்களிடையே புகுந்து புகுந்து முடிவாக மாலை மங்கும் வேளையில் ஓர் அழகான ஊருக்கு வந்து நின்றது பஸ்.
இரவிலே இங்கு ரொம்பக் குளிராக இருக்கும். வசதியான ஓர் விடுதியில் இரவைக் கழித்துவிட்டுப் பிரயாணத்தைத் தொடரலாம். நாளைப் பகலுக்கு உன் தகப்பனாரைச் சந்திக்கலாமென்று எண்ணுகிறேன்.
நாளைக்கு அப்பாவைப் பார்க்கப் போகிறேன்! ம்... இந்த நினைப்பே எவ்வளவு இன்பமாக இருக்கிறது!
எனக்குத் தெரிந்த நண்பர்கள் இருக்கிறார்கள். நாம் வசதியாக இரவைக் கழிக்க வழி செய்து தருவார்கள்.
அப்போது...
லக்ஷ்மண்....?
சின்னப் பொண்ணே! எங்களை ரொம்பவும் அலைய வைத்து விட்டாயே. இனி நாங்கள் பாடும் பாட்டுக்குத்தான் நீங்கள் ஆட்டமாட வேண்டும், தெரிந்ததா?
தொடரும்

ராமாமிர்தம் சினிமாவில் தோன்றுகிறார்...!

ஸ்ரீரங்கநாயகி

மேகக்கூட்டங்களின் 'முகாரி' ஆலாபனை மத்தியமத்திலிருந்து உச்ச ஸ்தாயியை எட்டிக் கொண்டிருந்தது கொட்டும் மழையைத் துளிக்கூடச் சட்டை செய்யாமல் ராமாமிருதத்தின் குடும்பத்தினர் சினிமாவுக்குக் கிளம்புவதில் தங்களைத் தயார் செய்துகொண்டிருந்தனர். மழை அவ்வளவு வலுவாகப் பெய்வதை அவர்கள் லட்சியம் செய்யவில்லை என்பதைவிடச் சினிமாவுக்குக் கிளம்புகிற 'ஜோரில்' வெளியே மழை எந்த அளவுக்குப் பெய்கிறது என்று அவர்கள் கவனிக்கவில்லை என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

ராமாமிருதத்தின் பார்யை கோமதியம்மாள் அந்த 'மஸ்டர்ட்' கலர் 'கிரேப் சில்கை' 'புடவை' வைத்துக் கட்டிக் கொண்டாகிவிட்டது. 'கவரிங்' செயினில் கொஞ்சம் பளபளப்புக் குறைந்து காணப்பட்டதால் குழம்புச் சாம்பலைக் கொஞ்சம் எடுத்து அழுத்தமாகத் தேய்த்தால் பார்ப்பதற்குப் 'பளிச்' சென்று ஆகிவிடும் என்று கோமதியம்மாள் தன்னுள் முடிவெடுத்துவிட்டு, 'சம்பா! ஏய் சம்பா!' என்று தனது சீமந்த புத்திரி 'சம்பா' எனும் செண்பகவல்லியிடம் அந்த வேலையை ஒப்படைக்க அவளைக் கூப்பிட்டாள்.

ஆனால், சம்பா அதைவிட முக்கியமான ஒரு வேலையில் இருந்தாள். அதுவரை ஒரு 'பின்' போட்டுச் சரிக்கட்டி உபயோகித்து வந்த அவளுடைய 'புரோக்கன் டவுன்' செருப்பு அன்று காலை தன்னுடைய இயலாமையை முழுமையாகக் காட்டிவிட்டபடியால், பழைய தகர டப்பியைத் தேடி அதிலிருந்து துருப் பிடித்த நாலு பொடி ஆணிகளை எடுத்துச் செருப்பை ரிப்பேர் செய்ய ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தாள் சம்பா. ஆணி அடிப்பதற்குச் சுத்தியல் கிடைக்காத காரணத்தால் அரிவாள் மணையின் பின் பக்கத்தால் ஆணியை நாலு தட்டுத் தட்டுவதுடன், அரிவாள் மணையின் 'வாள்' கட்டையிலிருந்து சுதந்திரம் பெற்றுத் தனியாக விழுந்துவிட்டது.

''மூதேவி! மூதேவி! ஆத்துலே உருப்படியா இருக்கறது அரிவாள் மணை ஒண்ணுதான். அதையும் உடைச்சுட்டியே!'' என்று கோமதியம்மாள் சம்பாவை அர்ச்சனை பண்ண ஆரம்பித்தாள். ஆனால் சம்பா தன் தாயாரின் திட்டல்களைத் துளிக்கூடச் சட்டை செய்யாமல் தனது வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தாள்.

இதற்குள் ராமாமிருதத்தின் நான்காவது பெண் பத்மாவும் கடைக்குட்டி விஜயாவும் (தற்போதைக்குக் கடைக்குட்டி, எதிர்காலத்தைப் பற்றி ஒன்றும் காரண்டியாகச் சொல்ல முடியாது!) தங்கள் தலையைப் பின்னிவிடும்படி தாயிடம் வந்தனர். பத்மாவுக்கு வருகிற தை மாதத்துடன் ஐந்து வயது பூர்த்தியாகிறது. அவளுக்கு அடுத்ததான விஜயாவுக்குச் சென்ற ஐப்பசியில் மூன்று வயது பூர்த்தியாகி விட்டது.

''இந்தக் கமலாவையும் காயத்ரியையும் அரை நாள் லீவு போட்டுடுக்கச் சொன்னால் கேட்டால் தானே! எங்கே லீவு போட்டு வீட்டில் இருந்தால் கூடமாட வேலை செய்யும்படி இருக்குமோ, என்று ஸ்கூலுக்குப் போயிட்டதுகள். மணி நாலு ஆகப் போகிறது. இன்னும் வரக் காணோம். நாம சினிமாவுக்குப் போகிறதுக்குள்ளே பாதி ஓடிடப்போகிறது! எதைப் பார்க்கிறதுக்காகச் சினிமாவுக்குப் போகிறோமோ அதைப் பார்க்க முடியப் போறதில்லே!'' என்றாள் கோமதி அம்மாள்.

''அம்மா! அப்பா வர 'சின்' கரெக்டா 6–42க்கு வரதாம். என் ப்ரெண்டு ஜயந்தி நேத்திக்குப் படம் பார்த்துட்டு வந்து சொன்னா!'' என்றாள் சம்பா.

''ஆமாம், இதையெல்லாம் மாத்திரம் வக்கணையா சொல்லிடு. வேலை செய்யறதுக்கு மட்டும் ஆயிரத்தெட்டுப் பிலக்கணைபடி!'' என்றாள் கோமதி அம்மாள்.

''மழை எக்கச் சக்கமா பெய்யறது. அப்பாவை வேறே இன்னும் ஆபீஸிலேயிருந்து காணோம். இன்னிக்கு சினிமா போகறது தண்டம்தான்!'' இது சம்பாவின் ஆதங்கம் நிறைந்த குரல்.

இத்தனை சம்பாஷணைகளுக்கும் காரண கர்த்தாவான நமது கதாநாயகன் ராமாமிர்தத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டியது இந்தக் கட்டத்தில் மிகவும் அவசியமாகிறது. ராமாமிர்தம் மிகவும் அடக்கமான மனிதர்தான். இருந்தாலும் ஜனத் தொகையை அதிகரிப்பதில் மட்டும் அவருக்கு அடக்க மனப்பான்மை கிடையாது. கோமதி அம்மாளும் சாமான்ய மனுஷியல்ல.

ராமாமிர்தத்தின் குடும்பம் அன்றைக்குப் போவது அப்படி ஒன்றும் பிரமாதமான படத்துக்கு அல்ல. அவர்களும் படத்தைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படவில்லை. படம் ஆரம்பிப்பதற்குமுன் காட்டப்படும் 'நியூஸ் ரீலில்' ராமாமிர்தம் கொஞ்ச நேரம் தோன்றுகிறார். அதைப் பார்ப்பதற்காகவே அவர்கள் இருபது ரூபாய்க்கு மேல் செலவழித்துக் கொண்டு சினிமாவுக்குப் போகிறார்கள்.

நியூஸ் ரீலில் ராமாமிர்தம் தோன்றியது ஒரு சுவையான கதையாகும். பத்து நாட்களுக்குமுன் நடந்த ஒரு முக்கிய கோப்பைக்கான குதிரைப் பந்தயத்துக்கு ராமாமிர்தம் போயிருந்த போது (வேடிக்கை பார்ப்பதற்காக அல்ல) ரேஸில் பணம் கட்டியவர்களின் ஒரு பகுதியை அரசாங்க நியூஸ் ரீல் எடுக்க வந்தவர்கள் 'க்ளோஸப் ஷாட்'டில் படம் பிடிக்கவும் முன்னணியில் நின்று கொண்டு ''கம் ஆன்! கமான்!'' என்று உணர்ச்சி பொங்க ராமாமிர்தம் தொண்டைத் தண்ணீர் வறளக் கத்தியது காமிராவில் பிடிபட்டு, அந்த வாரம் வெளியான நியூஸ் ரீலில் பல தியேட்டர்களில் திரையிடப்பட்டுப் பலரது

கண்களுக்கு விருந்தாக (?) ஓடிக் கொண்டிருக்கிறது.

ஆமாம்! இவ்வளவு கஷ்ட ஜீவனத்தில் இருக்கும் ராமாமிர்தம் எப்படி ரேஸுக்குப் போக முடிகிறது? அதை அவரது மனைவி கோமதி அம்மாள் எப்படி அனுமதிக்கிறாள்? அவருடன் சண்டை போடுவதில்லையா? போன்ற கேள்விகள் எல்லாம் பிறக்கலாம். அவையெல்லாம் நியாயமானவையே! இதில் வேடிக்கை என்னவென்றால் ராமாமிர்தம் ரேஸுக்குப் போக ஆரம்பித்ததற்குக் காரணமே கோமதி அம்மாள்தான்! பக்கத்து வீட்டுப் பாகீரதியின் கணவனுக்கு ரேஸில் பத்தாயிரம் ரூபாய் 'ஜாக்பாட்'டில் விழவும் கோமதியின் மனம் ராமாமிர்தத்தையும் ரேஸுக்குப் போகச் சொன்னால் என்ன என்று யதார்த்த ரீதியாகக் கணக்குப் போட்டு 'அதில் ஒன்றும் தப்பில்லை' என்று முடிவு செய்தது. முதலில் ராமாமிர்தம் மறுத்தார். ஆனாலும் அவருக்கும் உள்ளூற சபலம். 'வரிசையாக ஐந்து பெண்களைப் பெற்றாகி விட்டது. வேறு விதத்தில் சம்பாதிக்கவும் உங்களுக்கு வக்கில்லை. ரேஸுக்குப் போய் அதிர்ஷ்டம் அடித்தால் நம்ப குடும்ப தரித்திரம் விடிந்துவிடும்' என்று கோமதி அம்மாள் அவருடைய 'வீக் பாயின்'டைத் தாக்கவும் அவர் ஒப்புக் கொண்டுவிட்டார். மாத சம்பளத்தில் ஒரு பகுதி ரேஸுக்காகச் செலவழிக்கப்பட்டது. நடுவில் எப்போதாவது ஐம்பது நூறு என்று வந்தால், ரேஸில் ஜெயித்து வந்ததுதானே என்கிற குஷியில் அந்தப் பணத்தைக் கண்டபடி கோமதி அம்மாள் செலவழித்துவிடுவாள்.

ஆபீஸிலிருந்து நனைந்து கொண்டு வந்த ராமாமிர்தம் நனைந்த வேட்டி சட்டையை அவிழ்த்துவிட்டு வேறு உடுப்புக்கள் போட்டுக் கொண்டு டவலால் தலையைத் துவட்டிய பிறகு 'சாம்பிராணி' என்ற பெயரில் வீட்டில் இருந்த ஒரு கட்டியைத் தூளாக்கிப் புகை பிடித்துவிட்டுத் தலையை வாரி பவுடர் பூசிக் கொண்டு, நெற்றியில் பட்டையாக விபூதியையும் பூசிக் கொண்டு தயாராகிவிட்டார். வீட்டில் மற்ற எல்லோருமே எப்போதோ ரெடியாகி விட்டார்கள். விஜயாவும் பத்மாவும் வாசலில் நின்று கொண்டு மழை சற்றுக் குறையாதா என்று வானிலை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தனர்.

மணி சரியாக ஐந்து அடிக்கும் சமயம். மழை நிற்கும் அளவுக்கு வந்துவிட்டது. ராமாமிர்தமும் அவர் குடும்பமும் ஒரு வழியாகச் சினிமாவுக்குக் கிளம்பினர். முட்டி வரை முட்டும் தண்ணீர் தேங்கலில் தங்கள் தங்கள் துணிகளை வழித்துக் கொண்டு அரை நீச்சல் அடித்தபடி அவர்கள் தார் ரோட்டை அடையும்போது மணி ஐந்து பத்து. இனி பஸ்ஸுக்கு நின்று கொண்டிருந்தால் 'லேட்' ஆகிவிடும் என்று இரண்டு டாக்ஸிகளைப் பிடித்துக் கொண்டனர். மாதத்தின் முதல் வாரம். கையில் பணம் நடமாடுகிறது என்கிற தெம்பு. பதினைந்தாம் தேதி வரும் பற்றுக்குறை பன்னிரண்டாம் தேதியே வந்துவிடுமே என்கிற கவலை அவர்களுக்கு அப்போது இல்லை. அவர்களிடம் அப்போது குடியிருந்த ஒரே வேகம் சரியான சமயத்துக்குச் சினிமாவுக்குச் சென்று ராமாமிர்தத்தின் முகார விந்தத்தைக் கண்டு களிக்க வேண்டும் என்பதே.

அவர்களுடைய அதிர்ஷ்டம் யாரோ ஒரு தலைவரின் சிலையை அன்று திறந்து வைக்கப் போவதால் எல்லா வண்டிகளையும் திசை மாறிச் செல்லும்படி போக்குவரத்து அதிகாரிகள் திருப்பவும் டாக்ஸி சினிமா தியேட்டர் வாசல் வரை செல்லாது என்று ராமாமிர்







கொசுப் பெருமை!

உலகிலேயே இந்தியக் கொசுக்கள்தான் மிக வேகமாகப் பறக்கக் கூடியவை!

உலக சுகாதார நிறுவனம் சமீபத்தில் செய்த ஆராய்ச்சியில் இந்தயக் கொசுக்கள் 500 மைல் தொடர்ச்சியாகப் பறக்க முடியு மாம்! அதே சமயம் மற்ற நாட்டு கொசுக்கள் 500 கெஜம் கூட தொடர்ந்து பறக்க முடியா தாம்! ஆதாரம்: "நேரவான்" — சம்பத்குமாரி

தத்துக்குப் புரிந்துவிட்டது. நடந்து சென்றால் நிச்சயம் சரியான நேரத்துக்குள் செல்ல முடியாது என்று எல்லோருக்கும் தோன்றியது. இந்தச் சமயத்தில் கோமதி அம்மாளின் உள்ளத்தில் 'அபூர்வமான' ஒரு யோசனை தோன்றியது. அவர்கள் முக்கியமாகப் பார்க்க வேண்டியது 'நியூஸ் ரீல்' மட்டும்தான். 'மெயின்' படம் அவர்களுக்கு இரண்டாம் பட்சமானது. அதனால் பழைய படம் ஒன்று ஓடிக் கொண்டிருக்கும் அருகில் உள்ள தியேட்டருக்குப் போனால் 'நியூஸ் ரீலை' 'மிஸ்' பண்ணாமல் பார்த்துவிடலாம். அத்துடன் பழைய படமாக இருந்தாலும் அது ஒரு நல்ல படமாகும் என்பதே அந்த அபூர்வ யோசனை.

அந்த யோசனை எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டவுடனே டாக்ஸிகள் அருகிலிருந்த அந்தத் தியேட்டரில் நுழைந்தன. படம் ஆரம்பிக்கப் போகிறது என்று கவுண்டரில் கூறவும் அவசர அவசரமாக ரூ. 2-90 டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டு உள்ளே நுழைந்தனர். பற்பசை விளம்பரத்துக்காக ஒரு ஜோடி அர்த்தமின்றிச் சிரித்துக் கொண்டே இருந்தது. தொண்டைக் கரகரப்பை'ச் சரி செய்து கொள்ள ஓர் இருமல் மாத்திரையை முழுங்குவதற்காக ஒரு ஜோடி விமானத்தில் பறந்தது... இதோ விளம்பர சினிமாக்கள் முடிந்துவிட்டன. நமது கதா நாயகன் ராமாமிர்தம் நடித்த நியூஸ் ரீல் வரப் போகிறது. எல்லோரும் ஆவலுடன் காத்திருந்தனர்.

நியூஸ் ரீல் ஆரம்பமாகியது. ராமாமிர்தத்தின் உள்ளம் பகீரென்றது. அவர் வந்துள்ள நியூஸ் ரீலின் எண் 1008. ஆனால் அங்கு காட்டப்பட்ட நியூஸ் ரீல் எண் 1005. நிமிடத்துக்குள் எல்லோருக்கும் தாங்கள் செலவழித்தது வீண் என்று புரிந்துவிட்டது. இது மாதிரி ஆவதுக்கு நீதான் காரணம், நான்தான் காரணம் என்று ஒருவரை ஒருவர் அடிக்காத குறையாகத் திட்டிக் கொண்டனர்.

பின்னால் உட்கார்ந்து இந்த 'பாரதப் போரை'ச் சகித்துக் கொண்டிருந்தவர்களின் 'த்சொ... த்சொ'வும், 'சுத்த கண்ட்ரீஸா இருக்கே' என்ற புகழ் மாலைகளும் அவர்களை ஒயச் செய்தன. வேண்டா வெறுப்புடன் படத்தைப் பார்த்தனர்.

ஒரு வழியாகப் படம் முடிந்தது. திரும்பும் போது அந்தக் குடும்பத்தினரிடையே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி அரை நாள் லீவு போட்டுவிட்டு மத்தியானம் இரண்டு மணிக்கே மறு நாள் ராமாமிர்தம் வீடு திரும்பிவிட வேண்டியது. கலாவும் காயத்ரியும் மறு நாள் காலை பள்ளி செல்வதோடு சரி. பிற்பகல் வகுப்புக்களுக்கு மட்டம். ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து மாலை நாலு மணிக்கே வீட்டை விட்டுக் கிளம்பிவிடுவது. எந்தத் தியேட்டரில் ராமாமிர்தம் வரும் நியூஸ் ரீல் வருகிறதோ அங்கு சென்று படம் பார்த்துவிடுவது. இதனால் இன்னொரு இருபது முப்பது ரூபாய் செலவானாலும் சரி. எப்படியாவது அந்தப் பணத்தை மாதக் கடைசியில் கடன் வாங்கிச் சரிக் கட்டி விடலாம் என்பதே அந்தத் தீர்மானத்தின் அம்சங்கள்.

மறு நாள் விடிந்தது.

"என்னா! நான் சொன்னபடி அரை நாள் லீவு போட்டுவிட்டு மத்தியானம் இரண்டு மணிக்கே வந்துடுங்கோ!" என்று திரும்பத் திரும்ப ராமாமிர்தத்திடம் நினைவூட்டி அவரை ஆபீசுக்கு அனுப்பினாள் கோமதி அம்மாள். அவர் மத்தியானம் வந்துவிட வேண்டும் என்கிற காரணத்தால் தயிர் சாதம் என்கிற பெயரில் டிபன் பாக்ஸில் கலந்து கொடுக்கும் 'மோர் சாதத்தை'யும் அவள் கொடுத்தனுப்பவில்லை. ராமாமிர்தம் ஆபீசுக்குக் கிளம்பிவிட்டார்.

வாசல் கதவைத் தாளிட்டுவிட்டுச் சினிமாவுக்குக் கிளம்புவதற்கான ஆயத்தங்களை அப்போதே ஆரம்பித்தனர். மணி பதினொன்று இருக்கும். வாசல் கதவு தட்டும் ஓசை கேட்கவும் கோமதி அம்மாள் விரைந்து சென்று கதவைத் திறந்தாள். வாசலில் ராமாமிர்தம் நின்று கொண்டிருந்தார்.

"என்னா, அரை நாள் லீவு போடப் போகிறேன் என்று சொன்னேன். முழு நாளும் லீவு போட்டுட்டு வந்துட்டேளா? நல்ல காரியம் செய்தேள்!" என்று கேட்டபடி அவருடைய முகத்தைப் பார்த்தவள் திடுக்கிட்டாள்.

பேயறைந்தாற் போன்ற முகத்துடன் ஒன்றும் பேசாமல் ராமாமிர்தம் தம் ஜேபியிலிருந்து 'டைப்' செய்யப்பட்டிருந்த ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார்.

அலுவலக வேலை நாளில் அலுவலகத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டுப் பிற்பகல் இரண்டு மணிக்கு மேல் மேலதிகாரிகளின் அனுமதியைப் பெறாமல் வெளியே சென்று மாலை வரை திரும்பாததாகவும், மாலை மூன்று மணிக்கு நடந்த குதிரைப் பந்தயத்தில் ராமாமிர்தம் காணப்பட்டதற்குத் தகுந்த சாட்சியங்கள் இருப்பதாகவும், இக்காரணங்களுக்காக அவர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் விசாரணை முடியும் வரையில் அவரை 'சஸ்பெண்ட்' செய்திருப்பதாகவும் ராமாமிர்தத்தின் ஆபீஸ் அறிக்கை கூறியது.

இதைப் படித்ததும் மயங்கி விழப்போன கோமதி அம்மாளைக் கீழே விழாமல் பிடித்துக் கொண்டார் ராமாமிர்தம். கடிதத்தில் உள்ள விஷயம் பற்றித் தெரியாமல் 'மசக்கை' வந்து அம்மா மயங்கி விழுகிறாளோ என்கிற சந்தேகத்துடன் விரைந்து வந்தாள் சம்பா என்கிற செண்பகவல்லி.

ஒரு நாள்....



நான் சற்றுச் சாவதானமாகத்தான் படுக்கையிலிருந்து எழுந்திருக்கிறேன். காலை மணி ஆறரையை எட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு விஷயம்! நான் நேற்றுப் படுத்து இன்று விழிக்கவில்லை. இன்று படுத்து இன்றே விழிப்பவன். நான் படுக்கப் போகும் போது அதிகாலை ஒன்றரையோ இரண்டோ ஆகிவிடுகிறது. இது அநேகமாக நித்திய நியதியாகவும் போய்விட்டது. அதுவரையில் ஏதாவது படித்துக் கொண்டிருப்பேன். எப்பேமது தூங்கி எப்போது எழுந்திருக்க வேண்டுமோ, அதையும் ஒரு சாதகமாக ஆக்கிக் கொண்டிருக்கிறேன்.

எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஒரு கப் காப்பிக்காகத் தயாராகிறேன். சர்க்கரை போடாத காப்பி. உடல் உபாதையைத் தவிர்க்கத்தான். உடனடியாக நாளிதழைக் கையில் எடுத்துக் கொள்கிறேன்.

ஸ்நான அறைக்குப் போகும்போது கடிகாரம் நிச்சயம் எட்டு மணியைக் காண்பிக்கும். இப்போதெல்லாம் அவசரப்படுவதில்லை; அவசரப்பட முடியவுமில்லை.

ஸ்நானத்தை முடித்துக் கொண்டு அரைமணி நேரம் பூஜை செய்கிறேன். இந்தப் பூஜையில் ஓரளவு வேத பாராயணமும் உண்டு. இது தந்தை வழிச் சொத்து. என் தந்தையார் காலஞ்சென்ற திருவிடைமருதூர் சாம்பமூர்த்தி கனபாடிகள் வேத விற்பன்னர். எனக்கும் சிறு வயதில் முறைப்படி வேதம் சொல்லிக் கொடுத்தார். அவர் ஒரு சமரசவாதி, அந்தக் காலத்திலேயே! அவருக்கு முஸ்லிம் சமூகத்தில் நண்பர்கள் அதிகம். அவர்களில் சில அறிவிற் சிறந்த முதியோர்களை அணுகி, திருக்குர்ரானை ஓதச் செய்யக் கேட்டு, அதன் பொருளையும் தெரிந்து கொண்டவர்.

அதேபோல, நான் புரசைவாக்கத்திலுள்ள ஃபேப்ரிஷியஸ் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தபோது, நான் பைபிளில் அதிக கவனம் செலுத்திப் படிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். நானும் அவர் ஆக்ஞையை அப்படியே நிறைவேற்றினேன். கிறிஸ்துவக் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்தபோது பைபிள் அறிவுக்காகப் பேராசிரியர்களிடம் பாராட்டுப் பெற்றேன். இந்த அறிவெல்லாம் பிற்காலத்தில் காவிய காப்பியங்களைப் பற்றி உபன்யாசங்கள் நிகழ்த்தும் போது மிகவும் உதவியாக இருக்கும் என்று அப்போது நான் நினைத்துப் பார்க்கவில்லை. இந்த உபன்யாசக் கலைக்குக்கூட எனக்கு என் தந்தைதான் குரு.

சமீபத்தில்தான் நான் ஸ்டேட் பாங்கி அதிகாரி பதவியிலிருந்து ஓய்வு பெற்றேன். அப்போதெல்லாம் காலை எட்டே முக்கால் மணிக்கே சாப்பிட உட்கார்ந்து விடுவேன். இப்போது அந்த அவசரம் தேவையில்லை. ஒன்பதரை மணிக்குச் சாப்பிடுகிறேன்.

பத்து அல்லது பத்தேகால் மணிக்கு எனக்கு வந்திருக்கும் கடிதங்களைப் பார்க்க ஆரம்பிக்கிறேன். பல நண்பர்களும் அன்பர்களும் கடிதங்கள் எழுதுகிறார்கள். அழைப்புக்கள் வருகின்றன. அவைகளைப் படித்து விட்டு உடனடியாகப் பதில்கள் எழுதுகிறேன்.

ஒரு சமயம் யு. எஸ். ஏ. — அதுதான் அமெரிக்காவிலிருந்து சில நண்பர்கள், என் வருகையை அங்கே விரும்பி, நான் சம்மதித்தால் அதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்வதாய் எழுதியிருந்தார்கள். இதைப் பற்றி அடுத்த தடவை ஜகத்குரு காஞ்சி ஆச்சார்யாளைத் தரிசனம் செய்ய வாய்ப்புக் கிட்டியபோது பிரஸ்தாபித்தேன். ஆச்சார்யாள், ''நீ, நம்ப பாரத தேசத்திலே கிராமங்களிலே கதை சொல்லியிருக்கிறாயோ?'' என்று கேட்டார். அவ்வளவுதான்! அதற்கு மேல் பேசவில்லை.

நான் ஆசாரியாளின் ஆக்ஞையைப் புரிந்து கொண்டேன். அமெரிக்கப் பிரயாண நினைவை அகற்றினேன். இடையே இரண்டு ஆண்டுகாலம் கோயமுத்தூரில் பாங்கி அதிகாரியாகப் பணியாற்றியபோது முடிந்தவரை அக்கம்பக்கத்துக் கிராமங்களுக்கெல்லாம் போய், அந்தப் பிரதேச மக்களுக்குப் புரியும் விதத்தில் பல நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு ராமாயணத்தையும் மகா பாரதத்தையும் விளக்கினேன்.

சமீபத்தில் ஓய்வு பெற்றபிறகு கூட மோகனூர்க் கிராமத்துக்குப் போயிருந்தேன். அங்கு ஒரு பிரவசனம். நூறுபேரே கூடியிருந்தாலும், வெகு அமைதியாகவும் பொறுமையாகவும் நள்ளிரவுவரையில் கதையைக் கேட்டார்கள். ஆத்ம திருப்தி.

டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள்



அட்டைப்பட விளக்கம்:

விசிறி நடனம்

வட கொரியாவில் நிலவும் கம்யூனிஸ ஆட்சிக்கும் தென் கொரியாவில் அமைந்த ஜனநாயக ஆட்சிக்கும் இடையே நேரடி மோதல் இல்லை என்றாலும் ஜனநாயக ஆட்சியைக் கவிழ்த்துவிட கம்யூனிஸ்டுகள் சதா தருணம் பார்த்தபடியேதான் இருக்கிறார்கள்.

பூமிக்கடியில் மாபெரும் சுரங்கங்கள் அமைத்து அவற்றின் மூலம் தென் கொரியாவுக்கு ராணுவத் தளவாடங்களையும் துருப்புக்களையும் ரகசியமாக ஏராளமாய் அனுப்பித் திடீர்த் தாக்குதல் நடத்த கம்யூனிஸ்டுகள் செய்த சதி சில மாதங்களுக்கு முன் அம்பலமாயிற்று.

இப்படியொரு நெருக்கடியான நிலையில் எப்போதும் வாழ்ந்து வரும் மக்கள் கவலைகளை மறக்கக் கலைகளைத்தானே நாட முடியும்? விசிறி நடனம் என்பது ஜப்பான், சீனா, கொரியா நாடுகளில் பிரசித்தி பெற்ற ஒன்று.

கொரிய விசிறி நடனத்தை மேலட்டையில் வண்ணப் படமாக வழங்குகிறவர்:

திலீப் பானர்ஜி

கடிதங்களுக்குப் பதில் எழுதி முடித்த பிறகு, நான் எழுத ஆரம்பித்திருக்கும் புத்தகத்துக்கான பகுதிகளை, மனத்தில் ஓரளவு கோவைப்படுத்திக் கொண்டு எழுத ஆரம்பிக்கிறேன். அதில்லாவிட்டால் என்னுடைய கதா காலட்சேபத்துக்குத் தேவையான சில பாடல்களைப் புனைய முயற்சி செய்கிறேன். அனேகமாக, நான் என் சொந்த சாகித்தியங்களையே நிறையக் கையாளுகிறேன். கதாபாத்திரங்களின் உணர்ச்சிகளை என் நோக்கில் சித்திரிக்கச் சொந்த சாகித்தியங்கள் உதவுகின்றன. நான் இசையுடன் நின்றுவிட்டேன். என் பிள்ளை மௌளி நாடகமே எழுதுகிறான்; நடிக்கிறான்.

இன்றுகூட மௌளியின் நாடகம் நடக்கவிருக்கிறது. என்னைப் பார்க்க அழைத்திருக்கிறான். இன்று போக முடியாது. எனக்கு ஒரு நிகழ்ச்சி இருக்கிறது.

கடிகாரத்தில் மணி ஒன்று. உடம்புக்குச் சற்று ஓய்வு தேவைப்படுகிறது. அரை மணி நேரம் சாய்கிறேன்.

இரண்டு மணி சுமாருக்கு மீண்டும் தயாராகிறேன். சங்கீதம், சாஸ்திரம், சிற்பக் கலை முதலியவற்றை நான் முறைப்படி படித்திருக்கிறேன். அவைகளைப் பற்றி மேலும் மேலும் ஞானத்தை வேண்டிவரும் அன்பர்கள் சிலருக்குப் பாடம் சொல்லித் தருகிறேன். அவர்கள் வராவிட்டால், நானே அது சம்பந்தமான புத்தகங்களில் லயிக்கிறேன்.

மாலைப் பொழுது நெருங்குகிறது. இலேசான சிற்றுண்டியையும் காப்பியையும் என் மனைவி என் முன் கொண்டு வந்து வைக்கிறாள். ஆகார விஷயங்களில் நான் கண்டிப்பையே கையாளுகிறேன். தேகப்பயிற்சிகளில் எனக்கு நம்பிக்கை யில்லை. எப்போதாவது அவகாசம் கிடைத்தால் கொஞ்ச தூரம் நடந்துவிட்டு வருவேன். சில சமயங்களில் அந்த அவகாசத்திலும் புதுப் புதுப் புத்தகங்களைப் படித்தால் என்ன என்று தோன்றும். பொழுது போக்கு என்பதை விடத் தொழிலாகவே பாரத கலாசாரம் பற்றிய பல்வேறு புத்தகங்களைப் படிக்கிறேன்.

இன்று ஒரு கதா காலட்சேப நிகழ்ச்சி இருக்கிறது. மகாபாரதத்தில் ஒரு பகுதி. நான் மகாபாரதத்தை அதிகமாக உபன்யாசிக்கிறேன். அது ஒரு சமுத்திரம் மாதிரி. வற்றாத நீரூற்று. சொல்லச் சொல்லத் திகட்டாது. ராமாயணத்தையும், குறிப்பாகத் தியாகராஜ ராமாயணத்தையும் கூட நிறையச் சொல்கிறேன்.

சில காலத்துக்கு முன் சரஸ்வதி ஸ்டோர்ஸ் நிறுவனம், நான் சொல்லும் பாரதத்தில் ஒரு பகுதியாகிய கீதோபதேசத்தை இசைத் தட்டாகப் பதிவு செய்ய விரும்பினார்கள்.

ஒரு தடவை நேரத்தை ஒத்திகை பார்த்துக்கொண்டு தொடர்ந்து பதிவு செய்தார்கள். முதல் பதிவே சரியாக அமைந்துவிட்டது என்று தெரிவித்தும் விட்டார்கள். இதுவும் அந்தப் பார்த்தசாரதிப் பெருமானின் கருணை தான்!

கதாகாலட்சேப நிகழ்ச்சி முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போது மணி பத்தாகிவிடுகிறது. இரவு ஆகாரம் எனக்குச் சில பழங்களும் காய்ச்சிய மோரும்தான். அதை முடித்துக்கொண்டு என் அறைக்குப் போகிறேன். இப்போதும் எனக்குத் துணைவன் புத்தகங்கள் தான். இரவு பன்னிரண்டு மணி வரை படிக்கிறேன்.

பிறகு வீணையைக் கையில் எடுத்துக்கொள்கிறேன். ஒரு மணி நேரம் அதில் அப்பியாசம் செய்கிறேன். இது சமீப காலப் பழக்கம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நாள் கனவோ, நினைவோ எனக்கே புரியவில்லை. ராகவேந்திர சுவாமிகள் என் முன் தோன்றி ஒரு வீணையை என் கையில் கொடுத்து 'இதை அப்பியாசம் செய்' என்று சொன்னது போல ஒரு காட்சி.

மறு நாளே என் பேத்தி வைத்திருந்த வீணையை எடுத்து மீட்ட ஆரம்பித்தேன். அப்போதுதான் முதல் தடவையாக வீணையைத் தொட்டேன். அன்றிலிருந்து வீணையையும் அப்பியசிக்கிறேன். அதற்கு எனக்குக் கிடைக்கும் நேரம் நள்ளிரவுதான்.

வீணையை ஜாக்கிரதையாக எடுத்து வைத்துவிட்டுக் கடிகாரத்தைப் பார்க்கிறேன். மணி ஒன்றைத் தாண்டியிருக்கிறது. அமைதியான இரவு. இன்னும் கொஞ்சம் படிக்கலாம் போல் தோன்றுகிறது. சிற்ப சாஸ்திரம் சம்பந்தமான புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொள்கிறேன்.

சற்றுத் தூங்கலாம் என்று நினைக்கும்போது மணி ஒன்றே முக்கால். புத்தகத்தை மூடி வைத்துவிட்டுப் படுக்கையில் படுக்கிறேன். இப்போது தூக்கம் வருவது போன்ற உணர்ச்சி.

கேட்டு எழுதியவர்: **கோமதிஸ்வாமிநாதன்**


ஆழ்ந்து குணமாக்கும்
அமிர்தாஞ்சன் டெர்மல்
ஆயின்ட்மென்ட், படை, சொரி,
நமைச்சல் போன்ற பல
சாதாரண சருமத்தொல்லை
களைத் தீர்க்கும் சக்தி மிக்க
நிவாரணி. இன்றே
ஒன்று வாங்குங்கள்!
Amrutanjan Ltd
dermal Ointment
for
RINGWORM • ECZEMA ETC
அமிர்தாஞ்சன்
டெர்மல் ஆயின்ட்மென்ட்
அமிர்தாஞ்சன் லிமிடெட்
14/15 லஸ் சர்ச் ரோடு
சென்னை 600 004
உங்கள்
சருமத்தை
பாதுகாத்துக்
கொள்ளுங்கள்
SAA AM 1905

அநூப் மேலும் ஏதாவது கேள்வி கேட்டுத் தர்மசங்கடத்தில் சிக்கவைத்து விட்டால் என்ன செய்வது என்று எண்ணிய ரூபா அங்கிருந்தே நழுவ முற்பட்டாள். அதைக் கண்ட அநூப் சட்டென்று தாவி அவளுடைய கையைப் பற்றிக் கொண்டான். குரலில் கம்பீரத்தை ஏற்றிக் கொண்டு, ''நானே உன்னை எதிர் பார்ப்பேன். ஊரோர்க்ஸ் ஹோட்டலுக்கு வெளியே, மால் ரோட்டில்! வருவாய் அல்லவா?'' என்று கேட்டான்.

அதற்கும் அவள் பேசாமல் இருந்தாள். பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். அநூப் சட்டென்று அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்பித் தான் இருக்கும் சூழ்லையும் மறந்து, ''ரூபா!'' என்று கத்தி விட்டான்.

ரூபா மின்னல் கீற்றெனத் துள்ளித் தாயாரின் அறைக்குள் அடைக்கலம் புகுந்தாள். ஆயினும் அவனது கூப்பாடு அவள் காதுகளில் சுழன்று சுழன்று ஒலித்துக் கொண்டிருந்தது.

ரோஸி அப்பொழுதும் தூங்கிக் கொண்டிருந்தாள். டியூட்டியில் இருந்த நர்ஸ் ரூபாவின் பதற்றத்தைக் கண்டு ''என்ன ஆயிற்று?'' என்று கேட்டாள்.

''ஒன்றும் இல்லை!'' என்று முகத்தில் அடித்தாற் போலக் கூறி ரூபா அவளைக் கத்திரித்துக் கொண்டு அறையின் ஒரு மூலைக்குச் சென்று பயப் பிராந்தியுடன் அமர்ந்தாள். சிறிது நேரம் கழித்து மெதுவாக எழுந்து ஜன்னல் திரையை நீக்கி வெளியே பார்த்தாள். அப்பொழுதும் அநூப் அங்கேயே அசையாமல் நின்று கொண்டிருந்தான். ஒரு வேளை அவள் தன்னைப் பார்க்கத் திரும்பி வருவாள் என்று எதிர்பார்த்தானோ, என்னவோ?

ரூபாவின் இதயத் துடிப்பு கட்டுக்கு அடங்காமல் போயிற்று. அவள் உடல் பதற்ற மிகுதியில் வியர்த்து விறுவிறுத்துத் தெப்பமாகி யிருந்தது. அநூப்பினிடம் என்ன சொல்லி, எப்படி அனுப்பி வைப்பது என்று அவளுக்குப் புரியவில்லை. சாரதாதேவிக்குக் கொடுத்த வாக்குறுதியையும் அவளால் மீற முடியாது. அதே நேரத்தில் அநூப்பினிடம் உண்மை நிலையை விண்டுரைக்கவும் முடியாது. என்ன தர்மசங்கடமான நிலை! தன்னைத்தானே புடம் போட்டுக் கொள்ளும் முயற்சியில் அவள் அந்த அறையிலேயே பேசாமல் உட்கார்ந்து விட்டாள்.

அரை மணி நேரம் இப்படியே ஓடியிருக்கும். அவள் மீண்டும் ஓசைப்படாமல் எழுந்து, வெளியே பார்த்தாள். அநூப் அங்கிருந்து போய்விட்டிருந்தான். அவன் போய்விட்டாலும் அவன் குரல் மட்டும் இடையிடையே ஒலித்துக் கொண்டிருந்தது. அநூப் கட்டாயம் மால் ரோட்டில் தன்னை





இன்பத் தென்றல்

குல்ஷன் நந்தா

எதிர்பார்த்து நிற்பான். தான் அங்கு போகவில்லையானால் தன்னைத் தேடிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்துவிடுவான் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். அவள் அந்தப் பிரச்னையைத் தீர்க்க முயல முயல அது சிக்கெடுக்க முடியாத சிடுக்காக வளர்ந்தது.

அந்த நேரம் பார்த்து, நல்ல வேளையாக ரோஸி கண் விழித்துக் கொண்டாள். நினைவு வந்ததும் முதல் காரியமாகத் தன் மகளைத்தான் கூப்பிட்டாள். ரூபா அவள் அருகில் சென்று குனிந்து, அவள் நெற்றியை முத்தமிட்டாள். பிறகு அவள் கைகளைத் தன் கைகளில் ஏந்தித் தடவிக் கொடுக்கலானாள். தாயார் அன்பு தவழும் பார்வையோடு பெண்ணைப் பார்த்து, ''இன்று நீ வேலைக்குப் போயிருந்தாயா, மகளே!'' என்று மெலிந்த குரலில் கேட்டாள்.

''ஊம்!''

அதைக் கேட்டதும் அவளது தாயாரின் முகம் எப்படிக் களையிழந்து விட்டது? தாயாரின் அந்த மனநிலையைக் காண ரூபாவுக்குப் பொறுக்கவில்லை. ''ஆனால் அம்மா, நாளை முதல் நான் அந்த வேலைக்குப் போகப் போவதில்லை!'' என்றாள்.

''ஏன்?'' தாயார் திடுக்குற்றுக் கேட்டாள்.

''நீ சொன்னது ரொம்ப சரி, அம்மா! இந்த மாதிரி வேலை பார்த்தால் மக்களின் பார்வையில் நான் மிக மிகத் தாழ்ந்து தான் போய்விடுவேன்!''

''மெய்யாகவா?'' ரோஸியின் மங்கிய முகம் மலர்ந்தது; ஒளியிழந்த விழிகள் பளிச்சென்று ஒளி வீசின.

''ஆமாம், ஆமாம்!'' என்று தலையசைத்தவள், சிறிது தயங்கித் தொடர்ந்தாள்: ''நான் உன் பழைய எசமானி சசிபாலாவிடம் வேலைக்குப் போகத் தயாரா யிருக்கிறேன்!''

''நீ நன்றாக யோசித்துத்தானே இந்த முடிவுக்கு வந்திருக்கிறாய்?''

''ஆமாம், அம்மா! நான் நன்றாக யோசித்துப் பார்த்துவிட்டேன். சிம்லாவை விட்டு வெளியேறி எனக்கு முன்பின் தெரியாதவர்கள் இருக்கும் ஊரில் போய் வாழ்ந்தால், தான் நான் மரியாதையோடும், மானத்தோடும் வாழ முடியும்'' என்றாள் ரூபா.

இந்த முடிவால் அவளுக்குத் தன் உள்ளம் இலேசானாற்போல் இருந்தது. 'அம்மாவை விட்டுப் பிரிந்திருக்க வேண்

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்





குழந்தை வளர்ப்புக்குப் புத்தகம் எழுதி உலகப் புகழ்பெற்ற டாக்டர் பெஞ்சமின் ஸ்பாக்கிற்கு மனைவியை வளர்க்கத் தெரியவில்லை. 48 வருடத் திருமண வாழ்வுக்குப் பிறகு இந்த 72 வயது டாக்டரின் 69 வயது மனைவி விவாக ரத்து செய்து கொள்ளப் போகிறாளாம்.

— நியூஸ்வீக் - பாபு

டுமே. அதுவும் அவள் நோய்வாய்ப்பட்டிருக்கும் இந்த நிலையில்!' என்ற வருத்தம் அவளை வாட்டினாலும் இன்னொருபுறம் அநூப்பின் வாழ்க்கையிலிருந்து விலகியிருக்க இதை விட்டால் வேறு வழியில்லை என்றும் தோன்றியது. எனவே, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் சிம்லாவை விட்டுப் போய்விட வேண்டும் என்று நினைத்தாள். கடந்த காலத்தை மறந்து வருங்காலத்தை நினைந்து வாழ விரும்பினாள். அவள் தாயாரை இந்த வயதில் இந்த நிலையில் விட்டுப் போகக்கூட அவள் தயார். ஆனால் சமூகத்தின் இட்டுக்கதைகளையும் வசவுகளையும் கேட்டுக் கொண்டு தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட காதலுக்காக அவள் வாழ விரும்பவில்லை.

ரூபாவின் ஊகம் சரியாகவே இருந்தது. மத்தியானம் முதல் மாலை வரையில் அநூப் மால் ரோட்டில் அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தான். ஆனால் ரூபா போகவில்லை. எனவே, அநூப்பின் இதயம் வெகுவாகப் புண்பட்டுப் போயிற்று. ரூபாவின் மேல் அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. அதனால் அவன் அவளைப் பார்க்க மீண்டும் ஆஸ்பத்திரிக்குப் போகவில்லை. அங்கு சென்று அவளுக்கெதிரே சின்னவனாகிக் 'கூனிக் குறுகி நிற்க அவன் விரும்பவில்லை. அது தன்மானப் பிரச்னையாயிற்றே! விட்டுக்கொடுக்க மனம் வருமா? எனவே உடல் சோர்ந்து உள்ளம் சோர்ந்து வீடு திரும்பினான். அவனை எதிர்பார்த்துப் பிரபு காத்திருந்தான். அன்றைக்கென்னவோ, மற்ற நாட்களை விட முன்னதாகவே பிரபு வீட்டுக்குத் திரும்பியிருந்தான். அநூப் காலணியைக் கழற்றிவிட்டு அவன் அருகில் போய் அமர்ந்து கொண்டான். மேஜையிலிருந்த சிகரெட் கேஸைத் திறந்து ஒரு சிகரெட்டை எடுத்து உதடுகளால் கடித்துப் பற்றவைத்துக் கொண்டு புகையை ஊதினான்.

''இன்றைக்கு என்னவோ சோர்ந்து போயிருக்கிறாயே! என்ன விஷயம்?'' என்று கேட்டான் பிரபு.

''யார் சொன்னது? சோர்ந்து போயிருக்கிறேனா? அப்படியெல்லாம் இல்லையே!'' என்று தன்னைக் காட்டிக் கொள்ள விரும்பாமல் அநூப் கூறினான்.

''நீ சோர்வுறும் நேரங்களில்தான் சிகரெட் குடிப்பது வழக்கம் என்பது எனக்குத் தெரியாதா?'' என்று கேட்டுவிட்டுப் பிரபு அவனைக் கூர்ந்து நோக்கினான்.

''அவள் வரவில்லை!'' அநூப்பினால் தன் உணர்வை மறைக்க முடியவில்லை. தன் சோர்வின் காரணத்தைத் தன்னை அறியாமலே வெளியிட்டுவிட்டான்.

''அவள் வரமாட்டாள் என்று எனக்குத் தெரியும்.''

''எப்படி?''

''இந்தக் காதலுக்கு ஒரு சாபக்கேடு. இதில் எப்பொழுதுமே சந்திப்புக்குப்பின் பிரிவு உண்டு. கூடலுக்குப் பின் ஊடலுண்டு.''

''நான் இக்கருத்தை ஏற்கத் தயாராக இல்லை.''

''நீ மட்டுமென்ன? காதலிப்பவர்கள் எல்லோருமே இப்படித்தான் ஒரு பிரமையில் உழலுகிறார்கள்!''

''பிரபு! நீ என்ன சொல்கிறாய்?'' அநூப் தடுமாறிப் போனான். தன் கைகளை மூடி மூடித் திறந்தவாறே, ''அவளுக்கு என்ன சிரமமோ? அவள் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை'' என்றான்.

''அம்மாவின் உடம்புக்கும் உங்கள் காதலுக்கும் என்ன சம்பந்தம்? வர முடியாத இக்கட்டான நிலையென்றால் உனக்குத் தகவல் அனுப்பியிருக்கலாம் இல்லையா?''

''அனுப்ப முடியாமலும் போகலாம் இல்லையா? சிரமப்படுகிற குடும்பம். அம்மாவின் வைத்தியத்துக்குப் பணம் தேவைப்படுகிறது. அதனால் அவள் வேலை பார்க்கலாமோ என்று நினைக்கிறாள்!''

''ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் தலைக்கும் காலுக்கும் முடி போட்டுப் பார்க்கிறாயே! என்னைக் கேட்டால் அவள் வேலை பார்ப்பது என்பது ஒரு சாக்காக இருக்குமோ என்று தோன்றுகிறது.''

''அப்படிச் சாக்குச் சொல்ல வேண்டிய அவசியம்?''

''அவளுடைய நல்ல மனமும் மரபும்.''

''இப்படி உன்னிடம் யார் சொன்னார்கள்?''

''உன் அக்காள்!''

''அவள் என்ன சொன்னாள் உன்னிடம்?'' மிச்சமிருந்த சிகரெட் துண்டைச் சாம்பலில் தேய்த்தவாறு கேட்டான் அநூப்.

''அநூப் — ரூபாவின் திருமணம் என் வாழ்க்கையின் பெரும் பிரச்னையாகிவிட்டிருக்கிறது என்றாள்.''

''ஆனால் எங்கள் திருமணத்தை நிறைவேற்றி வைப்பதாக அவள் எனக்கு வாக்கு அளித்திருக்கிறாளே!''

''இருந்தாலும் அவள் பயப்படுகிறாள். மத வேறுபாடு, சமூக மாறுபாடு — பற்றாக்குறைக்கு ரூபாவின் தாயாரின் மீது படிந்திருக்கும் மாசு — நான் யாரைச் சொல்கிறேன், தெரிகிறதா? ஞான்! — எல்லாம் சேர்ந்து கொண்டு அவளைத் தயங்க வைக்கின்றன. ரூபாவிடமே அவள் தன் சிக்கல்களையும் சிரமங்களையும் எடுத்துச் சொல்லியிருக்கலாமோ என்று எண்ணுகிறேன்.''

''ஆனால் ரூபாவுக்கும் ஞானுக்கும் ஓர் உறவும் இல்லையே! அவன் அவளுக்கு மாற்றாந்தகப்பன்தானே?''

லெனின்கிராட் நகரத்திலுள்ள ஒரு விஞ்ஞானக் கழகம் 'ஒரு பால் பாயிண்ட் பேனாவால் வைக்கப்படும் ஒரு புள்ளியின் கனம் எவ்வளவு?' என்பதைக் கண்டுபிடித்து விட்டது! (.00001158 கிராம்!)



ஆதாரம்: ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்'' தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

''என்றாலும் அவள் அம்மாவுக்குக் கணவன்தானே?'' என்று கேட்ட பிரபு தன் நண்பனின் உணர்வுகளை நாடி பிடித்துப் பார்த்தான்.

ஒரு நிமிஷம் ஒன்றும் தோன்றாமல் திகைத்த அநூப், ''பிரபு!'' என்று அழைத்தான்.

''என்ன?''

''அக்கா ஒரு நாளும் சம்மதிக்க மாட்டாள் என்று நீ எண்ணுகிறாயா?''

''உன்னிடம் நான் பொய் சொல்லுவேனா? நண்பனிடமே பொய் சொன்னால் ஒருவன் எப்படி நண்பன் ஆவான்?''

''அக்காளே உன்னிடம் இப்படிச் சொன்னாளா?''

''விட்டுச் சொல்லவில்லை. இருந்தாலும் அவள் பேச்சில் இத்தகைய கருத்து தொனித்தது. என்னிடம் அப்படிப் பேசக் காரணம், நான் உன் நண்பன் என்பதை அவள் அறிந்திருந்ததுதான் என்று நினைக்கிறேன்!''

''இப்பொழுது நான் என்ன செய்யலாம், சொல்லு!''

''அக்காள் பேச்சைக் கேளு. அவள் ஒருத்திக்கு மேல் ஒருத்தி நல்ல பெண்ணாகப் பார்த்துத் தருவாள். அவள்தான் பெரும் புகழ் படைத்தவளாயிற்றே!'' என்றான் பிரபு.

''பிரபு!'' என்று உரக்கக் கூவிய அநூப் சள்ளென்று எரிந்து விழுந்தான். ''உனக்கு என்னைக் கேலி செய்ய இப்பொழுதுதான் சமயம் கிடைத்ததா?''

''நான் எதற்காக உன்னைக் கேலி செய்கிறேன்? உலகத்து வழக்கம் இப்படி. வேறு வழியில்லாமற் போனால் மனிதன் தானாகவே தணிந்து போகிறான். அல்லது வளைந்து கொடுக்கிறான்.''

''ஆனால் நான் அப்படிப்பட்ட ஆள் இல்லை. என் காதலில் குறுக்கிடுகிறவர்கள்தான் தணிந்து போகவேண்டியிருக்கும்.''

''உன் அக்காளாக இருந்தால் கூடவா?''

''ஆமாம் பிரபு! அவள் என் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள விரும்பவில்லை என்றால் நான் மட்டும் அவள் பேச்சுக்களைக் கேட்க வேண்டுமா?''

''சொல்லுவது சுலபம். செய்வது கடினம். எனவே, நன்றாக யோசித்துக்கொள்! உன்னைத் தொழிலில் ஈடுபடுத்தியவளே அவள். புது சம்பாத்தியம் இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறது. அவள் பிடிவாதம் பிடித்தால் உன்னைத் தெருவில் தூக்கியெறிந்து விடுவாள். உன் வியாபாரம் எல்லாம் 'ஃபணால்' ஆகி விடும்!''

''அதற்கெல்லாம் அஞ்சுகிறவன் நான் இல்லை. என் இரண்டு கைகளும் நல்லபடியாக இருந்துவிட்டால், நான் என் கால்களில் நின்றுகொள்வேன்!''

''சபாஷ்!'' பிரபுவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. ''இதுதான் ஆண்பிள்ளை பேசுகிற பேச்சு! இது உனக்கும் சோதனை, உன் காதலுக்கும் சோதனை! கரணம் தப்பினால் மரணம் என்கிறாப்போல, இந்தச் சோதனையில் நீ சிறிது தவறினாலும் உன் காதல் கதை சோகக் கதையாகி விடும்! எனவே, ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தான்.

''இப்பொழுது நான் என்ன செய்யலாம்?''

''தைரியமாகச் செயல்பட வேண்டும்.''

''அப்படியென்றால்...? எனக்கு விளங்கவில்லை.''

''போய், உலகத்துக் கவலைகளையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு உன் காதலியின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள். அப்பொழுதும் அவள் சம்மதிக்கவில்லையென்றால் பலவந்தமாக அவளைக் குண்டுக் கட்டாகத் தூக்கி மோட்டாருக்குள் போட்டுக்கொள். நேரே ரிஜிஸ்திரார் அலுவலகத்துக்குக் கொண்டு போய் இறக்கு. உனது இந்தத் துணிச்சலைப் பார்த்த பின் அவள் உன்னை மணந்துகொள்ள மறுக்க மாட்டாள் என்று நம்புகிறேன்.''

''ரிஜிஸ்திரார் அலுவலகத்துக்கா?''

''ஆமாம், ரிஜிஸ்திரார் அலுவலகத்துக்குத்தான். இந்த மாதிரித் தருணங்களிலே சர்ச்சுகளையோ, கோவில்களையோ உதவிக்கு நாடக் கூடாது. அதில் பல சிக்கல்கள் வந்து சேரும். உன் புரோகிராம்கள் அத்தனையும் பாழாகிப் போகும்!''

பிரபு சொன்னதைக் கேட்ட அநூப் யோசனையில் ஆழ்ந்தான். பிரபு இன்னுமொரு சிகரெட்டைப் பற்றவைத்து அநூப்பிடம் நீட்டினான். அவன் அதை வேண்டாமென்று மறுத்துவிட்டுத் திட்டம் தீட்டுவதில் மூழ்கினான். திடீரென்று அவன் விழிகளில் ஒரு பட்டொளி வீசி மின்னியது. உடல் முழுவதும் ஒரு புல்லரிப்பு இழையோடிச் சிலிர்க்கவைத்தது. அவன் பிரபுவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''நண்பா! உன் அருமையான யோசனைக்கு மிக்க நன்றி!'' என்றான்.

''இப்பொழுது என்ன செய்வதாக இருக்கிறாய்?''

''திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். எங்கள் காதலின் முடிவிடம் கல்யாணம்தான்!'' என்று கூறிய அநூப் சுறுசுறுப்போடு எழுந்து நின்றான்.

''அது சரி, இப்பொழுது உன் திட்டம் என்ன?''

''நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை. அவள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சர்விஸுக்குச் சர்ச்சுக்குப் போவதுண்டு. அவளிடம் என் எண்ணத்தை வெளியிடுவேன். அவள் என்ன கேள்வி கேட்டாலும், எத்தனை கேள்விகள் கேட்டாலும் என் பதில் ஒன்றாகத்தான் இருக்கும். 'கல்யாணம், கல்யாணம்' என்று கீறல் விழுந்த கிராமபோனாகத் திருப்பித் திருப்பிச் சொல்லுவேன்!''

உங்கள்
அன்பின் பிரதிபலிப்பு



இந்து ரோல் பிலிமில்

உங்கள் காமிரா எந்தத் தயாரிப்பாக இருந்தாலும், நீங்கள் எடுக்கப் போவது எவ்வித புகைப்படமாக இருந்தாலும், இந்து ரோல் பிலிமையும், புரோமைட் பேப்பரையுமே பயன்படுத்துங்கள்.

காரணம், ஒரு நல்ல ரோல் பிலிமும், புரோமைட் பேப்பரும் அளிக்க வேண்டிய எல்லாப் பயன்களையும் இந்து அளிக்கிறது. தெளிவான மாறுபாடு, சிறப்பான ஒளிப்பதிவு, ஒரே சீரான தரம், துல்லியமான கிரெயின்கள் இவற்றை அளிப்பது இந்து. அதுமட்டுமல்ல, இந்து மிக எளிதில் கிடைக்கிறது. எனவே உங்கள் அன்பின் பிரதிபலிப்பைக்கான இந்துவை நாடுங்கள்.

இத்துறையில் தன்னிறைவு பெற, தன்னிகரற்ற சேவையில் இந்து அளிப்பவை:

இந்து ரோல் பிலிம். இந்து போட்டோ கிராபிக் பேப்பர்கள். இந்து சினி பாஸிடிவ். இந்து சினி சவுண்ட் நெகடிவ். இந்து எக்ஸ்ரே பிலிம். இந்து மீடியம் கான்ட்ராஸ்ட் கிராபிக் ஆர்ட்ஸ் பிலிம். இந்து டயாபாஸிடிவ். இந்து டாகுமெண்ட் காபியிங் பேப்பர்.

INDU®


இந்து என்றால் பிலிம்·
போட்டோ· சினி·எக்ஸ்ரே·

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்
மான்யுபாக்சரிங் கோ. லிமிடெட்,
(இந்திய அரசின் ஒரு நிறுவனம்)
இந்துநகர், உதகமண்டலம் 643 005

INDU



SAA/HPF/2003



ஒரு இளம் விமானியிடம் விமானத் தளபதி கேட்டார்:
''உன் விருப்பம் என்ன?''
''விமானத் தளபதி ஆவது!''
''உனக்குப் பைத்தியமா பிடிச்சிருக்கு!'' என்றார் விமானத் தளபதி.
''அதற்கு அந்தத் தகுதியும் வேணுமா?'' என்றான் இவன்!

''அப்படியானால் நானும் தயார்!''

''எதற்கு?''

''உன் கல்யாணத்துக்குச் சாட்சி போடுவதற்கு!'' பிரபு அழுத்தமாகக் கூறவே, அநூப்புக்குச் சிரிப்பு வந்து விட்டது. கலகலவென்று நகைத்துக் கொண்டே தன் அறையை நோக்கி நடந்தான்.

மறு நாள் காலை சரியான நேரத்துக்குச் சர்ச்சுக்கு எதிரில் இருந்த பார்க்கில் போய் உட்கார்ந்து கொண்டான் அநூப். அவன் கண்கள் மாதா கோவிலையே நோக்கிக்கொண்டிருந்தன, ரூபா தென்படுவாளோ என்ற நைப்பாசையில்! ஆனால் ரூபாவை எங்கும் காணவில்லை. எனவே, போகும் கும்பலில், ரூபாவுடன் படிக்கும் பெண்களில் யாராவது தனக்குத் தெரிந்த முகமாய்ப் போகிறார்களா என்று பார்த்தான்.

சர்விஸ் ஆரம்பமாகி விட்டது. சர்ச்சின் மணியோசை சிம்லாவின் மலைகளில் மோதி எதிரொலித்தது. போகும்பொழுது அவன் ரூபாவைப் பார்க்கத் தவறியும் இருக்கலாமே! அவள் சர்விஸ் முடிந்து திரும்பிவரும்வரை தங்கியிருந்து பார்த்துவிடுவது என்று முடிவு செய்து கொண்டு அங்கேயே அமர்ந்திருந்தான். எதிர் நோக்கிக் கொண்டிருந்த அந்த நேரத்தில், ரூபாவைக் கண்டு விட்டால், தன் காதலின் உறுதியை எப்படிக் கூறி அவளை நம்ப வைப்பது என்றும் சிந்தித்தான். சொல்லக்கூடிய சொற்களைச் சிந்தித்துச் சிந்தித்து மனத்துள் உருப்போட்டு, உருப்போட்டு ஒத்திகையும் பார்த்துக் கொண்டான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சர்விஸ் முடிந்து மக்கள் கூட்டம் வெளியே வரலாயிற்று. சிறுகச் சிறுகக் குறையவும் செய்தது. சர்ச்சுக்குள்ளிருந்து வெளியே வரும் ஒவ்வொரு பெண்ணின் முகத்தையும் எப்படிக் கூர்ந்து நோக்கினான்? அப்படிப் பார்த்தது அவனுக்கே கூட வெட்கமாக இருந்தது. ஆனால் ரூபாவைத்தான் காணவில்லை. ரூபாவின் கல்லூரியைச் சேர்ந்த சில மாணவிகளும் சிப்பந்திகளும் தென்பட்டார்கள். அவர்களோடும் அவள் வரவில்லை. அந்தக் கும்பலில் சிஸ்டர் தெரெஸாவும் மதர் சுபீரியரும் கூட இருந்தார்கள். அவர்களிடம் ரூபாவைப் பற்றிக் கேட்கலாமா என்று யோசனை ஓடினாலும், கேட்கும் துணிவு அவனுக்கு உண்டாகவில்லை.

அப்போது ஒரு புறமாகப் போய்க்கொண்டிருந்த ரோஸ்லீன் ஒரு மரத்தினடியில் மரத்தோடு மரமாக ஒட்டி நின்ற அநூப்பைத் தற்செயலாகப் பார்த்தாள். பார்த்தவள் அப்படியே சிறிது நேரம் திகைத்து நின்றாள். அநூப்பும் அவளைப் புரிந்துகொண்டு விட்டான். அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் அநூப்புக்குத் துணிச்சல் கொடுத்தது. அவளைக் கையசைத்துத் தன் அருகில் வருமாறு அழைத்தான். ரோஸ்லீன் அவன் அழைப்புக்கு இணங்க அருகில் வந்தாள்.

''ரூபா எங்கே இருக்கிறாள்?'' அவள் அருகில் வந்ததும் அநூப் எவ்வித முன்னுரையும் இன்றித் தன் கேள்வியை வீசினான்.

''அவள் ஹாஸ்டலை விட்டுப்போய்விட்டாளே. அவள் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை.''

''இன்று அவள் சர்ச்சுக்கு வரவில்லையா?''

''ஒவ்வொரு ஞாயிறும் வருவாள். ஆனால் இன்று ஏனோ வரவில்லை!''

''ஏன்?''

''ஆண்டவனுக்குத்தான் தெரியும். ஒருவேளை அவள் அம்மாவுக்கு உடம்பு மோசமாகிவிட்டதோ, என்னவோ?''

அநூப்புக்கு அடுத்த கேள்வியை எப்படிக் கேட்பது என்று தெரியவில்லை. என்ன கேள்வி கேட்பது என்று தெரிந்தால் அல்லவோ கேட்பதற்கு? ரோஸ்லீன் நிராசையால் வாடிய அவனுடைய முகத்தைப் பார்த்தாள். பிறகு சற்றுத் தயங்கி, ''அவள் உங்களைப் பார்க்கவே இல்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லையே!''

''எவ்வளவு நாட்களாக?''

''வெகு நாட்களாய!''

''அப்படியானால் உடனேயே போய் அவளைப் பாருங்கள்!''

''ஏன்?''

''உங்களைப் பார்த்தால் ஒருவேளை அவள் மனத் துயரம் மாறலாம். வாழ்க்கையின் கசப்பு இனிமையாக உருப் பெறலாம்.''

அநூப் பேசாமல் நின்று ரோஸ்லீன் சொன்னதைப் பற்றிச் சிந்திக்கலானான். சிறிது நேரத்துக்கெல்லாம் ரோஸ்லீனிடம் ஏதோ சொல்ல வாயெடுத்துத் தலை நிமிர்ந்தான். ஆனால் அவளைத்தான் அங்கே காணோம். ரூபாவின் கற்பனையில் அவன் மூழ்கியிருந்ததனால், ரோஸ்லீன் எப்பொழுது போனாள் என்பதே அவனுக்குத் தெரியவில்லை.

அநூப் நேரே அங்கிருந்து ஆஸ்பத்திரிக்குச் சென்றான். ரூபா சர்ச்சுக்கு வராமற் போகவே, அவன் மனம் இல்லாத எண்ணமெல்லாம் எண்ணியது. அச்சம் மீதூரவே இதயம் துடியாய்த் துடித்தது. அவன் நேரக்கட்டுப்பாடுகளை மறந்து விடுவிடுவென்று ரோஸியின் அறையை நோக்கி நடந்தான். ஆனால் நர்ஸ் தடுக்கவே நின்றான். உள்ளே போக அநுமதி கேட்டவனுக்கு, நர்ஸ் வாய் திறந்து பேசாமலே, வெளியே தொங்கிக் கொண்டிருந்த அறிவிப்புப் பலகையைச் சுட்டிக் காட்டினாள். 'டோன்ட் டிஸ்டர்ப்' என்று அதில் எழுதியிருந்தது. அவன் உள்ளம் தளர்ந்து விரல்களை மடக்கி நெட்டி முறித்தவாறே நின்றான். (தொடரும்)


காப்பி அடிக்க முடியாதது!
ஜீவனுள்ள ஒரே காபி
நரசுஸ்
"தெர்மலோ" காபி
''தெர்மலோ'' முறை தயாரிப்பு
நரசுஸ் காபியின் தனிச் சிறப்பு.
நற்சுவை மிகுந்தது.
நறுமணம் கொண்டது.
நாளும் புதியது.
நரசுஸ் காபி!
தயாரித்த 24 மணி நேரத்திற்குள் தமிழகத்தில் உள்ள எங்கள் எல்லா கிளைகளின் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.
நரசுஸ் காபி கம்பெனி.
சேலம்-636 007
கிளைகள்:- பாண்டிச்சேரி & தமிழகமெங்கும்.
ADWAVE/NCC 410 TAM

தொல்காப்பியர்

(அவசரம் அவசரமாக வந்த நண்பர் நாகு ஒரு கட்டுரையைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். டிம்பக்டு தமிழ்ச் சங்க மலருக்காக அவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையை அப்படியே தருகிறேன்!)

தொல்காப்பியம் என்ற நூலை இயற்றியதால் இவருக்குத் தொல்காப்பியர் என்ற பெயர் வந்ததா அல்லது தொல்காப்பியர் எழுதியதால் அப்புத்தகத்துக்குத் தொல்காப்பியம் என்ற பெயர் வந்ததா என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

தொல்காப்பியர் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். ஒருசில ஆராய்ச்சியாளர் 'மூவாயிரத்து ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு' என்கிறார்கள். தொல்காப்பியத்தின் இருநூற்று ஆறாவது சூத்திரத்தில் ''அஃறொன் பதுப்பி றப்பான்'' என்ற வரியில் ஒன்பது என்பதை ஒன்பதாகக் கருதி இப்படிக் கூறுகிறார்கள்.

இதுபற்றிச் சரியான தகவலைக் கண்டறிய அவர் பிறந்த கிராமமான பஃறொளியூத்தூருக்குச் சென்று விசாரித்ததில், ''அவரை நாங்கள் பார்த்ததேயில்லை; ஒருகால் இறந்து போயிருக்கலாம்'' என்றார்கள், கிராம மக்கள். ஒரு கிழவர், ''ஆமாம். நானும் அவரைப் பற்றி ஆராய்ச்சி செய்தேன். அவர் சொல்காப்பியம் எழுதியதால்தான் சொல்காப்பியர் என்ற பெயர் வந்தது என்று தெரிகிறது. அக்காலத்தில் 'ச'வை 'த' என்றுதான் எழுதுவார்கள்'' என்றார்.

கரையான் மேடு என்ற இடத்தில் கிடைத்த ஓலைச்சுவடிகளை ஆராய்ந்ததில் 'தொல்காப்பியத்துக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது சொல்காப்பியம். அதை அப்படியே காப்பியடித்து எழுதியதால் இவருக்குக் காப்பியர் என்று பெயர் ஏற்பட்டது' என்ற ஒரு குறிப்புக் காணப்படுகிறது.



தொல்லாண்டிரான் என்பவரின் மகனாகப் பிறந்த இவர் இயல்பாகவே 'தொல்'லையும் அடிக்கடி 'காப்பி' குடிக்கும் பழக்கம் உடையவராக இருந்ததால் 'காப்பி'யையும் சேர்த்துத் தொல்காப்பியர் என்ற பெயர் உண்டாகப் பேராசிரியர் சாலேகவாம் கூறியிருப்பதை* கண்டு நோக்குவது தவிர்க்க முடியாதது.

* 'காப்பிக்கொட்டைப் பண்ணைகள்' - பேராசிரியர் சாலேகவரம் - பக். 14.



தொல்காப்பியர் என்ன தொழில் செய்தார், அல்லது எந்த நிறுவனத்தில் வேலையில் இருந்தார் என்பது போன்ற விவரங்கள் தெரியவில்லை. ஒரே ஒரு புத்தகம் எழுதிவிட்டு அவரால் வயிறு வளர்த்திருக்க முடியாது என்பது திண்ணம்.

ஒருகால் அவர் நூல் வியாபாரம் செய்திருப்பாரோ என்று தோன்றுகிறது. 'தொல்காப்பியரின் நூல்' என்று பலர் கூறுவதிலிருந்து இதனை உணரலாம். அவரது தயாரிப்புகள் ஏ. சாகவும் நிறைய முறுக்கு உடையவையாகவும், 120ம் நம்பர் நூலாகவும் இருக்கலாம் என்றும் தோன்றுகிறது.

தொல்காப்பியர் திருமணம் செய்துகொண்டாரா என்பது தெரியாவிட்டாலும் அவருக்குக் குழந்தைகள் இல்லை என்பது நிச்சயம். 'தமிழ் இலக்கணத்தின் தந்தை' என்று அவரைக் குறிப்பிடுவதிலிருந்து இது உறுதியாகிறது. பிள்ளைகள் இருந்திருந்தால், 'ராமனின் அப்பா', 'குப்பனின் அப்பா' என்றுதானே குறிப்பிடுவார்கள்?

தொல்காப்பியர் முதன் முதலில் இந்நூலை சம்ஸ்கிருதத்தில் எழுதியிருக்கக் கூடும். பின்னர் தமிழில் மொழிபெயர்த்திருக்கலாம். காரணம், அந்தக் காலத்தில் சம்ஸ்கிருதம் படிக்காதவர்கள் மிகக் குறைவு. மேலும் தமிழ் படிப்பது அநாகரிகம் என்றும் சிலர் கருதினார்கள்.

தொல்காப்பியர் தம் புத்தகத்தைப் பிரசுரிக்க முயன்று பலனளிக்கவில்லை என்பது வெளிப்படை. கையெழுத்துப் பிரதியாகவே இருந்து வந்த இந்த நூல் சில வருஷங்களுக்கு முன்பு அச்சிடப்பட்டுப் பிரசுரமாயிற்று. (ராயல்டி தொகை கேட்டு யாரும் வரமாட்டார்கள் என்று நிச்சயம் ஆன பிறகுதான் புத்தகப் பிரசுரகர்த்தர் அதை வெளியிட்டார்!)

தொல்காப்பியர் ஓரளவு சோம்பேறியாகவும் இருந்திருக்கலாம் என்று ஐயம் ஏற்படுகிறது. ஆயுட் காலத்தில் ஒரே ஒரு புத்தகம் தானே எழுதினார் என்பதைப் பார்க்கும் போது....

(மேலே படிக்க முடியாமல் என் தலை சுற்றியது.)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

தேவைகளை சொந்தமாகப் பூர்த்தி செய்வதை நாங்கள் வலியுறுத்துவது எஃகுத் தயாரிப்புத் துறையுடன் மட்டும் நிற்கவில்லை.

ஆதித்யபூரில் உள்ள எங்களது மாபெரும் பராமரிப்புத் தொழிற் கூடம் ஒன்றிலேயே நாங்கள் சிக்கலான மிஷின்களையும் துணை பாகங்களையும் சொந்தமாக உருவாக்குவதன் மூலம் இவற்றின் இறக்குமதியைத் தடுத்து ஆண்டுதோறும் தேசத்திற்காகப் பெருமதிப்புள்ள அந்நியச் செலாவணியை மீதப்படுத்துகிறோம்

ஆண்டுகள் பல உருண்டோடினும், நாங்கள் இளமை குன்றாது திறம்படச் செயல்படுவதற்கு இது ஓர் சீரிய எடுத்துக்காட்டாகும்

தேவைகளை சொந்தமாகப் பூர்த்தி செய்யும் துறையில் நாங்கள் வளருகிறோம்.

எஃகினை யொத்த உறுதியான குறிக்கோள்



டாடா ஸ்டீல்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka